ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தியும் முன்பள்ளிக் கல்வியும்

# கல்வி தொடர்பான கோட்பாடுகளும் அதன் பின்னணிகளும்


பேராசிரியர் லால் பெரேரா

பேராசிரியர் ஏ.ஏ.நவரத்ன

ஜீ.எம்.பீ. பெரேரா

ஆதர் வெதமுல்ல



ISBN 978-955-1214-10-4

**வெளியீடு**

பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்

கிழக்கு மாகாண சபை

**அனுசரணை**

பிளான் ஸ்ரீ லங்கா

**அச்சுப்பதிப்பு**

டிஸைன் வேவ்ஸ்

**நூல் வடிவமைப்பு**

மதிப்பீடு மற்றும் கல்வி ஆய்வு மத்திய நிலையம்

27/A1, அமரசேகர மாவத்தை, கொழும்பு 05.

**சித்திர வடிவமைப்பு**

மூலஓவியம் : ரவீந்திர தேனுவர

மீளுருவாக்கம் : சுசிமன் நிர்மலவாசன்



Copyright © Plan Sri Lanka


Plan

# கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் செய்தி

வரலாற்று ரீதியாக இலங்கைச் சிறார்களுக்கு கல்வி வழங்குவதற்கு மத வழிபாட்டுத் தலங்கள் பெரும் பங்காற்றி வந்தன. ஆனால், அக்கல்வி முறையாக வழங்கப்படவில்லை.

சிறார்களின் கல்வி அபிவிருத்திக்குத் தேவையான வசதி வாய்ப்புகளும், சூழலும் ஆளுமை விருத்திக்கு இன்றியமையாத விடயங்களாகும். வசதிகளும் வாய்ப்புகளும், சூழலுக்குச் சாதகமான முறையில் வழங்கப்படின், சாதகமான முறையில் ஆளுமை விருத்தியடையும். இல்லாவிட்டால் இந்நிலை பாதகமாகவே அமையும். எனவே, சிறார்களின் ஆரம்பகாலம் முதலே கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும், வளங்களையும் போதுமான அளவு வழங்குவது இன்றியமையாததாகும். இவ்வாறு ஆரம்ப கல்வி அபிவிருத்திக்கு கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் சாதகமான ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்க முடியும்.

அனேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறுவர்களுக்கான கல்வியை வழங்குவதில் மிகவும் உயர்தரம் வாய்ந்த ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவது யாவரும் அறிந்ததே. அது போன்றே எமது நாட்டின் சிறார்களும் தரமான ஆசிரியர்களின் மூலம் கல்வி கற்பிப்பதற்கு எடுத்துவரும் முயற்சிக்கு இச்செயற்பாடு உறுதுணையாக இருக்கும். இவ்வாறாக சிறார்களின் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்த முறைசார் ஒழுங்கினை ஏற்படுத்த தயாரிக்கப்பட்ட ஆசிரியர் கைந்நூல், மற்றும் பாடவிதான கைந்நூல், பாலர்பாடசாலை ஆசிரியர்களின் இயல் தகைமையை விருத்தி செய்வதன் மூலமும், அவர்களை பாலர் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு கூடுதலாக ஈடுபடுத்துவதன் மூலமும் நாட்டில் நிலைத்து நிற்கக்கூடிய மனித வளத்தை உருவாக்கலாம்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மஹிந்த சிந்தனை மூலம் நாட்டை நேசிக்கும் ஒழுக்க சீலமுடைய சிறுவர் பரம்பரையினை உருவாக்கும் செயல்திட்டத்தின்படி, மூன்று வயதுக்கும் ஐந்து வயதுக்குமிடையில் அவர்களின் கிரகிக்கும் ஆற்றல் கூடுதலாக இருப்பதால், அவர்களுக்கான முறைசார் கல்வியும், ஒழுக்கமும் வழங்கப்படுதல் இன்றியமையாததாகும். நெகிழ்வுடைய சிறார் அபிவிருத்தி மூலமே சிறந்த மனிதர்களை உருவாக்க முடியும்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கைந்நூல்களை பிரசுரிப்பதன் மூலம் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்கு தீர்வு வழங்கி, முறையான சிறார் கல்வி அபிவிருத்தியினை வழங்குவதற்கு முன்வந்த முதலமைச்சர் செயலகம் மற்றும் பாலர் பாடசாலைக் கல்விப் பணியகப் பிரிவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மொஹான் விஜேவிக்ரம**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்

# கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் செய்தி

கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு குறுகிய காலத்தில் பாலர் பாடசாலையின் முக்கியத்துவம் பற்றி விசேட கவனம் செலுத்தியதையிட்டு நான் மகிழ்சியடைகின்றேன். அதுபோலவே, கிழக்கு மாகாண பாலர்பாடசாலைப் பணியகத்தை உருவாக்கி அதனை எனது அமைச்சின் கீழ் இயங்குவதற்கு அனுமதியளித்த அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் கௌரவ ஆளுநர் அவர்களுக்கும், எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனோநிலை மாற்றத்தின் பின்பு, சிறார்களின் கல்வி தொடர்பில் இன்று அதிக அக்கறை காட்டப்பட்டு வருகின்றது.

ஒரு நாட்டின் சிறந்த எதிர்காலமானது, வளம் மிக்க கல்வியிலும், இளஞ் சிறார்களின் சிறப்பான வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது எனலாம்.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் எனது அமைச்சின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை கல்விப்பணியகம் மூலம் வெளியிடப்படும் கற்பித்தல் மற்றும் செயற்பாடுகள் பற்றிய கைந்நூ ல் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கையேடு என்பனவற்றின் மூலம் இளஞ் சிறார்களின் கல்வியில் ஒரு மாற்றத்தையும் மறு மலர்ச்சியையும் ஏற்படுத்த முடியுமென நான் நினைக்கின்றேன்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் காண விளையும் வளம் மிக்க நாடு மற்றும் சிறந்த ஆரோக்கியமான சமுதாயம் என்பனவற்றுக்கு, சிறந்த ஆரம்பக் கல்வி மூலம் பலமான அத்திவாரத்தை இடமுடியும் என நான் நம்புகின்றேன்.

அந்த வகையில் இந்தக் கைந்நூலின் வெளியீட்டுக்கு துணைபுரிந்த பாலர் பாடசாலைப் பணியகம், மற்றும் எனது அமைச்சின் அதிகாரிகள், நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், சிறுவர்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு எனது பிரார்த்தனைகள்.

**ஜனாப். எம். நஜீப் அப்துல் மஜீத்**
முதலமைச்சரும்
கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும்

# கிழக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சர் கௌரவ விமலவீர திஸாநாயக்க அவர்களின் செய்தி

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாவர். அந்தத் தலைவர்களை உருவாக்கும் பாலர் பாடசாலைக் கல்வி சிறந்ததொரு அத்திவாரமிடப்பட்டுக் கட்டியெழுப்பப்பட வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சி பற்றி மனோ தத்துவவியலாளர்களினால் ஆராய்ச்சி செய்யப்பட்டுப் பெறப்பட்ட விடயங்களும், பிள்ளைப்பருவக் கல்வி தொடர்பாக ஆராய்ச்சியாளர்களினால் முன்வைக்கப்பட்ட பாடத்திட்டங்களும், சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படும் முறைகளை இதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் தேசிய ஒருமைப்பாட்டையும் சிறந்த பழக்க வழக்கங்களையும் கருத்திற்கொண்டு, கலாசார நிகழ்வு, விழுமியங்களுடன் ஒன்றிணைந்து சிறார்கள் மனத்தில் இளமையிலேயே இவை விதைக்கப்பட வேண்டும். அந்த வழியில் சென்று எமது மாகாண சபையில், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்காக ஆசிரியர் கைந்நூலை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்ற கிழக்கு மாகாணசபைக்கும் அதேபோன்று இதற்காக நிதியுதவி வழங்கும் Plan SriLanka நிறுவனத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2013 ஆம் ஆண்டிலிருந்து, இந்தப் புதிய பாடத்திட்டத்தின் ஊடாக நான் எதிர்பார்க்கும் அபிவிருத்தியினை வெற்றிகரமாக நடத்துவதற்காக, அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்கும், இதற்கு வழிகாட்டும் ஏனையவர்களுக்கும் எனது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**விமலவீர திசாநாயக்க**
கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், காணி,
காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சர்,
கிழக்கு மாகாணம்

# கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செய்தி

சமப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாட்டில் மனித வளம் என்பது முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒரு நாட்டின் மனிதவள முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் பொழுது அதன் அடித்தளமாய் அமைவது சிறார்களின் அபிவிருத்தியாகும். இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்டுள்ள மஹிந்த சிந்தனை கொள்கையில் மனித வளமானது, முக்கிய இடம் வகிக்கின்றது. அதிலும் விசேடமாக அறிவுடைய சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்கு பாலர் பாடசாலையின் முறைசார் செயற்பாடு இன்றியமையாத விடயமாகும்.

இங்கு சிறார்களை அடையாளம் காண்பதற்கும், சிறார்களுக்குச் சமீபமாகவுள்ள சூழலை அவர்கள் புரிந்து கொள்வதற்கும், பாலர் பாடசாலைக் கட்டமைப்பும் ஆசிரியர்களின் பொறுப்புக்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த நோக்கத்தை அடைவதற்காக கிழக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைக் கல்விப்பணியகமானது, அதன் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கு அவர்களால் உருவாக்கப்பட்ட இக் கைந்நூல்களின் மூலம் பாலர் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணக்கூடியதாக அமையும். அனுபவமுள்ள மீளாய்வுக் குழுவினரால் உருவாக்கப்பட்டுள்ள இக் கைந்நூல்களைப் பாவிப்பதன் மூலம் கிழக்கு மாகாண பாலர் பாடசாலையினை வலுவூட்ட முடியும்.

இந்த முயற்சியை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு உதவி வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெவித்துக்கொள்கின்றேன்.

**டீ.எம்.எஸ். அபேயகுணவர்தன**
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்

# கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளரின் செய்தி

கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் முன்கல்வி கல்விப் பணியகத்தின் செயற்பாடுகள் மிகக் குறுகிய காலத்தில் வேகமாக முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ்வடிப்படையில் கிழக்கு மாகாணம் முழுவதும் இயங்கி வந்த அனைத்து முன்பள்ளிகளினதும் தகவல்கள் திரட்டப்பட்டு, அத்தகவல்கள் மூலம் எதிர்காலத் திட்டமிடலை எமது முன்பள்ளிப் பணியகம் மிக நேர்த்தியாக செய்து வருகின்றது.

இதன் ஒரு செயற்பாடாக முன்பள்ளி ஆசிரியர்களின் கற்கைச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கான ஆசிரியர் வழிகாட்டி நூலையும், அதுபோலவே மாணவர்களின் கற்கை நெறியினை ஒழுங்குபடுத்துவதற்கு மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் செயற்பாடுகள் பற்றிய கைந்நூல் என்பனவற்றையும் தற்போது வெளியிடுவது, கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விக்கு உரமூட்டி வளப்படுத்தும் ஒரு முன்மாதிரியான செயற்பாடென்று குறிப்பிட முடியும்.

இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் கல்வி பயிலும் சிறார்களின் அறிவு, திறன், உளப்பாங்கு என்பனவற்றில் மாற்றத்தையும் அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கான அத்திவாரத்தினையும் இடமுடியும். எதிர்காலத்தில் இச்செயற்பாட்டின் வெற்றிகள் நிதர்சனமாகும்போது, கிழக்கு மாகாணம் சிறப்பான மனிதவளத்தையுடைய பிரதேசமாக மிளிரும் எனத் திடமாக நம்ப முடியும்.

இச்செயற்பாட்டைச் செய்வதற்கு, அனுமதியையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், ஒத்துழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**யூ.எல்.ஏ. அஸீஸ்**
செயலாளர்
முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி அமைச்சு
கிழக்கு மாகாணம்

# கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் செய்தி

ஒரு நாட்டின் நல்லொழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்கிக் கொடுப்பதில் பாடசாலைகளின் கல்வித் தரமும் கலாசார ஒழுக்க விழுமியங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில், ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலைக் கல்விக்கான மாணவர்களை வழங்கும் நிறுவனமாக முன்பள்ளிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. முன்பள்ளிகளின் கட்டமைப்பு, முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தரம், முன்பள்ளி ஆசிரியர்களின் குடும்பப் பின்னணி போன்றன பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட சின்னஞ்சிறு பிஞ்சுகளை திறமைமிக்க முன்பள்ளி ஆசிரியரினால் மட்டுமே ஆளுமை மிக்க சிறுவனாக உருவாக்கித் தர முடியும் எனக் குழந்தைநிலை கல்வியியளார்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தரம், அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள், ஏனைய மேலதிக கல்வித் தகைமை போன்றன நல்லதொரு முன்பள்ளி ஆசிரியரை உருவாக்கித்தரும். இவ்வாறான முன்பள்ளி ஆசிரியர்களினால் சிறுவர்களுக்கு வழங்கப்படக்கூடிய அனுபவக் கல்விக்கு இவ்வழிகாட்டல் கைந்நூல், மேலதிக உசாத்துணை நூல்கள் பிள்ளைகளை வழிநடத்த உதவிபுரிகின்றன. அத்தோடு வயது ரீதியாகச் சமவாய்ப்புகள், சகல முன்பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை இக்கைந்நூல்கள், வழிகாட்டல்கள் போன்றன பாரிய பங்களிப்புச் செய்வதோடு, முன்பள்ளிப் பாடசாலைகளையும், ஆசிரியருடைய நாளாந்த, வாராந்த நடவடிக்கைகளையும் ஒழுங்காக மேற்பார்வை செய்வதற்கான குழுவினருக்கு சாதகமாகவும் இலகுவாகவும் அமைகின்றது.

பல்வேறு உலக நாடுகளில் முன்பள்ளிக் கல்வித்துறை சிகரத்தை எட்டியுள்ள நிலையில், வறுமை, இயற்கையழிவுகள், ஆசிரியர்களின் குறைந்த கல்வித் தகைமை, பெற்றோர்களின் குறைந்த அறிவு மட்டம் போன்றன இலங்கை போன்ற நாடுகளுக்குச் சவாலாக அமைந்து விடுவதில் வியப்பில்லை. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வித்துறையை முன்னேற்றுவதற்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நல்லதொரு வழிகாட்டல் வழங்குவதற்கும், ஏற்பாடு செய்வது வரவேற்கத் தக்கதாகும், இவ்வாறான முயற்சியினை, கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம் ஒரு சவாலாக எடுத்துத் துணிந்து நடவடிக்கை எடுப்பது பாராட்டுக்குரியது.

இக்கைந்நூலைத் தயாரிப்பது தொடர்பான செயலமர்வில், சிங்கள, தமிழ், முஸ்லிம் கல்வியியலாளர்களையும், துறைபோன கல்விமான்களையும், வளவாளர்களையும் பங்கேற்கச் செய்து, தரமான கைந்நூலாக இது வரவேண்டுமென உழைத்த, பாலர் பாடசாலைக் கல்விப்பணியகத் தலைவர் அவர்களையும், ஏனைய அலுவலர்களையும் நான் பாராட்டுகின்றேன், இறுதியாக இவ்வாறான கைநூல் வெளிவருவதற்கு, நிதி அனுசரணை வழங்கிய Plan Sri Lanka நிறுவனத்தினரை சகல முன்பள்ளி ஆசிரியர்களும் நினைவில் வைத்துக் கொள்வர் எனத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**என்.ஏ.ஏ புஷ்பகுமார**
செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,
காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சு
கிழக்கு மாகாணம்

# கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தின் தவிசாளரிடமிருந்து...

“ஒரு பாடசாலை திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடி விடலாம்.” இந்த வரிகள் மூலம் கல்வியின் பெறுமதியை நாம் உணரலாம். ஒரு நாட்டின் அபிவிருத்தியானது கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. இதனைத் தெளிவாக விளங்கியுள்ள அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் முன் பள்ளிக் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

“முன் பள்ளி என்பது விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் நிலையமாகும்.” சிறுவர்கள் மகிழ்வுடன் இங்கு விளையாட்டில் ஈடுபட்டு கல்வியின் அத்திவாரத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றனர். கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியகத்தின் தலையாய கடமையானது இந்த மாகாணத்திலுள்ள பாலர் பாடசாலைகளின் தரத்தினை உயர்த்துவதாகும்.

இந்தச் செயற்பாட்டில் நாம் அடைய வேண்டிய விடயங்கள் அதிகளவில் உள்ளன. இதற்காக அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியமாகவுள்ளது. கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கௌரவ. சிவனேசத்துரை சந்திரகாந்தன் அவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதியோடு 2010 ஆம் ஆண்டு இப் பணியகத்தை சட்டபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அந்நோக்கத்தை அடைவதற்கான முதலாவது படியே இதுவாகும். அதனுடன் மாகாணத்தில் இயங்கும் பாலர் பாடசாலைகள் அனைத்தும் பதியப்பட்டு வலையமைப்பொன்றிற்குள்ளாக்கப்பட்டு அவைகளின் தேவைகள் இனங்காணப்பட்டன. இத்தேவைகளில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை வலுவூட்டுவதானது முதன்மையான காரணியாகும்.

இதற்காக பொருத்தமான வழிகாட்டற் கைந்நூல் தொகுதிகளை தேடிப் பார்க்கையில் எங்களது கவனத்தை ஈர்த்தது பிளான் ஸ்ரீலங்கா நிறுவனம் சில மாகாணங்களில் நடைமுறையில் பயன்படுத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வழிகாட்டற் கைந்நூல் மிகவும் உயர் தரத்தில் நவீனமாகவும் வரவேற்கத் தக்கதாகவும் இருப்பதனை அடையாளம் கண்டோம். இச்சந்தர்ப்பத்தில் பிளான் ஸ்ரீலங்கா அமைப்பு கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகளுக்காக இக்கைந்நூலை வழங்குவதற்காக அனுசரணையாளராக முன் வந்தமை இந்த மாகாணத்திலுள்ள பிள்ளைகளின் பெரும் பாக்கியமாகும். கிழக்கு பல் கலாசாரத்தை உள்வாங்கியதாக இக்கைந்நூல் வடிவமைக்கப்பட்டு தமிழ் மொழியில் சிறு சிறு திருத்தங்களுடன் பொருத்தமான சித்திரங்களையும் உள்ளடக்குவதற்கு தேவையான முயற்சிகளை செய்தோம்.

இவ்வழிகாட்டற் கைந்நூலுக்கு நல்லாசியை வழங்கி எங்களின் முயற்சிக்கு கைகோர்த்து பாரிய சக்திகளாக இருந்த கிழக்கு மாகாண சபை கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், கௌரவ கல்வி அமைச்சர், பிரதம செயலாளர், முதலமைச்சரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் இக்கைந்நூல் தொகுதியை வெளியிடுவதற்காக தொழிநுட்ப நிதி மற்றும் ஒழுங்கமைப்புப் பணியினை மேற்கொண்ட பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்துக்கும், பாலர் பாடசாலைப் பணியகத்தின் வாரிய, செயலாற்றுப் பணிப்பாளர்களுக்கும், காரியாலய உத்தியோகத்தர்களுக்கும், சித்திர வடிவமைப்புக்கு உதவிய ஓவியருக்கும், திருத்தங்களை மேற்கொண்ட மீளாய்வு குழுவினருக்கும் இதனோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. பொன் செல்வநாயகம்**
தவிசாளர்,
பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்
கிழக்கு மாகாண சபை.

# குறிப்பு

கிழக்கு மாகாணசபை பாலர்பாடசாலை கல்விப் பணியகத்தினால் வெளியிடப்படும் இந்த "ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தியும் முன்பள்ளிக் கல்வியும் - கல்வி தொடர்பான கோட்பாடுகளும் அதன் பின்னணிகளும்" பேராசிரியர் லால் பெரேரா, பேராசிரியர் ஏ.ஏ. நவரத்ன, ஜீ.எம்.பீ.என். பெரேரா, ஆதர் வெதமுல்ல ஆகியோரைக் கொண்ட குழுவினால் ஆக்கப்பெற்று, மத்திய மாகாண சபையினால் வெளியிடப்பெற்ற இலக்கம், ISBN 978-955-1214-10-4 உடைய "முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் கல்வி - பின்னணிக் கோட்பாடுகளும் அபிவிருத்தித் துறைகளும்" எனும் தலைப்பினைக் கொண்ட நூலை மூல நூலாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

மத்திய மாகாணசபையினால் வெளியிடப்பெற்ற மேல் கூறப்பட்ட நூல் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பிள்ளைகளை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். எம்மால் வெளியிடப்படும் இந்த நூல், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகளை இலக்காகக் கொண்டவையாகும். அதற்கேற்ப மூல நூலின் கருத்தியலில் (Concept) மாற்றங்களைச் செய்யாது கிழக்கு மாகாணத்தின் புவியியற், சூழல், பல்லினச் சமுகக் கட்டமைப்பு, பண்பாடு மற்றும் வாழ்வியல் அம்சங்களுக்குப் பொருந்தும் வகையில் மொழிப் பிரயோகங்களிலும் ஓவியங்களிலும் அவசியமான மாற்றங்களை மட்டும் செய்திருக்கின்றோம். மேலும் பொருத்தமான சிறுவர் பாடல்களையும் விடுகதைகளையும் சேர்த்திருக்கிறோம்.

மேற்கூறப்பட்ட மாற்றங்களுடன், இந்நூலை வெளியிடுவதற்கு, தங்கள் மேலான சம்மதத்தை வழங்கிய மூல நூலை ஆக்கியோர் குழுவினருக்கு குறிப்பாக பேராசிரியர் ஏ.ஏ. நவரத்ன அவர்களுக்கும் இந்நூலை வெளியிடுவதற்கு நிதி உட்பட சகல அனுசரணைகளையும் வழங்கிய 'பிளான் ஸ்ரீலங்கா' (Plan Sri Lanka) நிறுவனத்தினருக்கும் எங்கள் மனமுவந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

**மீளாய்வுக்குழு**
27.05.2013

## மீளாய்வுக் குழு

**பேராசிரியர். எம். செல்வராஜா**
பீடாதிபதி
கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**திரு. செ. அருள்மொழி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**ஜனாப். எம்.எல். முகம்மத் லாபிர்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம் - அக்கரைப்பற்று
நிபுணத்துவ ஆலோசகர் -
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

**திரு. ந. நற்குணம்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்
கிழக்கு மாகாண கல்வி அமைச்சு.

**டாக்டர். ஓ.கே. குணநாதன்**
உதவிப் பணிப்பாளர்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மகரகம.

**வைத்திய கலாநிதி கந்தசாமி அருளானந்தம்**
விரிவுரையாளர்,
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**திரு. த. கோபாலகிருஷ்ணன்**
செயலாற்றுப் பணிப்பாளர்
பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**ஜனாப். ஏ.எல். இப்றாஹிம்**
செயலாற்றுப் பணிப்பாளர்
பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்,
அம்பாறை மாவட்டம்.

**திருமதி. டபிள்யூ.எம்.கே. பெர்ணான்டோ**
செயலாற்றுப் பணிப்பாளர்
பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்,
திருகோணமலை மாவட்டம்.

**திருமதி. சீ.வீ.ரீ. குமாரிஹாமி**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

**ஜனாப். கே.எம்.எம். இக்பால்**
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்
கிண்ணியா.

**திரு. சா. அரிதரன்**
உதவி முகாமையாளர்
மாகாண உளசமுக வள நிலையம்
மாகாண கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

**திருமதி. சீ.எஸ். அழகக்கோன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
அம்பாறை.

**திரு. எம். ஜினசேன**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
தெஹியத்தகண்டிய.

**திரு. சுசிமன் நிர்மலவாசன்**
ஆசிரியர்
ஓவிய சிற்பக் கலைஞர்

**திருமதி. ஜே. ஹேமலதா**
முன்பள்ளி ஆசிரிய இணைப்பாளர்
வாழைச்சேனை.

**திருமதி. முனீறா நளீம்**
அதிபர்
ஜாமியுள் ளாபிரீன் பாலர் பாடசாலை
காத்தான்குடி - 06.

**திருமதி பிறின்ஸி விக்ரமசிங்க**
ஆசிரியை - நதி பாலர் பாடசாலை
அம்பாறை.

# முன்னுரை

'பிளான் ஸ்ரீலங்கா' நிறுவனம் மூலம் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் செயற்படுகின்ற முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள இக் கைந்நூல், அனுபவமுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், தேர்ச்சிபெற்ற கல்வியலாளர்களின் ஒத்துழைப்புடனும் வழிகாட்டலின் கீழும் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

அபிவிருத்தி உளவியலாளர்களால் முன்மொழியப்பட்டுள்ள பிரதான ஐந்து துறைகள் ஊடாக இக்கற்றல் செயற்பாடுகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து செயற்பாடுகளும் அபிவிருத்தி உளவியலாளர்களால் இனங்காணப்பட்ட நிகழ்ச்சி ஒழுங்கு முறைக்குப் பொருந்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன. உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தும் பிள்ளைகளின் வயது மட்டத்துக்கும் நன்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

உத்தேச கற்றல் நிகழ்வுகள் அனைத்தையும் அதேபோல் செயற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. அவை தமது வகுப்பு பிள்ளைகளின் வயது மட்டத்துக்கும் பிரதேச வசதிகளுக்கும் ஏற்றவாறு நவீனமயப்படுத்தி, ஆசிரியர்களால் செய்யப்படக்கூடியவையே. அதேபோல் உத்தேச கற்றல் நிகழ்வுகள் அனைத்தையும் ஒரு வருடத்துக்குள் செயற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது விருப்பப்படி வருட எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு. இந்த ஆசிரியர் கைந்நூலைத் தயாரிப்பதில் ஒத்துழைத்த சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலைத் தயாரிப்பற்குத் தேவையான வழிகாட்டல்களையும் நிதி வசதிகளையும் 'பிளான் ஸ்ரீலங்கா' நிறுவனம் வழங்கியது. இலங்கையின் கஷ்டப் பிரதேசங்கள் சிலவற்றின் முன்பள்ளிக் கல்விக்கூடங்களை விருத்தி செய்வதற்காகக் கைகொடுக்கும் இந்நிறுவனத்தின் கண்டிக் கிளையின் முகாமையாளர் திருமதி தர்ஷனீ சமரநாயக்க உட்பட்ட குழுவின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்க ஒரு நடவடிக்கையாகும்.

**ஆக்கியோர் குழு**
15.02.2006

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன் பிள்ளைப்பருவத்தின் நிலை | 1 |
| 2. | முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் கல்வி பற்றிய கோட்பாடு சார் பின்னணி | 11 |
| 3. | முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி | 21 |
| 4. | முன் பிள்ளைப்பருவப் பாடத்திட்டம் | 39 |
| 5. | உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி | 43 |
| 6. | தனி நபர் மற்றும் சமூகத் தொடர்புகள் விருத்தி | 53 |
| 7. | தொடர்பாடல் திறன்கள் விருத்தி | 65 |
| 8. | பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி | 75 |
| 9. | ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி | 87 |
| 10. | பாடசாலை நிறுவனம் | 97 |



# 01

## முன் பிள்ளைப்பருவத்தின் நிலை

## முன் பிள்ளைப்பருவத்தின் நிலை

முன் பிள்ளைப்பருவம் 2 வயது முதல் 6 வயது வரையான காலப்பகுதியையே குறிக்கிறது. முறைசார் பாடசாலையில் சேர்வதற்குரிய காலம் வரும் வரையுள்ள காலப்பகுதியே முன் பிள்ளைப்பருவ வயதாகக் கருதப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் பெற்றுக் கொள்ளும் பின்வரும் திறமைகள் இப்பருவத்துள் நுழையும் பிள்ளைகளிடம் காணக் கிடக்கின்றன.

- நடக்க முடியும்.
- திண்ம உணவுகளை உண்ண முடியும்.
- உடல் ரீதியில் ஓரளவு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.
- மலசலங் கழித்தலில் ஒரு கட்டுப்பாடு இருத்தல்.
- போதுமானளவு சொற்களஞ்சியத்தைக் கட்டியெழுப்பி இருத்தல்.
- சொற்களை அநேகமாகத் திருத்தமாக உச்சரிக்கக் கூடியதாக இருத்தல்.
- சொற்களின் கருத்தை நன்கு விளங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் இருத்தல்.
- எளிய கூற்றுக்களை, கட்டளைகளை விளங்கிக் கொள்ள கூடிய ஆற்றல் இருத்தல்.
- பல சொற்களைப் பயன்படுத்தி எளிய வசனங்களை ஆக்கும் ஆற்றல் இருத்தல்.
- எளிய மட்டத்தில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆற்றல் இருத்தல்.
- சமூக, பௌதீக விடயங்களின் யதார்த்தம் பற்றி ஓரளவு அறிவு இருத்தல்.
- நல்ல, கெட்ட நடத்தைகள் பற்றிய மிகக் குறைந்த அறிவு காணப்படல்.

இவ்வாறான பின்னணியின் கீழ் இவ்வயதுப் பிள்ளைகளின் எதிர்கால அபிவிருத்திச் செயலொழுங்கு தொடர்ச்சியாக நடைபெறும். இப்பருவத்தில் நடைபெறும் விருத்தியானது பின்வரும் முறையில் பல அம்சங்களின் கீழ் ஒன்றிணைந்ததாக நடைபெறும்.

### ● உடல் சார் விருத்தி

- உயரம் : சாதாரணமாக ஒரு வருடத்துக்கு 3 அங்குல விருத்தி காணப்படும். ஆறு வயதாகும் போது ஒரு பிள்ளையின் சாதாரண உயரம் 4 அடி அளவில் காணப்படும்.
- நிறை : சாதாரண போஷாக்குள்ள ஒரு பிள்ளையின் நிறை ஒரு வருடத்திற்கு 3 இறாத்தல் முதல் 5 இறாத்தல் வரை அதிகரிக்கும். சாதாரணமாக ஒரு பெண்பிள்ளை 6 வயதாகும் போது சுமார் 48 இறாத்தல் நிறையும் ஓர் ஆண்பிள்ளை சுமார் 49 இறாத்தல் நிறையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- உடலின் அளவு : குழந்தைப் பண்புகள் இல்லாது போகும். நாடி தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும். கழுத்தின் அளவு நீளும். உதடுகள் ஓரளவு மட்டமான வடிவைக் கொண்டிருக்கும். நெஞ்சுப்பகுதி அகன்று மட்டமான வடிவைக் கொண்டிருக்கும். புயங்கள் அகன்று சதுர வடிவிற்கு மாறும். கைகளும், கால்களும் நீளும். உள்ளங்கை, உள்ளங்கால் விரிவடையும்.
- உடலின் அமைப்பு : உடலின் அமைப்பு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. சிலரின் உடல் மெலிந்ததாகவும், இன்னும் சிலரது உடல்

கொழுத்ததாகவும், வேறு சிலரது உடல் உறுதியானதாகவும் காணப்படும்.

- எலும்புகளும் தசைகளும் : உடலின் பல்வேறு பகுதிகளில் உள்ள எலும்புகள் பல்வேறு மட்டங்களில் வளர்ச்சிக்குட்படுகின்றன. தசைகள் வளர்ச்சி பெற்று, உறுதியாகி, நிறை அதிகரிக்கின்றது.
- பற்கள் : முன்பிள்ளைப் பருவத்தில் முதல் 6 மாதங்களில் குழந்தைப் பருவத்துக்குரிய நான்கு பற்கள் முளைக்க ஆரம்பிக்கும். முன் பிள்ளைப்பருவ இறுதிப் பகுதியில் பாற்பற்களுக்குப் பதிலாக நிலையான பற்கள் முளைக்கத் தொடங்கும். முன் பிள்ளைப்பருவம் முடிவடையும் போது பிள்ளைகளின் வாயில் முன்பகுதியில் நிலையான பற்கள் சில காணப்படுவதோடு புதிய நிலையான பற்கள் முளைக்கவேண்டிய இடைவெளிகளும் காணப்படும்.

## உடல் சார் முறையான பழக்கங்களின் விருத்தி

குழந்தைப்பருவத்தில் ஆரம்பமான சில உடல்சார் முறையான பழக்கங்கள் இப்பருவத்தில் நிலையான தன்மையை அடைகின்றன.

- இப்பருவமாகும் போது குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற விசேட உணவு தயாரிக்கும் தேவை குறைந்து செல்லும்.
- உரிய நேரத்தில் தமது உணவை உட்கொள்ளும் பழக்கத்தைப் படிப்படியாகப் பெறுவர்.
- குழந்தைப் பருவத்திற் போன்று இப்பருவத்தில் உடல்சார் விருத்தி வேகமாக நடைபெறுவதில்லை. அத்தோடு சில உணவுகள் தொடர்பான விருப்பு விருத்தியுற்றுக் காணப்படும்.
- நித்திரை தொடர்பான தனியாள் வேறுபாடுகள் பிள்ளைகளிடம் காணப்படும். இதில் அவர்கள் பகற் காலங்களில் எந்தளவு களைப்புறுகிறார்கள் அல்லது களைப்புறாதிருக்கிறார்கள் என்ற விடயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.
- சாதாரணமாக இவ்வயதில் பிள்ளைகள் சுமார் 12 மணித்தியாலங்கள் நித்திரை கொள்வர். இப்பருவத்தில் பொதுவாக நித்திரை கொள்ளும் காலம் வருடாந்தம் ஒன்றரை மணித்தியாலத்தால் குறைந்து செல்வதைக் காணலாம்.
- மலசலங் கழிப்பதில் ஒரு கட்டுப்பாடான நிலை ஏற்படும். அதேபோன்று இரவு வேளைகளில் தன்னையறியாது சிறுநீர் கழியும் தன்மை படிப்படியாகக் குறைந்து செல்லும்.

## உடல் சார் திறன்களின் விருத்தி தொடர்பான சில பண்புகள்

இப்பருவத்தில் பல்வேறு உடல்சார் திறன்கள் விருத்தியாவதைக் காணமுடியும். இவ்வுடல்சார் திறன்கள் விருத்தியில் 3 விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- எந்தவொரு செயற்பாட்டையும் பழகும் வரை அவற்றை மீளச் செய்வதற்குள்ள விருப்பம்.
- பிள்ளைகள் ஆராய்வுணர்வுள்ளவர்களாவதோடு ஏனையோர் வெட்கப்படுவதையோ, பகிடி பண்ணுவதையோ கணக்கெடுக்காதிருப்பார்கள்.

- உடல் மென்மையானதாகவும், நெகிழ்வானதாகவும் மாறுவதால் எந்தவொரு செயற்பாட்டிலும் இலகுவாக ஈடுபடுவதற்குள்ள ஆற்றல்.

எவ்வாறாயினும் இத்திறன்களைக் கற்பதற்குப் பிள்ளைகளுக்கு ஆற்றல் கிடைப்பது அவர்களின் உடல் முதிர்ச்சியின் தன்மைக்கேற்பவேயாகும். இத்திறன்களை வெற்றிகரமாகக் கற்பதில், அவர்களுக்கு வளர்ந்தோர் வழங்கும் வழிக்காட்டல்களின் வினைத்திறனும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

உடல்சார் திறன்களில் ஆண், பெண் பாலடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அநேகமாக கலாசார ரீதியாக நோக்கும் போது பெண்பிள்ளைகளுக்கென்றே வேறான திறன்களும் ஆண்பிள்ளைகளுக்கென்றே வேறான திறன்களும் என பல்வகைத் தகைமைகள் சில சமுகங்களில் காணக் கிடைக்கின்றன.

இவ்வயதெல்லையினுள் பிள்ளைகள் ஆண், பெண் வேறுபாடின்றி தமது உடைகளை அணிந்து கொள்ள, தலை வாரிக்கொள்ள, தமது செருப்புக்களை அணிந்து கொள்ள, குளிக்க, முகம் கழுவப் பழகுவர். பெற்றோர்கள் எந்நேரமும் உதவாமல் இருந்தால் இச்செயற்பாடுகளில் இவ்வயதைத் தாண்டும் பிள்ளைகள் போதிய தேர்ச்சியைப் பெறுவர்.

இப்பருவத்துள் பிள்ளைகள் ஒரு பந்தை வீசுவதற்கு, அதனைப் பிடிப்பதற்கு, ஒரு கத்தரிக்கோலைப் பயன்படுத்துவதற்கு, களிமண்ணினால் சில சில பொருட்களை வனைவதற்கு, பேனை பென்சிலைப் பிடித்து யாதேனும் எழுதுவதற்கு, வரைவதற்கு, தூரிகையால் நிறந்தீட்டுவதற்கு, தானே சில படங்களை வரைவதற்கு, அவற்றை நிறந்தீட்டுவதற்குப் பழகுவர்.

இரு கால்களும் உறுதியாவதால் அவர்களுக்கு இவ்வயதில் உயரம் பாய்வதற்கு, கோலூன்றிப் பாய்வதற்கு, பாய்ந்து பாய்ந்து செல்வதற்கு, திட்டுக்களில் ஏறுவதற்கு முடியுமாகிறது. முச்சக்கர வண்டி மிதிப்பதற்கும் அவர்களால் முடியும். தேவைப்படின் நீந்துவதற்கும் பழக்க முடியும். அவ்வாறே ஒரு திட்டின் மீது நடப்பதற்கு, ஒரு திட்டின் மீது உடலை சமச்சீராக வைத்திருப்பதற்கு முடியுமாவதோடு ஆடவும் முடியுமாகிறது.

ஆரம்பத்தில் இரு கரங்களையும் பயன்படுத்தி சில விடயங்களைச் செய்யும் நிலை காணப்பட்டாலும் படிப்படியாக ஒரு கையைப் பயன்படுத்தும் பழக்கம் அதிகரிக்கத் தொடங்கும். பிள்ளைகள் செய்யும் அநேக விடயங்களில் பழக்கப்பட்ட கையைப் பிரதானமாகவும், அடுத்த கையை அதற்கு உதவும் வகையிலும் பயன்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது வளர்ந்தோரின் பொறுப்பாகும்.

## ● மொழி விருத்தி

குழந்தைப்பருவத்தில் பயன்படுத்திய மழலைப்பேச்சு மாறி, மொழிப்பிரயோகம் தொடர்பான விருத்தியுற்ற ஓர் உற்சாகம் வெளிக்காட்டப்படும். அதற்கு ஒரு காரணம் சமுகமயமாவதற்கு மொழியைப் பிரயோகிக்கும் ஆற்றல் தேவைப்படுவதாகும். நன்கு மொழியைப் பிரயோகிக்க முடியுமானவர்களுக்குத் தமது சம வயது நண்பர்களுடன் இலகுவாகத் தொடர்பு கொள்வதற்கு ஆற்றல் கிடைக்கின்றது. இன்னொரு காரணம் சுய ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும் போது மொழியைப் பிரயோகிக்கும் தேர்ச்சி அவசியமாகிறது. தான் செய்ய வேண்டியவை, செய்ய

முடியும் எனத் தான் நினைப்பவை பற்றி வளர்ந்தோரிடம் கூறிக் கொள்ள முடியாதெனின் அவை பற்றிய தெளிவில்லாத வளர்ந்தோர் அனைத்தையும் பிள்ளைகளுக்காகச் செய்து கொடுக்க முயற்சிப்பதன் காரணமாக, பிள்ளைகளின் சுயாதீனம், ஆத்ம நம்பிக்கை விருத்திக்கு அது தடையாக அமையும். தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காகப் பிள்ளைகள் பின்வரும் இரு ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

- வளர்ந்தோர் கூறுபவற்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
- தனக்குத் தேவையானவற்றை ஏனையோர் விளங்கும் வகையில் தொடர்பாடக்கூடிய ஆற்றல்.

இக்காலத்துள் விருத்தியுறும் மொழி ஆற்றல்களில் பின்வரும் பண்புகள் உள்ளடங்கும்.

### 1. சொற்களைத் திருத்தமாக உச்சரித்தல்

மொழியிலுள்ள சில சொற்களைத் திருத்தமாக உச்சரிப்பது பிள்ளைகளுக்குக் கடினமாக இருக்கலாம். விசேடமாக ணகர, நகர ஒலி பேதமுள்ள சொற்களை உச்சரிப்பதில் இடர்பாடு இருக்கலாம். சில பிள்ளைகளுக்கு ரகர, றகர ஒலி பேதமுள்ள சொற்களை உச்சரிப்பதில் இடர்பாடு இருக்கலாம். இன்னும் லகர, ளகர, ழகர ஒலி பேதமுள்ள சொற்களை உச்சரிப்பதில் இடர்பாடு இருக்கலாம். சில பிள்ளைகள் “பன்றி” என்பதை “பண்டி” என உச்சரிப்பர். எனவே இப்பருவ பிள்ளைகள் முன்னிலையில் சொற்களைத் திருத்தமாக உச்சரிப்பதற்கு வளர்ந்தோர்கள் வகைபார்த்துக் கொள்ள வேண்டும்.

### 2. சொற் களஞ்சியம்

இப்பருவத்துப் பிள்ளைகள் பிரயோகிக்கும் சொற்களஞ்சியம் வேகமாக விரிவடையும். சமவயது நண்பர்களுடன் விளையாடுவதனாலும், வானொலியைச் செவிமடுப்பதாலும், தொலைக்காட்சியைப் பார்ப்பதாலும் பிரயோகிக்கும் சொற்களின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து செல்லும். சிறு பிள்ளைகளின் சொற்களஞ்சியம் விரிவடையும். சொற்களைப் பிரயோகிப்பதற்கும் பொருத்தமற்ற, அனாச்சாரமான சொற்களைப் பிரயோகிக்காது தவிர்த்துக் கொள்வதற்கும் வளர்ந்தோர் வகைபார்த்துக் கொள்ள வேண்டும்.

### 3. வாக்கியங்களைக் கட்டியெழுப்பல்

வயது இரண்டு வருடமாகும் போது 3, 4 சொற்கள் கொண்ட வசனங்களைக் கட்டியெழுப்பப் பிள்ளைகளுக்கு முடியும். 3 வயதின்பின் 7, 8 சொற்கள் கொண்ட வசனங்களைக் கட்டியெழுப்புவதற்கும் அவர்கள் ஆற்றல் பெறுவர். ஆரம்பத்தில் கட்டியெழுப்பப்படும் வசனங்களில் அநேகமாகப் பயனிலை காணப்படமாட்டாது. அதிகமாகப் பெயர்ச் சொற்களையே காணக்கூடியதாக இருக்கும். எனினும் 3 வயதின் பின்னர் கூறும் வசனங்களில் எல்லா இலக்கண வரம்புகளும் உள்ளடங்கி இருப்பதைக் காணமுடியும். கருத்துள்ள வசனங்களைத் தமது பேச்சின்போது பிரயோகிப்பதனூடாக வளர்ந்தோர்கள் பிள்ளைகளிடையே கருத்துள்ள வசனங்களைப் பயன்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும்.

- இப்பருவப் பிள்ளைகளின் பேச்சு தன் மையமாகக் காணப்படும். எனினும் இப்பருவ இறுதியில் ஏனையோர் பற்றியும் பேசத் தலைப்படுவர்.

- அநேகமாக அவர்களின் பேச்சு முறைப்பாட்டு வடிவை எடுக்கும். அதேபோல் அவர்களது பேச்சு ஏனையோர் பற்றி விமர்சிப்பதாகவும் அமையும்.

- கோபம் ஏற்பட்டவுடன் ஏனையோருக்குப் பட்டப்பெயர் கூறுவதற்கும் பிள்ளைகள் தலைப்படுவர்.

- தமக்கு உரிய விடயங்கள் பற்றித் தற்புகழ்ச்சியுடன் பேசுவர்.

- தான் பழகும், ஒன்றாக விளையாடும் அங்கத்தவர்கள் அதிகரிக்கும் போது அவர்களின் நடத்தை மிகவும் விரிவடைந்த சமுகமயத் தன்மையைக் கொண்டிருக்கும். அதனால் வினவும் வினாக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவதோடு கட்டளை இடும் நிலை அதிகரிக்கும்.

- பிள்ளைகள் பழகும் குழுவினர் சிறிதாகுமளவுக்குப் பிள்ளைகளின் மொழி விருத்திக்கு உறுதுணை கிடைக்கும். பிள்ளைகள் பேசும் அளவும் அதிகரிக்கும்.

அனைத்துப் பிள்ளைகளுக்கும் இப்பண்புகளைப் பொதுமைப்படுத்த முடியாவிட்டாலும் பிள்ளைகள் பேசும் அளவு கூடும், குறையும் விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் பின்வரும் விதத்திலான காரணிகள் பல இருக்கலாம்.

- விவேக மட்டம் கூடிய பிள்ளைகள் விரைவாகப் பேசப்பழகுவர்.
- பெற்றோர்களின் அதிகாரம் அதிகமுள்ள வீடுகளில் பிள்ளைகள் குறைவாகப் பேசத் தலைப்படுவர்.
- முதலில் பிறக்கும் பிள்ளைகளுடன் பேசுவதற்கும் அதிக நேரத்தைப் பயன்படுத்துவதற்குப் பெற்றோர்களுக்குச் சந்தர்ப்பம் உண்டு.
- குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறையும் போது பிள்ளைகளின் பேச்சில் கவனஞ் செலுத்த, பெற்றோர்களுக்குச் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.
- குடும்பத்தின் சமுக, பொருளாதாரப் பின்னணி உயரும் அளவுக்குப் பிள்ளைகளின் மொழி விருத்திக்குத் தேவையான பின்னணி உருவாகும்.

## மனவெழுச்சி சார் விருத்தி

இப்பருவத்திற்குரிய பிள்ளைகள் அவசரமாகக் குழப்பமடைவதோடு அவர்களை அமைதிப்படுத்துவது அவ்வளவு இலகுவானதல்ல. இப்பருவத்தில் காணப்படும் மனவெழுச்சிசார் அமைதியின்மை தொடர்பான பலம்மிக்க பண்புகளான கோபமடைதல், அதிகம் கண்ணீர் வடித்தல், பொறாமைக்குணத்தை வெளிக்காட்டல் என்பன காணப்படும். நீண்ட நேரம் விளையாடுவதால் ஏற்படும் அதிக களைப்பு, நித்திரை கொள்ளல் பற்றிய பிரச்சினைகள், போதுமானளவு உணவு

உண்ணாமை போன்றவற்றைக் காரணமாகக் கொண்டு இப்பருவத்தில் மனவெழுச்சிப் பண்புகள் வெளியாகும். வளர்ந்தோர் இவர்கள் விடயத்தில் விதிக்கின்ற நடத்தை வரையறைகளுக்கு எதிராக இயங்கி, தமக்கு அவர்கள் நினைப்பதைவிட யாதேனுமொன்றைச் செய்ய முடியும் என்ற எண்ணத்தைக் காரணமாக வைத்து, அவர்களுள் மனவெழுச்சிப் பண்புகள் வெளியாகும். இவ்வயதுப் பிள்ளைகளுள் ஏற்படும் மனவெழுச்சிப் பண்புகள் சில பின்வருமாறு அமையும்.

- கோபம்: பிள்ளைகள் கோபப்படுவதற்கு, பிரதானமாகத் தமது விளையாட்டுப் பொருட்களின் பாவனை பற்றிய பிரச்சினைகள், தமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமை, வேறொரு பிள்ளை தாக்குதல் போன்ற விடயங்கள் காரணமாக அமையலாம். பிள்ளைகள் தமது கோபத்தை அழுதல், சத்தமிடல், ஒன்றைத் தாக்குதல், காலால் தாக்குதல், மேலே துள்ளுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துவர்.

- பயம்: வெறுப்பான விடயங்கள் பற்றிய ஞாபகம், சுய நடத்தை மற்றும் ஏனையோரைப் பின்பற்றல் போன்ற காரணங்களால் பிள்ளைகளிடையே பய உணர்வு ஏற்பட முடியும். அதேபோன்று தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளைச் செவிமடுத்தல், பார்வையிடல் ஊடாகவும் பயம் ஏற்படும் நிலை வெளிப்பட முடியும்.

- பொறாமை: பெற்றோரின் கவனம் குடும்பத்தில் வேறொரு அங்கத்தவரில் (புதிதாகப் பிறந்த பிள்ளையில்) செலுத்தப்படுவது தெரியவரின், அதனைக் காரணமாகக் கொண்டு பிள்ளைகளிடையே பொறாமை உணர்வு ஏற்படும். சிலவேளைகளில் தமது பொறாமை உணர்வைப் பகிரங்கமாக வெளிக்காட்ட இடமுண்டு. அத்துடன் இரவில் கட்டிலில் சிறிநீர் கழித்தல், நோயுற்றுள்ளதாக உணர்த்துதல், கட்டுக்கடங்காது போதல் போன்ற நடத்தைகள் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்துவர்.

- ஆதங்கம்: புதிதாகக் காணும் விடயங்கள் பற்றிப் பிள்ளைகளிடம் ஆதங்கம் ஏற்படுவது இயற்கையாகும். அவ்வாறான நிலைமையின் போது புதிதாகக் கண்டவற்றைத் தடவிப்பார்த்து, யாதேனும் ஓர் அறிவைப் பெற்றுக் கொள்வதே அவர்களின் நேரடித் துலங்கல் ஆகும். எனினும் வளர்ந்தோரின் எதிர்ப்பு வெளிப்படுவதால் அவர்கள் படிப்படியாக அவை பற்றிப் பல்வேறு வினாக்கள் வினவத் தொடங்குவர்.

- ஆசை: இப்பருவப் பிள்ளைகள் அநேகமாக ஏனையோரின் பொருட்கள் தொடர்பாக ஆசை வைப்பர். அவ்வாறு ஆசை ஏற்பட்டவுடன் அவர்கள் வளர்ந்தோரிடம் முறைப்படுவர். அல்லது அப்பொருளைத் தமக்கும் பெற்றுத் தருமாறு வேண்டுவர்.

- மகிழ்ச்சி: அசாதாரண நிகழ்வு ஏற்படும்போது, ஒரு புதுமையான சத்தம் கேட்கும் போது, யாதேனும் குழப்பம் ஏற்படும் போது பிள்ளைகள் மகிழ்ச்சி அடைவர். தமது மகிழ்ச்சியை, சிரிப்பு, கைதட்டல், மேலே துள்ளுதல், கட்டியணைத்தல் போன்ற நடத்தைகள் மூலம் வெளிப்படுத்துவர்.

- துக்கம்: யாதேனுமொன்று தமக்குக் கிடைக்காதபோது பிள்ளைகள் துக்கமடைவர். அது ஒரு பொருளாக, ஒரு விளையாட்டுப் பொருளாக, தான் விரும்பும் ஒரு

நபராக இருக்கலாம். தமது துக்கத்தை அநேகமாக அவர்கள் அழுவதன் மூலமாக வெளிப்படுத்துவர். அல்லது தமது காரியங்களில் உற்சாகம் காட்டாது, உணவு உட்கொள்ளாது இருத்தல் மூலம் வெளிப்படுத்துவர்.

- அன்பு: தமக்குச் சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றுத்தரும் பொருட்களில், விளையாட்டுப் பொருட்களில், நபர்களில் அன்பு காட்டத் தொடங்குவர். தமது அன்பை, கட்டித்தழுவுவதன் மூலம், தட்டுவதன் மூலம், முத்தமிடுவதன் மூலம் அவர்கள் வெளிப்படுத்துவர். காலஞ் செல்லத் தமது அன்பைச் சொற்களின் மூலம் வெளிப்படுத்த அவர்கள் கற்றுக்கொள்வர்.

## மனவெழுச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்

- விவேக மட்டம் கூடிக் குறைவதற்கேற்ப மனவெழுச்சியும் கூடிக் குறையும்.
- ஆண், பெண் பால்வேறுபாட்டுக்கேற்பவும் மனவெழுச்சி மாறுபடும்.
- குடும்பத்தின் அளவும் மனவெழுச்சியைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகும். பொறாமை எனும் மனவெழுச்சிப் பண்பு சிறிய குடும்பங்களிலும் ஆசை போன்ற மனவெழுச்சிப் பண்பு அதிகமாகப் பெரிய சிறிய குடும்பங்களிலும் காணக்கிடக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் உண்டு.
- குடும்பத்தில் எத்தனையாவது பிள்ளை என்ற விடயமும் மனவெழுச்சி மாற்றங்களை ஏற்படுத்தும்.
- பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக ஆக்குவதற்கு வளர்ந்தோர் பின்பற்றும் போதனை முறைகளின் கடின நிலை, மென்மை நிலை என்பனவும் பிள்ளைகளின் மனவெழுச்சித் தன்மையைத் தீர்மானிக்கும்.

## சமுக விருத்தி

இப்பருவத்தில் சிறிது சிறிதாக அதிகரிக்கும் நண்பர்களின் தொகைக்கிணங்க பிள்ளைகளின் சமுகமயமாதல் முறையும் படிப்படியாக விருத்தியுறும், உரிய வயதுப் பிள்ளைகளிடையே சமுகமயமாதல் தொடர்பாகக் காணப்படும் சில சமுகக் கோலங்கள் பின்வருமாறு காணப்படும்.

- பாவனை செய்தல்: இவ்வயதுப் பிள்ளைகள் தமது குழுவிலுள்ள, தாம் விரும்புகின்ற ஒருவரின் மனப்பாங்குகளை, நடத்தைகளைப் போல பாவனை செய்வதை அநேகமாகக் காணக்கூடியதாக உள்ளது.
- போட்டி நிலை: 4 வயதாகும் போது ஏனையோரை விஞ்சிப் போகும் ஆசையை அதிகமான பிள்ளைகள் வெளிக்காட்டுவர். இப்பண்புகள் முதலில் வீட்டிலே வெளிப்படுவதோடு பின்னர் அவை படிப்படியாக ஏனையோருடன் விளையாடும் போது வெளிப்படும்.
- ஒத்துழைப்பு: 3 வயது இறுதியில் சேர்ந்து விளையாடுகின்ற, குழு செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற தேவை அதிகரிப்பதைக் காணலாம். ஏனைய பிள்ளைகளுடன் விளையாடும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும் அளவுக்கு அவ்வாறான விளையாட்டுக்களில், செயற்பாடுகளில் ஈடுபடும் அளவும் அதிகரிக்கும்.

- அனுதாபம் காட்டல்: இப்பண்பு 3 வயதுக்கு முன் அரிதாகவே ஏற்படும். விளையாட்டு தொடர்பான தொடர்புகளைப் பிள்ளைகள் கட்டியெழுப்பும் அளவுக்கு அவர்களிடையே அனுதாபம் காட்டும் பண்பு அதிகரிக்கும்.

- அக்கறை: அனுதாபம் காட்டுவது போன்றே அக்கறை செலுத்துவதற்கும் ஏனையோரின் உணர்வுகள் மனவெழுச்சிகள் பற்றிய தெளிவு அவர்களுக்கு இருக்க வேண்டும்.

- சமூக அனுமதி: முன்பிள்ளைப்பருவம் முடிவடையும் போதே வளர்ந்தோரின் அனுமதியை விட தமது சமவயதுக் குழுவினரின் அனுமதி பிள்ளைகளுக்கு முக்கியத்துவமாகின்றது. சமவயதுக் குழுவினரின் அனுமதியைப் பெறுவதற்காகப் பொருத்தமற்ற நடத்தைகளும், ஏனையோருக்குத் தொல்லை ஏற்படும் நடத்தைகளும் உறுதுணையாகும் என இவ்வயதுப் பிள்ளைகள் சிந்திப்பார்கள்.

- கூட்டாக அனுபவித்தல்: சமூக அனுமதியைப் பெறும் பொருட்டு தன்னிடமுள்ளவற்றை விசேடமாக விளையாட்டுப் பொருட்களைக் கூட்டாக அனுபவித்தல் (தியாகத் தன்மை) உகந்த ஓர் உத்தி என இவ்வயதுப் பிள்ளைகள் விளங்கிக் கொள்வர்.

- தொடர்புகள்: சின்ன வயதில் மற்றவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்துக் கொள்ளும் பிள்ளைகள் படிப்படியாக இவ்வயதை அடையும் பொழுது வெளி நபர்களுடன் உதாரணமாக முன்பள்ளி ஆசிரியருடன் அல்லது வேறு நபர்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வர்.

மேற்கூறிய சமூகமயப் பண்புகளுக்கு எதிராகப் பின்வரும் விதத்திலான சமூகமயமல்லாத பண்புகளையும் சில வேளைகளில் இவ்வயதுப் பிள்ளைகள் வெளிப்படுத்துவர்.

- பின்னடைவு: வளர்ந்தோரின் அதிகார பலத்துக்கு எதிராக இயங்கும் நிலை இக்காலத்துள் காணலாம்.

- ஆக்கிரமிப்பு நிலை: ஆக்கிரமிப்புப் பண்பாக ஆரம்பத்தில் செய்யும் உடல்சார் தாக்குதல் பின்னர் படிப்படியாக வாய்மொழித் தாக்குதலாக மாற்றமடையும். வாய்மொழித் தாக்குதல்கள், பட்டப்பெயர் கூறுதல், ஏசுதல் போன்ற வடிவங்களை எடுக்கும்.

- விஞ்சிச் செல்லும் நடத்தை: சிலவேளைகளில் பிள்ளைகள் ஏனையோரை விஞ்சிச் சென்று மேல்வர முயற்சிப்பர். ஏனையோரை விட தாம் மேலானவர் என்ற உணர்வுடன் செயற்படும் பிள்ளைகள் உள்ளனர்.

- சுயநலத் தன்மை: அநேகமாக பிள்ளைகளின் சமூகத் தொடர்புகள் வீட்டோடு வரையறுக்கப்படுவதால் அவர்கள் பெரும்பாலும் தன் மையமாக சுயநலவாதிகளாகி விடுகின்றனர். சமூகத் தொடர்புகள் விரிவடையும் பொழுது இந்நிலை மாறி தியாகத் தன்மை விருத்தியாகும்.

- தன் மைய நிலை: இப்பண்பும் பிள்ளை வளரும்போது படிப்படியாக நீங்கிச் செல்லும். அவர்கள் ஏனையோரின் வரவேற்பைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கும் அளவுக்குத் தன் மைய நிலை நீங்கிவிடும்.

- நாசகார நிலை: பிள்ளைகளிடையே கோபம் கூடும் அளவுக்கு அவர்களது கைகளில் கிடைக்கும் அநேகமானவற்றை அழித்துவிடுவதற்குத் தூண்டப்படுவர். அவை தமதாயினும் வேறொருவருடையதாயினும் வித்தியாசமின்றி உடைத்து நொறுக்குவதற்கு அவர்கள் தூண்டப்படுவர்.



# 02

# முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் கல்வி பற்றிய கோட்பாடுகள்சார் பின்னணி

## முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் கல்வி பற்றிய கோட்பாடுகள்சார் பின்னணி

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் கல்வி பற்றிய பிரெட்றிக் புரொபெல், அடொல்ப் ஸ்டீனர், மரியா மொண்டிசோரி, மார்க்கிரட் மெக்மிலன், சூசான் ஐசெக்ஸ் போன்ற கல்வியலாளர்களின் கருத்துக்கள் இந்த அதிகாரத்தில் கூறப்படுகின்றன. அவர்களுடைய கருத்துக்கள் இன்று கூட நேரடியாகவோ மறைமுகமாகவோ முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவர்கள் அனைவரும் குழந்தை என்பது, ஆரம்பத்திலிருந்தே கவனஞ்செலுத்தப்பட வேண்டிய, வளப்படுத்தப்பட வேண்டிய, எண்ணங்கள், ஆசைகள், உணர்வுகள், கற்பனைகள் உள்ள முழுமையான ஒரு நபர் எனக் கருதினர். முழு நாளும் பாடசாலையில் வகுப்பறையில் ஒரே வரிசையில் அமர்வதில் பிள்ளையைச் சிறைப்பிடிக்காது வகுப்பறையினுள்ளும் வெளியிலும் பல்வேறு செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபடுத்துவதற்காகப் பிள்ளையை மையமாகக் கொண்ட ஒரு கல்வி முறையினை முன்மொழிவதன் அவசியத்தை இச்சிந்தனையாளர்கள் தூண்டியுள்ளமை ஒரு முக்கிய விடயமாகும்.

### ● பிரெட்றிக் புரொபெல் (1782-1852)

பிரான்ஸ் இனத்து தத்துவவியலாளரான ரூசோவினதும், இத்தாலி இனத்தவரான பெஸ்டலோசியினதும் சிந்தனைகள் ஊடாகக் கவரப்பட்ட புரொபெல், விளையாட்டானது, சிறு குழந்தைகளுக்கு, கவனத்திற் கொள்ள வேண்டிய, மிக முக்கியமான ஒரு செயற்பாடு என அழுத்தமாகக் கூறினார். விளையாட்டு ஒருவரின் முழுமையான வளர்ச்சிக்குக் காரணமாக அமைவதாலும் விளையாட்டின்போது குழந்தையின் மனதில் மிக உணர்வுபூர்வமான பண்புகள் வெளிப்படுவதாலும் இவ்வயதில் விளையாட்டின் பக்கம் கவனஞ் செலுத்துவது முழு எதிர்காலத்திலும் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தும்.

விளையாட்டினூடாகப் பிள்ளைகளின் சகல ஆற்றல்களையும் விருத்தி செய்ய முடியும். அத்தோடு ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்த முடியும். விளையாட்டினூடாகப் பிள்ளைகள் கல்வி பெறுகிறார்கள் என்ற கருத்து உண்மையிலேயே புரொபெல் மட்டும் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை அல்ல. அது ஆரம்ப காலந்தொட்டு சிறுவர் கல்வியாளர்கள் அநேகமானோரால் ஆழமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். விளையாட்டு மிகவும் முக்கியமான ஒன்று எனவும் அதன் காரணமாக விளையாட்டை நினைத்த நினைத்த விதங்களில் செய்வதை அனுமதிக்க முடியாது எனவும் அவர் நம்பினார். கற்றல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்குப் போன்றே விளையாட்டுக்கும் நிச்சயிக்கப்பட்ட நேரம் இருக்க வேண்டியதோடு அது அடிப்படைப் பாடத்திட்டத்துக்கு அப்பால் இருக்கக் கூடாது எனவும் கருதினார். விளையாட்டு மிக முக்கியமான ஓர் அங்கம் என்பதால் அதற்கு ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். அத்தோடு எப்பொழுதும் விளையாட்டுக்களைக் கற்பிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

விளையாட்டினூடாகக் கற்பதற்குப் பிள்ளைகளுக்கு உதவுவதற்காகப் புரொபெல் விளையாட்டுப் பொருட்கள், பல விளையாட்டு வகைகளை அறிமுகப்படுத்தினார். புரொபெல் திட்டமிட்ட விளையாட்டுப் பொருட்கள் தொகுதி, மென்பந்துகள் பலவற்றிலிருந்து தொடங்கி, கம்புகளினால் செய்யப்பட்ட கோளவடிவப் பொருட்கள், கனவடிவப் பொருட்கள், உருளை வடிவப் பொருட்கள் வரை பரவலாகிய ஓர் உபகரணத் தொகுதியாக அமைந்தது. மேலும் சித்திரம் வரைதல், மாதிரிகளை

அமைத்தல் என்பனவும் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புரொபெல்லின் கோட்பாட்டுக்கு ஏற்ப பாலர் பகுதியின் பாடத்திட்டம் இயல்பான திறமைகள், செயற்பாடுகளான பாடல்கள், விளையாட்டுக்கள், கதைகள், பேச்சுக்கள் போன்றவற்றினூடாகவே ஒன்றிணைக்கப்பட்டது.

தாம் விரும்பியவற்றைச் செய்வதற்குப் பிள்ளைகளுக்கு இயலுமாகும் வகையில், மாறும் பாடவேளைகளிடையே செயற்பாடுகளைச் செயற்படுத்திச் செல்லும் ஒரு முழுமையான அலகாக பாடசாலை நாளைக் கவனத்திற் கொள்ளும் கருத்து, புரொபெல்லின் சம்பிரதாயம் ஊடாக, நவீன ஆரம்பப் பாடசாலைகளுக்குக் கிடைத்த இன்னுமொரு உரிமையாகும். பிரெட்ரிக் புரொபெல் முன்பிள்ளைப்பருவக் கல்வி பற்றிய சிரேஷ்ட முன்னோடிகளில் ஒருவராவார். அவரது கருத்துக்களின் தாக்கம் ஆரம்பப் பாடசாலைகளில் இன்னும் காணக் கூடியதாகவுள்ளது.

## ● ரெடொல்ப் ஸ்டீனர் (1861-1925)

இவரது கவனம் குறிப்பாக முழுப் பிள்ளையிலும் செலுத்தப்பட்டது. இவரது கொள்கை குழந்தைகள் விருத்தி பற்றிய நிச்சயிக்கப்பட்ட ஒரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது. பாடத்திட்டத்தின் பின்னணியில் பிள்ளைகளின் சுபாவத்தை விளங்கிக் கொள்வதனூடாக அவர்களின் சுயாதீனத்தை விருத்தி செய்ய முடியுமாகிறது என்ற தத்துவமே காணப்படுகிறது. கலை, விஞ்ஞானம் பற்றிய சமநிலை அனுபவங்களை முன்வைக்கின்ற, அதேபோல் சிந்தனை, உணர்வுகள், விருப்பு போன்றவற்றை விருத்தி செய்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குகின்ற, ஆக்கபூர்வமான ஒரு பாடத்திட்டத்தைப் பிள்ளைகளுக்கு முன்வைத்தால் அவர்கள் நெகிழ்வுள்ள ஆக்கபூர்வமான பிள்ளைகளாக விருத்தியுறுவர் என அவர் நம்பினார். அவரின் கருத்திற்கு ஏற்ப மிகச்சிறந்த முன்பள்ளி ஆசிரியர் என்பவர், பாடசாலைச் சூழலில் ஒரு வீட்டின் சூழலை உருவாக்கக் கூடியவர் ஆவார்.

சுதந்திரமான விளையாட்டுக்கள், கற்பனையைத் தூண்டுகின்ற பல்செயல் விளையாட்டுப் பொருட்கள் உபயோகம் தொடர்பாக அவர் அழுத்தமாக வலியுறுத்தி உள்ளார். ஸ்டீனரின் பாடசாலைகளில் எல்லா இடங்களிலும் காய்கள், சிப்பிகள், மரத்துண்டுகள், துணிகள் போன்ற இயற்கைப் பொருட்களைக் காணக்கூடியதாக உள்ளதோடு, தைப்பதற்கு, வரைவதற்கு, மர வேலைகளில் ஈடுபடுவதற்குப் பிள்ளைகள் தூண்டப்படுவர். மரவேலைகளின்போது பிள்ளைகளுக்கு மிகவும் சிறியதாயினும் உண்மையான கருவிகளைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோடு கற்பனை விளையாட்டுக்களின் போது பயன்படுத்துவதற்காகத் தமது விளையாட்டுப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் முடியும். வெளியக விளையாட்டுப் பொருட்கள் (உதாரணமாக பிள்ளைகளுக்கு மேலே ஏறக்கூடிய மரக்குற்றிகள், மரங்கள்) அநேகம் இருந்தாலும் வியாபார உபகரணங்களின் அளவு குறைவாகவே காணப்படுகிறது. வியாபார உபகரணங்களின் அளவைக் குறைத்தல், பிள்ளைகளுக்குத் தமது விளையாட்டுக்களில் மிகவும் ஆக்கபூர்வமாவதற்கு, கற்பனை உலகில் நுழைவதற்கு, வழிசமைக்கும் வகையில் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்றாகும்.

பிள்ளைகள் வர்ணங்கள் பற்றி நேரடி, உயிருள்ள பொருட்களைப் பார்த்தே சிந்திக்க வேண்டும். எனினும் யாதேனும் ஒரு விசேட படத்தை நிறந் தீட்டுவது கட்டாயமானதல்ல என ஸ்டீனர் நம்பியதால் பல்வேறு விதங்களில் வர்ணங்களைப் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகள் தூ ண்டப்படுவர். பாடலும் அதனுடன் செய்யப்படும் விளையாட்டுக்கள் போன்றே சங்கீதத்தின் போது, பேசும் போது அங்க அசைவுகளைச் செய்யக்கூடியவாறு ஸ்டீனர் விருத்தி செய்துள்ள புதிய அசைவு

விஞ்ஞானமும் ஒரு முக்கியமான அங்கமாகும். கதை கூறுதலும் ஸ்டீனரின் பாடத்திட்டத்தில் ஒரு முக்கியமான அங்கமாகும். பிள்ளைகளுக்கு எந்தவொரு அறிவுறுத்தல்சார் உபகரணங்களும் வழங்கப்படுவதில்லை. அதனுடன் எழுதுமாறோ வாசிக்குமாறோ வற்புறுத்தப்படுவதுமில்லை.

- **மரியா மொண்டிசோரி (1870-1952)**

20ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் ரோமாபுரியில் சமூக மற்றும் மானசீக முறையில் அங்கவீனமான பிள்ளைகள் மத்தியில் சேவை செய்த வைத்தியரான மரியா மொன்டிசோரியின் கருத்துக்கள் உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அவரின் அவதானிப்புக்கு ஏற்ப அவரது சிறுவர் இல்லத்தில் (அவர் அவரது பாலர் பாடசாலைகளுக்கு வழங்கிய பெயர்) ஒவ்வொரு பிள்ளையும் உணர்வுபூர்வமான ஒரு காலகட்டத்தைக் கழிப்பதோடு, அவ்வாறு கழிக்கும்போது சில திறமைகள், எண்ணக்கருக்களை மிக இலகுவாகக் கற்பதாகவும் தீர்மானித்துள்ளார். பிள்ளைகள் அவர்களே செய்கின்ற செயற்பாடுகள் ஊடாகக் கற்பதாக அவர் நம்பியதோடு அதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சூழல் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. ஆறு வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளைக்கு, அதனைவிட வயது கூடிய ஒரு பிள்ளையாக ஒவ்வொன்றையும் விளங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு அல்லது மொழியைப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு விளங்கிக் கொள்ள முடியாது எனவும் அதனால் சிறு பிள்ளைகளுக்கு விளங்காத ஒரு மொழியைப் பயன்படுத்தக் கூடாது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு பிள்ளையும் தன்னம்பிக்கை உடையவராவதோடு சமூக, சூழல் காரணமாகப் பிள்ளை கடுமையான தாக்கத்துக்கு உட்படுவதாகவும், அதேபோன்று சிறுவர் இல்லத்தின் அமைதியான சுற்றுச் சூழலில் ஒரு பிள்ளைக்கு அதனது இயல்பான திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியுமாகின்றது எனவும் அவர் கருதினார். ஓர் ஒழுங்கில் வேலை செய்வதற்குப் பிள்ளைகளிடையே விருப்பம் இருக்கிறது எனவும் பொருட்களையும் உபகரணங்களையும் அகற்றியவிடத்து, மீள அவற்றை உரிய இடங்களில் ஒழுங்காக வைக்கும் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்க வேண்டும் எனவும் அவர் நம்பினார்.

மொண்டிசோரி முறை, அனைத்துப் பிள்ளைகள் தொடர்பாகவும் சரியாகப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொகுதியில் தங்கியுள்ளது. ஓர் ஆசிரியர் ஒரு பொருளை ஒரு வடிவத்துக்கு ஏற்ப பிள்ளைக்கு முன்வைக்க வேண்டும் எனவும், அதன்பின் அதனுடன் சுயமாக இருப்பதற்குப் பிள்ளைக்கு இடமளிக்க வேண்டும் எனவும், பிள்ளைக்கு இடையூறு செய்யக் கூடாது எனவும் சுட்டிக்காட்டினார். இவ்வரையறைக்குள் விடயங்களை ஆராய்ந்து, பிள்ளையினது விருத்திக்கான சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பல்வேறு பொருட்களைத் தெரிவு செய்துகொண்டு, உருவாக்கப்பட்ட சூழலுடன் இணைந்து, செயற்படுவதற்கு ஒரு பிள்ளைக்குச் சுதந்திரம் உண்டு எனினும் தாம் விரும்பியவற்றைச் செய்வதற்கு இதன் மூலம் பிள்ளைகளுக்கு வரையறையற்ற உரிமை கிடைப்பதில்லை. சமூகத்தில் வாழ நாம் கருதுவதாயின் எமக்கு முழுமையாகச் சுதந்திரமாக இருக்க முடியாது என மொண்டிசோரி தர்க்கிக்கின்றார்.

மொண்டிசோரி பாடசாலைகளில் சூழலை உருவாக்கி, பிள்ளைக்கும் பொருட்களுக்கும் இடையே இணைப்பாகச் செயற்படுவதே ஓர் ஆசிரியரின் பொறுப்பாகும். பிள்ளைகளின் விருத்தியில் இருக்க வேண்டிய சுதந்திரத்தை உருவாக்குவதே அவரின் பிரவேசமாக இருத்தல் வேண்டும். உருவாக்கப்பட்ட சூழலைப் பயன்படுத்தும்போது ஆசிரியரின் திறமைகள் அவ்வளவு தூரம் முக்கியமல்ல என்பதால் அவர் மிக மேலான வினைத்திறன் மிக்கவராக இல்லாவிட்டாலும் பிள்ளைகளுக்குக் கற்க முடியும் என மரியா மொண்டிசோரி தர்க்கிக்கின்றார்.

“விளையாட்டு என்பது ஒரு சிறுவர் வேலை” எனவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே விளையாட்டு முறை. வளர்ந்தோர் தொடர்புபட்டுச் சொல்லிக் கொடுக்கும் ஆரம்ப விளையாட்டுக்கள் உள்ளடங்கிய விளையாட்டு முறை எனவும் மொண்டிசோரி தர்க்கித்தார். அதன்படி கற்பனை விளையாட்டு பிள்ளைகளுக்கு அப்பால் கற்றலை எடுத்துச் செல்வதால் அவ்வெண்ணக்கருவை ஏற்க முடியாது. அத்துடன் அதன் பெறுமானம் அற்பமானது என அவர் சிந்திக்கிறார். மாயக்காரிகள், இராட்சதங்கள் தொடர்பான அல்லது பேசும் மிருகங்கள் தொடர்பான கதைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுவதால் அவர்களுக்கு மாதிரி தொடர்பான பொய்யான படம் முன்வைக்கப்படுகிறது. எனவே கற்பனை விளையாட்டுக்கள் வஞ்சனை மிக்க விளையாட்டுக்கள் என மொண்டிசோரி கருதுகிறார்.

திட்டமிடப்பட்ட ஒரு சூழலின் தேவை உள்ளது என நவீன கல்வியலாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் எனினும் மொண்டிசோரி முறையின் கடினப்போக்கு, அம்முறையின் தழுவல் அமைப்பு விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. மரியா மொண்டிசோரியின் முறைகள் மூலம் தூண்டலை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்றுகின்ற செயற்பாடுகள் மிகவும் குறைந்தவை மட்டுமல்ல பிள்ளையின் விருத்தியை நியம முறையிலிருந்து வேறொரு முறைக்கு மாற்றுவதற்கு இடமுண்டு என்பதைக் கவனத்திற்கொள்ள அவரின் பிரவேசம் தவறியுள்ளது எனவும், இதன்காரணமாக அம்முறையை மாற்றவேண்டியுள்ளது எனவும் நவீன விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவரது முதல் நுட்பமுறை திட்டமிடப்பட்டது கற்றலில் இடர்பாடுள்ள பிள்ளைகளுக்காகவே என்பதைக் கவனத்திற் கொள்ளுமிடத்து, மேற்கூறிய விமர்சனம் புதுமையான ஒன்றாகும். இவ்வாறான விமர்சனம் காணப்பட்டாலும், முன்பிள்ளைப்பருவக் கல்வியின் முன்னேற்றத்துக்காக மரியா மொண்டிசோரி பாரிய பங்காற்றியுள்ளார் என்பதையும் அவை எமது சிறு பிள்ளைகள் பற்றிக் கருதும்போது, அடிப்படை விடயங்களாக அமைந்துள்ளன என்பதையும் ஏற்றுக் கொள்ளாதோர் இல்லை என்றே கூறலாம். செயன்முறை மட்டத்தில் பிள்ளைகளின் அனைத்து வகுப்பறைகளிலும் இப்பருவத்தில் கட்டாயமாகக் காணக்கிடக்கின்ற ஓர் அங்கமான பிரமாணத்துக்கு ஏற்ற வகுப்பறைப் பொருட்களைப் பாலர் பாடசாலைகளுக்கு, வகுப்பறைகளுக்கு அறிமுகப்படுத்திய கௌரவம் மரியா மொண்டிசோரிக்கே உரித்தானது. அதேபோன்று பிள்ளைகளுக்காகப் பயன்படுத்துகின்ற கணிதமய, புலன்கள் தொடர்பான உபகரணங்கள் அநேகமானவற்றின் மூல ஆரம்பம் மொண்டிசோரி காரணமாக ஏற்பட்டதாகும். மனிதன் என்றவகையில் பிள்ளைகள் பற்றிய கௌரவமான ஓர் உணர்வை மரியா மொண்டிசோரி முன்பிள்ளைப்பருவக் கல்வியில் சேர்த்துவிட்டார். உலகம் முழுவதும் பிள்ளைகள் அநேகமானோரை பெரிய குழுக்களாக எடுத்துக் கற்பிக்கும் கால கட்டத்தில், சுதந்திரமான சுயாதீன சிந்தனையாளர்கள் ஆவதற்குப் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் கல்வி முறைகளின் தேவையை அவர் சுட்டிக்காட்டினார். பிள்ளைகள் தொடர்பாக அவரிடம் காணப்பட்ட மனப்பாங்கு, பிள்ளைகள் பலாத்காரமாகத் தகவல்களை ஊட்டக்கூடிய மந்த உற்சாகமுள்ள ஒரு மாணவர் குழு அல்ல. அவர்கள்வினைத்திறன் மிக்க, இயல்பாகவே தைரியமுள்ள ஒரு குழு என்பதாகவே காணப்பட்டது.

சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கொள்வதற்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் செயற்படக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்ட சூழல், சிறுவர் கல்வியலாளர் பரம்பரை பலவற்றால் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களின் சிந்தனை தொடர்பாக மரியா மொண்டிசோரி செய்த சேவை மிக விசாலமானது. அவரின் தாக்கம் இன்றும் முன்பிள்ளைப்பருவக் கல்வியில் செயல்படுத்துகின்ற அநேக நடவடிக்கைகளில் பரவிக் காணப்படுவதோடு, அவரது நுட்பமுறை ஒரே இடத்தில் நலிவுறுகின்ற 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமற்றது என அநேகருக்குத் தென்பட்டாலும், புரட்சிகரமான சிந்தனை உள்ள இவ்வைத்தியருக்கு உலகம் அதிகம் கடன்பட்டுள்ளது.

## ● மாகிரட் மெக்மிலன் (1860 - 1931)

மாகிரட் மெக்மிலன் என்பவர் "அற்புதங்கள் புரிந்த தொல்லைக்காரி" என சிலரால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவர் அக்காலத்தில் இருந்த மிக முக்கியமான செயன்முறைக் கல்வி முன்னோடிகளில் ஒருவராவார். அப்போதிருந்த ஒரு பாலர் பாடசாலைப் பரிசோதகர், நவீன பாலர் பாடசாலை திருமதி மெக்மிலனின் விவேக மகிமையின் பெறுபேறு என குறிப்பிட்டுள்ளார். அவரின் கருத்துக்கள், நடவடிக்கைகளைச் சுருக்கமாகப் பார்க்கும் போது கூட இக்கூற்றின் யதார்த்தம் தென்படுவதோடு, 1990 களின் பிற்பகுதியில் அவர் முன்வைத்த கருத்துக்களில் உள்ள பொருத்தப்பாடு இற்றைக்கும் பொருந்துவதைக் காணலாம்.

மாகிரட் மெக்கிலனும் அவரது சகோதரி ரெவலும் தம்முடன் ஒரே சூழலில் வாழ்ந்த ஏழைப் பிள்ளைகளின், அவர்களின் குடும்பங்களின் சுகாதார மற்றும் வாழ்க்கை நிலைமைகள் பற்றிக் கவனஞ் செலுத்தினர். மாகிரட் மெக்மிலன் வைத்திய சிகிச்சை மத்திய நிலையங்களை ஆரம்பித்து, வேலை செய்யும் மக்களின் மூலதனம் சுகாதாரம் எனத் தர்க்கித்துப் பிள்ளைகளின் சுகாதாரத்தை விருத்தி செய்வதற்கு முயற்சித்தார்.

மாகிரட் மெக்மிலன் வீட்டினூடாகப் பெறுகின்ற கல்வியின் பெறுமதியை மதித்தவர்களில் முதலிடத்தைப் பெறுகிறார். வீட்டில் உள்ள முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அவர், மத்தியதரக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் வேலையிலீடுபடும் அல்லது ஒரே அறையில் வாழ்கின்ற தொகையான பிள்ளைகளைத் தேடிப் பராமரிக்கும் ஒரு தாயுள்ள தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை நன்கு விளங்கியுள்ளார். பிள்ளைகள் வளர்க்கப்படுகின்ற சமுகம், குடும்ப வாழ்க்கை பற்றி மாகிரட் மெக்மிலனிடம் காணப்பட்ட அதிக உத்வேகம் காரணமாக அவற்றிலுள்ள பெறுமானத்தைக் கவனஞ் செலுத்திப் பார்ப்பதில் அவர் தூண்டப்பட்டார். வீடும் சமுகமும் ஆகிய இரண்டும் பிள்ளைகளின் கல்விக்காகச் சேவை புரிகின்றன என அவர் கண்டார். ஒரு பிள்ளை வளர்ச்சியுறுகின்ற முதல் வருடங்கள் சிலவற்றின் அதி விசேட முக்கியத்துவத்தை அவர் விளங்கிக் கொண்டதாலும், பொருள்சார் நன் நிகழ்வுகள் போன்றே பிள்ளையின் முழுமையான வளர்ச்சிக்கு அன்பும் பாதுகாப்பும் முக்கியமாகின்றன என வலியுறுத்தி உள்ளதாலும் அவர் காலத்துக்கு முன்னாலேயே நிற்கின்றார். யாதேனும் முன்னேற்றம் ஏற்படவேண்டுமாயின் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர்கள் தலையிட வேண்டும் என அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். பாலர் பாடசாலைகளால் மட்டும் சமுகத்தின் தவறுகளுக்குப் பரிகாரஞ் செய்ய முடியாது. தமது பிள்ளைகளை வளர்க்கும் முறைகளை விருத்தி செய்து கொள்ள, தமது திறமைகளை விருத்தி செய்து கொள்ள பெற்றோர்களுக்கு உதவ வேண்டும் என அவர் கூறினார்.

இந்நூற்றாண்டின் முதல் தசாப்தங்களில் வீட்டுக்கும், பாடசாலைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டியதன் அவசியத்தை மாகிரட் மெக்மிலன் அவரது உதவியாளருக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் விளக்கினார். பாலர் பாடசாலை என்பது வீட்டுக்குப் பதிலான ஒன்றல்ல. வீட்டின் சூழல் பரவலாவதாகும் என்ற எண்ணக்கரு மாகிரட் மெக்மிலனாலும் அவரது உதவியாளர்களாலும் நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒரு கொள்கையாகும். பெற்றோர்களுக்கான பொழுது போக்குகளாக மொழி கற்பிக்கும் வகுப்புக்களும். நிலையங்களுடாகச் செயற்படுத்தப்பட்டமையால் மக்களிடையே அவரது கருத்துக்கள் பிரபல்யமடைந்தன. கல்வி அடைவு, வாழ்வின் வெற்றிகரமான ஆரம்பம் ஆகிய இரண்டையும் தொடர்புபடுத்துவதற்கு அவர் கருதியதோடு பெற்றோர்கள் அதனை

எதிர்க்காதவிடத்து அவர்களின் பிள்ளைகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க வேணடுமெனவும் அவர் கூறினார். வீட்டுக்கும், பாடசாலைக்கும் இடையிலான தொடர்பு பற்றிய அவரது கருத்துகள், வகுப்பறையை ஒழுங்குபடுத்தல் பற்றிய அவரது பிரவேசம் முன் பிள்ளைப்பருவக் கல்வியுடன் தொடர்பான சமகாலத்தவர்களது கருத்துக்களை விட மாற்றமான நிலையைக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையின் நிலைகளில் மாற்றங்கள், விருத்தியுற்ற சுகாதாரப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் காரணமாக அவரின் ஆலோசனைக்கு ஏற்ப திட்டமிடப்பட்ட திறந்த பாடசாலைகளின் தேவை இல்லாது போயுள்ளது எனினும் பாடசாலையின் உள்ளக சூழல், வெளியக சூழலுக்கு இடையே சுதந்திரமாக ஓடி, ஆட முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளுக்கு இம்மாதிரி பொருத்தமாவதோடு, அவரால் முன்மொழியப்பட்ட சுத்தமான காற்று பற்றிய கருத்து முன்பிள்ளைப்பருவக் கல்வியில் ஒரு முக்கிய அங்கமாக இன்னும் கருதப்படுகின்றது.

மாகிரட் மெக்மிலன் பிள்ளையின் முழுமையான விருத்திக்குச் சமாந்தரமாக முன்செல்வதற்கு அபிவிருத்தியைத் திட்டமிடுகின்ற, கற்பித்தல் நுட்பமுறைகளை மாற்றுகின்ற தேவை உள்ளது எனப் புரிந்து கொண்டார். பிள்ளைப்பருவப் பாடத்திட்டம் பற்றிய நல்லது கெட்டது தொடர்பானவற்றை விளங்கிக் கொள்வதற்காகப் பிள்ளைப்பருவப் பாடத்திட்டத்தைப் பரிசீலிப்பதற்கும் பிள்ளை கற்றலில் ஈடுபடும் வரைக்கும் பார்த்துக் கொண்டிராது எப்பொழுதும் பிள்ளைக்குக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வலியுறுத்திக் கூறுவதற்கும் அவர் அவரது ஆசிரியர்களை ஊக்குவித்தார். கற்பிக்கவேண்டிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு, உரிய நேரத்தில் தலையிடுவதே அவர்களின் பொறுப்பாகும். கதைகள், பாடல்கள் மூலம் பிள்ளைகளின் கற்பனை ஆற்றலை மொழி ஆற்றலை மேலோங்கச் செய்யும் அவசியம் பற்றிய அவரது கருத்துக்கள், முடியுமான அனைத்து வேளைகளிலும் கற்பனை விளையாட்டுக்கள் பற்றி அவர் வழங்கிய ஊக்குவிப்பு மரியா மொண்டிசோரி கொண்டிருந்த கருத்துக்களுக்கு முற்றிலும் எதிராகவே இருந்தது. கற்பதற்கு நிச்சயமாகத் தேவையான அதேபோன்று தேவையான உபகரணங்கள், தேவையற்ற உபகரணங்கள் யாவை என்பதைப் பொறுப்புடன் தீர்மானிப்பதற்காகத் தெளிவைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற ஒரு சூழலைப் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி அவர் நம்பினார். மாகிரட் மெக்மிலன் பிள்ளைகள் விளையாடுவதன் மூலம் மிகவும் விரிவான புலன் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என நம்பினார். சிறு பிள்ளைகளின் சுகாதார நிலை மோசமாயின் அவர்களால் கற்க முடியாது போகும் என்பது மாகிரட் மெக்மிலனின் கருத்து ஆதலால் அவர் எடுத்த அனைத்து முயற்சிகளும் அவர்களது சுகாதாரத்தை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டே எடுக்கப்பட்டது. பிள்ளைகளைச் சுகதேகிகளாக ஆக்கினால் அவர்களுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள வழிகாட்டக்கூடிய சூழலுக்கு, சக்தியை வளப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்துக்குத் துலங்களைக் காட்டுமாறு அவர்களைத் தூண்ட வேண்டும் என்பது அவரின் கருத்தாக இருந்தது. அவர் விளையாட்டைக் கல்வி மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு மார்க்கமாகக் கண்டதுடன் பாலர் பாடசாலை ஆரம்பக் கற்பித்தலுக்கு முன்னோடியாகத் திகழ வேண்டியது புலன்கள் தொடர்பான கல்வியையும் இயல்பான கல்வியையும் ஏற்படுத்தலாகும் எனக் கருதினார். அப்புலன்கள் தொடர்பான கல்வியை, இயல்பான கல்வியை ஏற்படுத்த முடியாது போனால் பாடசாலைகளில் வேலைகள் அநேகமாகக் குறைவடையலாம் எனவும் அவர் நினைத்தார். பிள்ளைகள் தோட்டத்தில் நேரத்தைக் கழிக்கும்போது அவர்கள் விஞ்ஞானத்தின், புவியியல் கலையின் அடிப்படை விடயங்களைக் கற்பர். மேலும் பேச்சில் ஈடுபடுதல், பாடல் என்பன எழுத்தறிவினதும் இரசனையினதும் மூல ஆரம்பமாகும்.

அநேகமான பிள்ளைகள் சிறுவர் பாடசாலைகளில் சேர்வதற்காகப் பாலர் பாடசாலையிலிருந்து விலகும்போது அவர்களில் பின்னடைவு ஏற்படும் நிலை காணப்பட்டதால் பாடத்திட்டத்தை விருத்தி

செய்தல், தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் பொருத்தமானது என அவர் தர்க்கித்தார்.

சிறுவர் பாடசாலைகளுடன் இணைந்த முன்பிள்ளைப்பருவ வகுப்புக்களுக்கு விருப்பம் காட்டாத அவர், வேறாக நடத்துகின்ற முன்பிள்ளைப்பருவ பாடசாலைக்கு விருப்பம் தெரிவித்தார். இது இன்று காணப்படும் கருத்துக்கு எதிரான ஒரு கருத்தாகும்.

## ● சூசான் ஐசெக்ஸ் (1885-1954)

பிள்ளைகளின் உள்ளுணர்வு பற்றி மிகக் குறைவாக அறிந்திருந்த ஒரு காலகட்டத்தில் சூசான் ஐசெக்ஸ் பிள்ளைகளுக்கு வேலை செய்கின்ற, உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற சுதந்திரம் இருப்பதாக உறுதிப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். எதிர்ப்புணர்வு, கோபம், பயம், குழப்ப சுபாவம் போன்ற உணர்வுகளை அடக்குவதால் பிள்ளைகளின் அனுபவமற்ற உள்ளம் பாதிப்புறுகிறது என அவரிடமிருந்த நம்பிக்கை சரியானது என்பதால் அவ்வுணர்வுகளுக்கு வெளிப்படையாக ஊக்கம் வழங்கப்பட்டது. பிள்ளைகளின் நடத்தைகளைச் சரியாகப் பதிந்து வைக்குமாறு சூசான் ஐசெக்ஸ் ஆசிரியர்களைத் தூண்டினாலும் நிகழ்வு பற்றி முதிர்ச்சியற்ற விளக்கம் கொடுப்பதால் ஏற்படும் விளைவை அவர் நன்கு அறிந்திருந்ததால் அவ்வாறான விளக்கங்களை வழங்க வேண்டாம் என ஓர் உளவியல் ஆய்வாளர் போன்று ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். பகுப்பாய்வாளர்கள் அல்லாதவர்கள் அவதானித்தல், குறித்துக் கொள்ளல் போன்ற காரியங்களைச் செய்யக் கூடாது எனவும் பயிற்றப்பட்ட ஒரு பகுப்பாய்வாளர் மட்டுமே விளக்கம் வழங்க வேண்டுமெனவும் அவர் கருதினார்.

சூசான் ஐசெக்ஸ் சிறுவர் கல்வியில் விளையாட்டின் முக்கியத்துவத்தை விசேடமாக ஏனைய பிள்ளைகளுடன் விளையாடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். ஒரு பிள்ளை ஏனைய பிள்ளைகளுடன் விளையாடும் போது பிள்ளையினது சிறிய நண்பர்களுக்கு மட்டுமன்றி பிள்ளைக்கும் ஆத்ம நம்பிக்கை ஏற்படும். அதேபோல் பிள்ளையினது மனதில் தோன்றும் சந்தேகங்கள் குறைந்து செல்வதோடு ஏனையோருடன் சண்டையிடும் மனநிலையும் குறையும். எனினும் செயற்படுவதால் பிள்ளைக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி காரணமாக ஏனையோருடன் தமது நடைமுறை கற்பனை நடவடிக்கைகளைச் செய்யும் வழியைத் தேடிக் கொள்வதற்கு உதவிகள் கிடைப்பதால் பிற்காலத்தில் பாடசாலையில் ஒற்றுமையான சமுகமய வாழ்விற்கான ஓர் அடித்தளம் கிடைக்கின்றது.

விளையாட்டு, விவேகமய வினாக்களைத் தீர்ப்பதற்குப் பிள்ளைகளுக்கு உதவுவதோடு அவர்களின் உள்ளுணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் வினைத்திறனுள்ளதாக வெளிப்படுத்துவதனூடாக உள் மனதில் சமநிலையை ஏற்படுத்திக்கொள்வதற்காகவும், மனதை ஒரே நிலையில் வைத்துக்கொள்வதற்கும் உதவுகின்றது எனவும் சூசான் ஐசெக்ஸ் நம்பியதால் விளையாட்டைப் பற்றி அவர் விசேடமாக வலியுறுத்தினார். பிள்ளைகளுக்குக் கற்பனை விளையாட்டிலுள்ள முக்கியத்துவம் பற்றி அவர் வலியுறுத்தினார். மோல்டின் ஹவுஸ் பாடசாலையிலே பாடத்திட்டம் பற்றிய பிரவேசம் ஆளுமை விருத்தியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. பிள்ளைகளுக்குக் கற்பிப்பதன் ஒரு நோக்கம் தான் தெளிவான மனதுடன் சிந்திப்பதற்கும் நிர்ப்பந்தமின்றித் தீர்மானம் எடுப்பதற்கும் பிள்ளைகளுக்கு ஆற்றலை வழங்குவது என அவர் சுட்டிக் காட்டினார். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிள்ளைகளுக்குள்ள ஆற்றலை அவர் ஏற்றுக்கொண்டுள்ளதோடு அவர்கள் சுயமாக விவேகமான தீர்வுகளை எடுக்கமுடியாதவர்கள் என சில உளவியலாளர்கள் கொண்டுள்ள கருத்தின் நம்பகத்தன்மை பற்றி அவர் வினவினார். பிள்ளைகள் கவனஞ் செலுத்துகின்ற சவால்மிக்க கருத்துள்ள வினாக்களை முன்வைக்கும் ஒரு முதியவருடன் அவர்கள் வேலை செய்தால் பிள்ளைகளுக்குச் சிக்கலான சந்தர்ப்பங்களில் தெளிவுடன் கருத்துக்களை வெளிப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

அறிவுபூர்வமான அனுபவங்களையும் கருதுகோள்களையும் பரீட்சித்துப் பார்த்தல் மோல்டின் ஹவுஸ் பாடசாலையில் பிள்ளைகளுக்கு முன்வைக்கின்ற பரந்த பாடத்திட்டத்தின் பகுதிகளாகும். பாடசாலையில் அவர் கடத்திய காலத்துள் சூசான் ஐசெக்ஸ் பிள்ளைகள் பற்றிய மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்ட விளக்கமுள்ள அறிக்கைக் குறிப்புக்களை வைத்திருந்தார். பிரச்சினைகளைத் தீர்க்கும்போது பிள்ளையிடம் அறிவுசார் ஒழுங்கு இருக்கின்றது எனவும் விளையாட்டின் போது உண்மை நிகழ்வுகளுக்குப் பகரமாக தமது கருதுகோள்களைப் பரீட்சித்துப்பார்ப்பதற்கும் பிள்ளைக்கு முடியும் எனவும் இந்தளவு இளவயதில் ஒரு சிந்தனையாளராக ஆக முடியும் எனவும் கூறிய அவர் வழிக்காட்டப்பட்ட கற்பித்தல் உபகரணங்கள் பற்றி ஆழமான நம்பிக்கை வைத்துள்ள ஆசிரியர்களுக்கு உதவினார். இவை அனைத்தையும் விட முன்பிள்ளைப் பருவக் கல்விக்காகச் செய்த சூசான் ஐசெக்ஸின் பிரதானமான சேவை எதுவென்றால், உர்சூலா வைஸ் என்ற பெயரில் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எழுதிய அவரது தெளிவான பலம்மிக்க கடிதங்கள் மூலமாக பிள்ளைகளின் உத்வேகமான உணர்வுகளின் கடினத்தன்மையைப் பற்றிய தெளிவைப் பெற்றுக்கொடுக்க முடிந்தமையாகும்.

மாகிரட் மெக்மிலன் போன்றே பாலர் பாடசாலை என்பது வீட்டில் நடைபெறும் விடயங்களின் தொடர்ச்சியே அன்றி அதற்குப் பிரதியான ஒன்றல்ல என சூசான் ஐசெக்ஸ் உம் கருதினார். அதேபோன்று பெற்றோர்கள் பாலர் பாடசாலைகளில் வேலைகளில் சம்பந்தப்பட்டுச் செயற்படவேண்டுமென்றும் அவர் கருதினார்.



# 03

## முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி

## முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி

### ● வளர்ச்சியும் அபிவிருத்தியும்

பிள்ளைவளர்ச்சி, பிள்ளை அபிவிருத்தி ஆகிய இரு பதங்களினதும் விசேட அர்த்தங்கள் இரண்டு உள்ளன. பிள்ளை வளர்ச்சி என்பதில் பரிமாண ரீதியாண ஓர் அர்த்தம் காணப்படுகின்றது. பிள்ளைகளின் உயரம், நிறை, உடல் வளர்ச்சி போன்றவற்றை பரிமாண ரீதியில் காட்டக்கூடியதாக உள்ளதால் பிள்ளை வளர்ச்சி என்பதால் அப்பண்புகளின் விருத்தியைக் கருதலாம். எனினும் அபிவிருத்தி எனும் பதம் அதனை விட பரந்த கருத்தைத் தருகின்றது. பிள்ளைகளின் உடல்சார் , மானசீக, விவேகமய, சமுகமய, மனவெழுச்சிசார் என்ற வகையில் காட்டக்கூடிய அனைத்து அம்சங்களிலும் நடைபெறுகின்ற விருத்தியே அபிவிருத்தி என்ற பதம் குறிக்கின்றது. எனவே அபிவிருத்தி என்ற பதம் வளர்ச்சி என்ற பதத்தை விட விரிவான அர்த்தத்தைப் பயன்பாட்டில் தருகின்றது.

### ● அபிவிருத்தியும் அடிப்படைக் கோட்பாடுகளும்

தனிப்பட்ட அபிவிருத்தி அந்நபருக்கே உரிய விசேடமான நிகழ்ச்சியாயினும் கருத்தரித்தல் முதல் நடைபெறும் அபிவிருத்திச் செயலொழுங்கில் தர்க்க ரீதியான ஒரு தொடரொழுங்குக் கோலம் உள்ளது என இனங்காணப்பட்டுள்ளது. கீழே தனிநபர் அபிவிருத்தி தொடர்பான பொது அடிப்படைக் கோட்பாடுகள் சில காணப்படுகின்றன.

**1. தொடர்ச்சிநிலை பற்றிய கோட்பாடு**

கருத்தரித்தல் முதல் மரணம் வரை அபிவிருத்திச் செயலொழுங்கில் தொடர்ச்சி நிலை அல்லது தொடர்ந்து நிகழுகின்ற தன்மை காணப்படுகின்றது.

**2. அபிவிருத்தி வேகத்தில் ஓர்மைத்தன்மை இன்மை பற்றிய கோட்பாடு**

தொடர்ச்சியாக நிகழும் அபிவிருத்திச் செயலொழுங்கின் அனைத்துக் கட்டங்களும் வேகத்தில் நடைபெறுவதில்லை. சில பருவங்களில் மிக வேகமாக நடைபெறும். அபிவிருத்தி இன்னொரு பருவத்தில் மிகவும் மெதுவாக நடைபெறுகிறது.

**3. தனிநபர் மாற்றங்கள் பற்றிய கோட்பாடு**

ஒவ்வொரு தனிநபரினதும் அபிவிருத்திச் செயலொழுங்கில் தனிநபர் சார் மாற்றங்கள் காணப்படுகிறது.

**4. அபிவிருத்திக் கோலத்தின் ஓர்மைத்தன்மை பற்றிய கோட்பாடு**

அபிவிருத்தி தொடர்ச்சியாக ஒரே வேகத்தில் அனைத்துப் பருவங்களிலும் நிகழாவிட்டாலும் அபிவிருத்தி தொடர்பாக தனிநபர்சார் மாற்றங்கள் காணப்பட்டாலும் எல்லாத் தனிநபர் தொடர்பாகவும் நடைபெறுகின்ற அபிவிருத்திச் செயலொழுங்கில் ஒரே கோலம் காணக்கிடக்கின்றது.

**5. சாதாரண துலங்கல் முதல் விசேட துலங்கல் வரை வியாபித்தல் பற்றிய கோட்பாடு**

துலங்களைக் காட்டுதல் சாதாரணமட்டத்தில் நடைபெற்று, படிப்படியாக விசேட துலங்கல் வரை விருத்தியுறுவதே இக்கோட்பாட்டினால் கருதப்படுகின்றது. உதாரணமாக ஒரு குழந்தை ஆரம்பத்தில் எல்லா ஆண்களையும் அப்பா என அழைக்கத் தொடங்கிப் படிப்படியாகத் தனது தந்தையை மட்டும் அப்பா என அழைக்கக் கற்றுக்கொள்ளும். இது இக்கோட்பாட்டுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

**6. ஒன்றிணைப்பு பற்றிய கோட்பாடு**

பிள்ளை சாதாரண துலங்கலிலிருந்து விசேட துலங்கல் வரை வளர்ச்சியுறுவது போன்றே பிள்ளையின் துலங்கல்களில் ஒன்றிணைந்த தன்மையும் விருத்தியுறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

**7. இடைத்தொடர்பு பற்றிய கோட்பாடு**

தனிநபர் அபிவிருத்தியில் அனைத்து அம்சமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. நல்ல ஆரோக்கியமுள்ள ஓர் உடலில் நல்ல மானசீக நிலையை ஏற்படுத்துகின்ற சிறந்த விவேக விருத்தி ஏற்படக்கூடிய இடைத்தொடர்புக்கு ஓர் உதாரணமாகும்.

**8. இடைச்செயற்பாடு பற்றிய கோட்பாடு**

தனிநபர் அபிவிருத்தி, அதிகாரங்கள் பலவற்றின் இடைச்செயற்பாட்டின் பெறுபேறுகளாகவே நடைபெறுகின்றது. ஒட்டுண்ணி விதை தொற்றியதிலிருந்து, அதற்குரிய பரம்பரை, அது வளரும் சூழல், அதனுடன் தொடர்பான ஏனைய சக்திவளங்களுக்கிடையில் ஏற்படுகின்ற இடைச்செயற்பாடு தனிநபர் அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**9. மேலிருந்து கீழும் மையத்திலிருந்து பரிதிக்கும் நடைபெறுகின்ற அபிவிருத்தி பற்றிய கோட்பாடு**

ஒரு குழந்தையின் அபிவிருத்தி அநேகமாக நிலைக்குத்து அச்சு வழியே நடைபெறும். அதாவது அபிவிருத்தி மேலிருந்து கீழ் வரை நடைபெறும். அபிவிருத்தி தலையிலிருந்து கால்வரை படிப்படியாக நிகழும். ஒரு பிள்ளை நிற்கும் முன் தலையை நேராக வைத்துக்கொள்ளக்கூடிய சக்தி கிடைக்கின்றது. அதேபோல் மையத்துக்கு அண்மித்த அவயங்கள் பரிதியிலுள்ள அவயங்கள் முன் அபிவிருத்திக்கு உட்படும். உதாரணமாக பிள்ளையின் விரல்களின் அபிவிருத்திக்கு முன் கையிலுள்ள ஏனைய பெரிய அபிவிருத்தி நடைபெறுகின்றதைக் காணலாம்.

**10. எதிர்வுகூறும் ஆற்றல் பற்றிய கோட்பாடு**

அபிவிருத்தி பற்றி எதிர்வு கூறமுடியும். அபிவிருத்திக்கு உரிய பொதுக்கோலம் பற்றிய தெளிவின் அடிப்படையில் ஒரு பிள்ளையின் அபிவிருத்தி தொடர்பாக முன்கூட்டியே ஒன்றைக் கூறும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**11. சுற்று வடிவ விருத்தி பற்றிய கோட்பாடு**

அபிவிருத்தி ஒரு போதும் நேர்கோட்டு வடிவில் நிகழ்வதில்லை. அது சுற்று வடிவத் தன்மையைக் கொண்டிருக்கும். பிள்ளைகளின் அநேக திறமைகள் விருத்தி அடைவது சுற்று வடிவத் தன்மையிலேயே எனக் குறிப்பிடப்படுகின்றது.

## பிள்ளை அபிவிருத்தி பற்றிய கோட்பாடு

பிள்ளை அபிவிருத்திச் செயலொழுங்கு பல்வேறு உளவியலாளர்கள் மூலம் மிகவும் ஆழமாகவும் விளக்கமாகவும் விவரணத்துக்குள்ளாகியுள்ளது. இம் முயற்சியின் காரணமாக பல்வேறு உளவியலாளர்களால் அபிவிருத்தி அடையும் செயலொழுங்கு பற்றிப் பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அக்கோட்பாடுகள் பற்றிய சுருக்கமான விளக்கம் கீழே தரப்படுகின்றன. விவரணத்துக்கு உட்படுகின்ற கோட்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

- சிக்மன்ட் புரொயிட்டின் உளப்பகுப்புக் கோட்பாடு
- ஜுன் பியாஜேயின் அறிதலாட்சி அபிவிருத்திக் கோட்பாடு
- எரிக் எரிக்ஸனின் உளவியல் - சமுக அபிவிருத்திக் கோட்பாடு
- கொஹெல்பர்க்கின் ஒழுக்க விழுமிய அபிவிருத்திக் கோட்பாடு

இக்கோட்பாடுகள் அனைத்தும் ஒரு தனிநபரின் பிறப்பு முதல் நவ கட்டிளமைப் பருவம் வரை நடைபெறுகின்ற அபிவிருத்தி பற்றிய விடயங்களை விவரித்துள்ளன. எனினும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் கல்வி தொடர்பில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு விசேடமாக முக்கியமாவது முன்பிள்ளைப் பருவக் காலத்துக்குரிய தகவல்களே என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

## உளப்பகுப்புக் கோட்பாடு

உளப்பகுப்புக் கோட்பாட்டை முதலில் முன்வைத்தவர் சிக்மன்ட் புரொயிட் என்ற சுவிஸ் இனத்து வைத்தியராவார். பிற்காலத்தில் கார்ல் யூங், அல்பிரட் அட்லர் ஆகிய உளவியலாளர்கள் இக்கோட்பாட்டை மேலும் மேலும் வளப்படுத்த உதவினார்கள்.

உளப் பகுப்பு வாதமானது ஆளுமை பற்றிய கோட்பாடாகும். ஆளுமை கட்டியெழுப்பப்படுவது தனிநபர் காட்டுகின்ற சில சில நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டாகும். அந்நடத்தையைக் காட்டுவதற்கு, தனிநபர் அதியக மனதிலுள்ள அபிப்பிரேரணை சக்திகள் ஊடாகவே ஈடுபடுகின்றார்.

உளப் பகுப்புக் கோட்பாடு, தனிநபர் ஆளுமை, இட், ஈகோ, சுபர் ஈகோ ஆகிய மூன்று சக்திகளின் செயற்பாட்டினால் உருவாகின்றது எனக் குறிப்பிடப்படுகிறது. இட் என்பது அதியக சக்தியாகும். அது பிறப்பிலிருந்தே ஏற்பட்ட ஒரு சக்தியாகும். சிறப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் 'இட்' செயற்படுவதாக புரொய்ட் கூறுகிறார். அச்செயற்பாடு பிரதான விருப்புக்கள் இரண்டின் தாக்கத்தினால் ஏற்படுகின்றது. அவை பாலியல் விருப்பம், ஆக்கிரமித்தல் அல்லது நாசப்படுத்தல் விருப்பமாகும். இவற்றைச் சிலர் காமாசை, மரணாசை எனக் குறிப்பிடுவர். இவ்விருப்புக்கள் இரண்டையும் செயற்படுத்துகின்ற சக்தியை லிகிடோ சக்தி என புரொய்ட் அறிமுகப்படுத்தியுள்ளார்.

'இட்' சக்தி பலமாகச் செயற்பட்டால் தனிநபர் கலாசாரத்தை விஞ்சிச் செல்லும் விதத்திலான ஒரு நபராக மாறுவார். எனவே தனிநபர்சார் கலாசாரத்தின் சாரத்தையும், பெறுமானத்தையும் ஏற்றுக்கொள்வதில் ஈடுபடுகின்ற சமுகத்தின் ஓர் உண்மையான அங்கத்தவராக அவனை ஆக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற இன்னொரு சக்தி உள்ளது. தனிநபரில் பின்னர் விருத்தியுறுகின்ற அதனை 'சுபர் ஈகோ' என புரொய்ட் அறிமுகப்படுத்தினார். சமய நம்பிக்கை வளர்ந்தோரின் அறிவுறுத்தல்கள் சமுக வரையறைகள் போன்றவற்றின் தாக்கத்தால் அச்சக்தி உருவாகியுள்ளது. அது இட் போன்று பிறப்பிலிருந்தே ஒரு தனிநபரில் உருவாகும் சக்தியல்ல.

அது பிறப்பின் பின்பு சூழலுடன் ஏற்படும் தாக்கத்தின் பேறாகப் பெறும் கற்றலுக்கு ஏற்ப உருவாகின்ற மானசீக நிலையாகும்.

'இட்' என்ற சக்தி குணப்பண்புகள் நல்லது கெட்டது பற்றிக் கவனியாத தேவைகளுக்கு மட்டும் இடமளிக்கின்ற, திருப்தியை மட்டும் எதிர்பார்க்கின்ற ஒரு சுபாவமாகும். அத்துடன் சுபர் ஈகோ, நல்லது என சமுகம் ஏற்றுக் கொள்பவை பற்றி மட்டும் கவனத்திற் கொள்ளும் ஒரு நிலைமை ஆகும். எனவே 'இட்' சக்திக்கு ஏற்ப ஒருவர் செயற்பட்டால் அவர் ஒரு மிருகம் போன்று செயற்படக்கூடியவராவார். அத்துடன் 'சுபர் ஈகோ' மட்டும் செயற்பட்டால் கெட்டது எனக் கருதும் எதுவும் செய்யாத, கடினமான கொள்கைகளைப் பின்பற்றுகின்ற நிறைவான ஓர் உபாசகர் உருவாக முடியும். அவ்விருவரும் சமுகத்துக்குத் தேவையான உண்மையான அங்கத்தவர்களல்ல. அதனால் இவ்விரண்டுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கு இன்னொரு சக்தி உள்ளது என புரொய்ட் கூறுகிறார். அது 'ஈகோ' அல்லது அதியகம் என அவர் குறிப்பிடுகிறார். 'ஈகோ' என்பது மனதின் தர்க்கரீதியான பகுதியாகும். 'இட்' அல்லது 'சுபர் ஈகோ' போன்று முழுமையாகச் செயற்படுவதில்லை. அவ்விரண்டுக்கும் இடையே நின்று செயற்படுவது ஈகோ சக்தியின் தன்மையாகும். அது யதார்த்தவாதி கோட்பாட்டின் செயற்பாடு என அறிமுகப்படுத்தப்படுகிறது. 'ஈகோ' பலமாகும் அளவுக்கு நடுநிலை, யதார்த்தவாதி நபர்கள் உருவாவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

'இட்' உடன் 'சுபர் ஈகோ' அடிக்கடி மோதுவதால் 'இட்' சக்தியால் முழுமையாக செயற்பட்டுத் திருப்தி அடைவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காததால் தனிநபரிடத்தில் தனிமை ஏற்படும். எனினும் தனிமையைக் குறைத்துக் கொள்வதற்காக ஒரு வகை இயல்பான செயலொழுங்கில் ஈடுபடுவதில் தனிநபர் முனைவார். அவ்வாறு செயற்படும் நிகழ்ச்சித்திட்டம் 'பாதுகாப்பு உத்தி' எனக் குறிக்கப்படுகிறது. நனவடி நிலை அப்பாதுகாப்பு உத்தியின் ஒரு பிரதான அம்சமாகும். நனவடி நிலை என்பது 'இட்' செயற்பாடு காரணமாக ஏற்படும் ஆசைகள் திருப்திப்படாமல் அடங்கிவிடுவதையே குறிக்கிறது. அதன்பின் தனிநபர் மூலம் சில நடத்தைகளைக் காட்டுவதற்கு அவ்வாறு அடங்கிய ஆசை அபிப்பிரேரணையாகச் செயற்படும்.

ஒருவரது ஆளுமை அபிவிருத்தியில் சமுக மனவெழுச்சி அம்சங்கள் பற்றிய விடயங்களை விளக்குகின்ற சிக்மன் புரொய்ட் அவ்விடயங்கள் பிள்ளையினது சிறிய வயதில் பெறும் விடயங்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகக் கூறினார். இள வயதில் நடைபெறுகின்ற செயற்பாடுகளூடாகப் பிற்கால ஆளுமையின் சமுக அம்சம் உருவாகின்றது என புரொய்ட் கூறுகிறார்.

பிள்ளை குழந்தைப்பருவத்திலிருந்தே இந்திரியங்கள் மூலம் பெற்றுக் கொள்கின்ற இன்பத்துக்கேற்பவே பிற்கால வாழ்க்கையின் நடத்தைகளை அமைத்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார். ஒரு தனிநபர் இன்ப அனுபவம் பெறும் ஐந்து பருவங்கள் பற்றி அவர் குறிப்பிட்டார்.

### வாய் நிலை

அதில் முதலாவது வாய்ப் பருவமாகும். இது பிறந்தது முதல் 18 மாதங்கள் வரையுள்ள காலமாகும். இப்பருவத்தில் பிள்ளை தாய்ப்பால் அருந்தி இன்பமடையும். தாய் முன்னரே குடிமறக்கச் செய்தால் குழந்தை தோல்வி நிலைக்கு ஆளாகின்றது. தாயின் முலைக் காம்புகளை உறிஞ்சுவதன் மூலம் பிள்ளை இன்பம் அடைகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பிள்ளை திருப்திப்படவில்லையாயின் பிற்கால வாழ்வில் அது பாதிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக ஆளுமையில் சில குறைகள் ஏற்பட முடியும். பிற்காலத்தில் புகைத்தல், அளவு மீறி உண்ணல், நகம், பென்சில்களைக் கடித்தல் போன்ற விடயங்களில் ஈடுபட முனைவர் என புரொய்ட் கூறுகிறார்.

### குத நிலை

இரண்டாவது குதப்பருவமாகும். இரண்டரை வயது முதல் மூன்று வயது வரையான காலமே இப்பருவமாகக் கணிக்கப்படுகின்றது. இப்பருவத்தில் பிள்ளை மலசலங் கழிப்பதனூடாக இன்பம் பெறும். பிள்ளையின் அந்த ஆசையில் உச்சமாகத் திருப்திப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதவிடத்து பிற்காலத்தில் சமூக வாழ்வில் குறைபாடுகள் ஏற்படும் என புரொய்ட் கூறுகிறார். பெற்றோர்கள் சுத்தம் செய்தல் தொடர்பான (மலகூடப் பாவனை பற்றி) பயிற்சி வழங்குவதில் தீவிரமாக ஈடுபடல் பொருத்தமற்றது. அவ்வாறான பயிற்சி மூலம் பிள்ளையின் நடத்தையில் விபரீதங்கள் நிகழ இடமுண்டு. அனாவசியமாக சுத்தம் செய்வதில் ஊக்கம் செலுத்த முடியும். மேலும் நித்திரையில் சிறுநீர் கழித்தல், முரண்டு பிடித்தல், அடிக்கடி கோபம் கொள்ளல், தாயுடன் கோபம் காட்டல் போன்ற பண்புகள் வெளிப்பட முடியும். சமூக ரீதியில் போன்றே மனவெழுச்சி ரீதியிலான நடத்தைக்கு இப்பருவப் பிள்ளையின் திருப்தி பெரும்பாலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

### பாலுறுப்பு நிலை

மூன்றாவது இலிங்கப் பருவமாகும். இது 3 வயது முதல் 7 வயது வரையுள்ள பருவமாகும். இப்பருவத்தில் பிள்ளையின் அவதானம் பாலுறுப்புப் பகுதியில் செலுத்தப்படும். பாலுறுப்புக்களைத் தொடுவதன் மூலம் பிள்ளை திருப்தி அடைகின்றது. அத்திருப்தி அடைதல் பிற்கால வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும். பெற்றோர்கள் மூலம் பிள்ளையின் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணலாம். இது பெற்றோர்கள் பொறுமையுடனும் கவனமாகவும் பார்க்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். பாலியல் உறுப்பைத் தொடுவதைப் படிப்படியாக, விவேகமாக நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் பிற்கால வாழ்வில் திருமணஞ் செய்யப் பயப்படும் நிலை உருவாகும். அனைத்து ஆண்பிள்ளைகளும் இப்பருவத்தில் தாயுடன் பாலியல் ரீதியில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும். இது ஈடிபஸ் சிக்கல் எனப்படும். அனைத்துப் பெண்பிள்ளைகளும் தமது தந்தையுடன் பாலியல் ரீதியில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும். இது இலெக்ரா சிக்கல் எனப்படும்.

### மறை நிலை

நான்காவது நிலின பருவமாகும். இது 8 வயது முதல் 11 வயது வரையுள்ள காலமாகும். இப்பருவத்தில் பிள்ளையுள் பாலியல் சிந்தனை மறைந்து செல்லும் நிலை உருவாகும். இப்பருவம் மிகவும் சமாதானமான நன்னிலையிலுள்ள பருவமாகும்.

### விருத்தாப்பிய காமப் பருவம் - பிறப்பிக்கும் நிலை

ஐந்தாவது விருத்தாப்பிய காமப் பருவம். இப்பருவம் 12 வயதிலிருந்து ஆரம்பமாகும். இதற்கு முந்திய பருவத்தில் மறைந்திருந்த பாலியல் ஆசை மீண்டும் வெளிப்பட ஆரம்பிக்கும். எதிர்ப்பாலாரிடமும் ஒத்த பாலாரிடமும் அவர்களின் கவனம் திரும்பும்.

தனிநபரின் தேவைகள், பாலியல் ஆசைகள் திருப்திப்படாதபோது, கட்டுப்படுத்தப்படும்போது சிறு மானசீக நோய் அல்லது நியூரோசியா நோய் ஏற்படுவதற்கு அவகாசம் உருவாவதாக புரொய்ட் வலியுறுத்துகிறார்.

மனவெழுச்சிசார் விடயங்களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிக அவதானம் செலுத்த வேண்டும். அதற்குக் காரணம் ஒரு பிள்ளையின் மனவெழுச்சி பிள்ளையின் ஆளுமையின் மிக முக்கியமான ஒரு பண்பாக இருப்பதாகும். மனவெழுச்சி சார் அம்சத்தின் மூலம் ஒரு பிள்ளையின் மனம், அம்மனதில் உருவாகும் எண்ணங்கள் ஊடாக ஏற்படும் உணர்வுகள் குறிப்பிடப்படுகின்றது. பிள்ளை தெளிவு பெற்றதாக இருத்தல், குழம்பிய சுபாவத்தில் இருத்தல், கோபமாக இருத்தல் போன்ற தன்மைகளைக் காட்டுவது அதனிடம் காணப்படும் மனவெழுச்சிப் பண்பு காரணமாகவாகும். ஒரு சந்தர்ப்பத்தில் மனவெழுச்சி மிகக் கடினமான, வன்மையான, பலமான, வேகமான சுபாவத்தைப் பெற முடியும். அவ்வேளையில் பிள்ளை மிக மூர்க்க நிலைக்கு ஆளாகும். பிள்ளையிடத்துப் பல்வேறு விதமான மனவெழுச்சிகள் உருவாகும். சோகம், கவலை, பயம், பொறாமை, கஞ்சத்தனம், வைரம் போன்ற மனவெழுச்சிகள் போன்றே மகிழ்ச்சி, சந்தோசம், நிம்மதி போன்ற மனவெழுச்சிகளும் பிள்ளையிடம் உருவாகும். இம் மனவெழுச்சிக்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளப் பிள்ளை பழகவேண்டும்.

மனவெழுச்சி அபிவிருத்தியில் முதிர்ச்சியும் சூழலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இங்கு குடும்பச் சூழல் மிகவும் முக்கியமானது. பிள்ளைகளுக்குப் பெற்றோரின் அன்பு குறைவின்றிக் கிடைப்பதையும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் சிறந்த மனவெழுச்சித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதையும் காரணமாகக் கொண்டு மனவெழுச்சி அபிவிருத்தி சமநிலையாக நடைபெறும். அவ்வாறு இல்லாவிட்டால் பிள்ளையின் மனவெழுச்சியில் சில சில குறைபாடுகள் ஏற்படும். பெற்றோரின் அன்பு குறைவின்றிக் கிடைத்த ஒரு பிள்ளை தமது சூழலில் வாழும் ஏனைய உயிர்கள் தொடர்பாக அன்பு, கருணை, இரக்கம் உள்ள ஒரு பிள்ளையாக மாறும். பிள்ளைக்குத் தான் வாழும் சூழல் பாதுகாப்பு, துணை என்பவை உள்ளன என விளங்கியதும் பிள்ளைகளின் மனவெழுச்சி அபிவிருத்தி சமநிலையாக நிகழும். அதன்படி பிள்ளை சமுகத்தில் ஏனையோருடன் மிகச் சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்பும் திறனைப் பெறும். அவ்வாறான பிள்ளைகளுக்குக் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்து கொண்டு செல்ல வசதிகள் ஏற்படும். பெற்றோரின் அன்பு கிடைக்காத பிள்ளைகள் சமுகத்தில் பல்வேறு நாசகார செயல்களுக்குத் தூண்டப்பட்டுள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிக மோசமான குற்றவாளிகளின் கடந்த காலத் தகவல்களை வினவிய போது, அன்பு கிடைக்காமல் சீர்குலைந்த குடும்பங்களிலிருந்துதான் அநேகமான குற்றவாளிகள் காணப்படுகின்றார்கள் என்பது தெரிய வந்தது. இளவயதுக் குற்றவாளிகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தபோதும் அவர்கள் மனவெழுச்சி ரீதியாக கடுமையான, வன்முறைக் குற்றவாளிகள் நிலைக்கு, பெற்றோர்களின் அன்பு, பாதுகாப்பு கிடைக்காத காரணத்தினாலேயே தூண்டப்பட்டுள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

## ● விவேக அபிவிருத்தி பற்றிய பியாஜேயின் கோட்பாடு

அநேகமான உளவியலாளர்கள் விவேகம் ஒருவரின் பரம்பரையால் உரிமையாக்கிக் கொள்கின்ற ஒரு சக்தி என ஏற்றுக் கொண்டுள்ளனர். பியாஜே அக்கருத்தை மறுதலிக்கின்றார். பிள்ளை பிறக்கும் போது விவேக விருத்திக்கு ஏற்புடையதான மானசீகக் கோலமொன்றை (தளக் கோலமெனக் கருதக் கூடிய ஒரு சுபாவம்) மட்டுமே பிள்ளை உரிமையாக்கிக் கொள்கிறது என அவர் கூறுகிறார். அந்த மானசீகத் திட்டம் ஸ்கீமா அனுபவத் திரளமைப்பு என பியாஜே அறிமுகப்படுத்தியுள்ளார். பாலை உறிஞ்சுதல், அழுதல் போன்ற செயற்பாடுகள் அந்த ஸ்கீமா

அடிப்படையில் வருகின்றவை. சூழலுடன் நிகழுகின்ற இடை வினைகள் காரணமாக பின்னர் படிப்படியாக விவேகம் அபிவிருத்தி அடையும்.

விவேக அபிவிருத்தி, பிள்ளையின் உடல்சார் முதிர்ச்சியுடன் நடைபெறுகின்ற ஒன்றாகும். உடல் சார் அபிவிருத்தி நரம்புத் தொகுதியின் வளர்ச்சியுடனேயே நடைபெறுகின்றது. நரம்புத் தொகுதியின் வளர்ச்சி பிறப்பின் பின்பு நடைபெறுவதால், உடல் முதிர்ச்சிக்கு ஏற்பவே விவேக அபிவிருத்தி தங்கியுள்ளது என பியாஜே தீர்மானிக்கிறார்.

விவேக அபிவிருத்தி பற்றிய பியாஜேயின் கோட்பாடு, அவரது மூன்று பிள்ளைகள் ஊடாக எழுமாறான ஆய்வு முறை மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பத்தில் கட்டியெழுப்பப்பட்டது. பின்னர் பல்வேறு உளவியலாளர்கள் உலகின் பல்வேறு பிரதேசங்களுக்கு உரியதாக அக்கண்டு பிடிப்புக்களைப் பரிசோதித்துப் பார்த்துள்ளனர். விவேக அபிவிருத்தியில் ஒரு விதமான அமைப்பு காணப்படுவதாக பியாஜே கூறுகிறார். அதன் பிரதான அங்கங்கள் இரண்டு உள்ளன. அதாவது ஒழுங்கமைப்பும் ஒத்துப்போகும் தன்மையுமாகும். இவ்விரு அங்கங்களையும் விரிவாக விளக்குவதாயின், ஒழுங்கமைப்பு என்பது சூழலை மாற்றுவது எனவும், ஒத்துப்போகும் தன்மை என்பது சூழலுக்கு ஏற்பத் தான் மாறுவது எனவும் குறிப்பிடலாம்.

ஒழுங்கமைப்பு (ழுசபயனைையவழைn) ஒத்துப்போகும் தன்மை (யுனயிவயவழைn) இரண்டுக்கும் இடையே உள்ளக மோதல் காணப்படுகின்றது. தனிநபர் செயற்பாட்டின்போது ஒழுங்கமைப்பு, ஒத்துப்போகும் தன்மை ஆகிய இரண்டுக்கும் இடையே சமநிலைக்குத் தடை ஏற்படுதல், அவ்வாறான மோதல் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும். இச் சமநிலையற்ற தன்மையை இல்லாமல் ஆக்குவதற்கு சில சில செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக உயிரியில் யாதேனும் தூண்டல் ஏற்படும். இக் கட்டாயத் தூண்டல் விவேக அபிவிருத்தியை ஏற்படுத்தும். இதன்படி விவேகம் என்பது, ஒழுங்கமைப்புக்கும் ஒத்துப்போகும் தன்மைக்கும் இடையே உள்ள சமநிலைத் தன்மை என பியாஜே விளக்கமளிக்கின்றார்.
ஒத்துப்போகும் தன்மைச் செயலொழுங்கில் இருபக்கங்கள் இருக்கின்றன. அதாவது,

1. தன்மயமாதல் (Assimilation)
2. இசைவாக்கம் (Accomodation)

ஒழுங்கமைப்புக்கும், ஒத்துப்போகும் தன்மைக்கும் இடையே மோதலுக்கு ஈடுகொடுப்பதற்காக உள்ளக மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள உயிரிக்கு நேருகின்றது. அதற்காக உடல்சார், மானசீக அமைப்பைக் கட்டியெழுப்பிக்கொண்டு, ஒத்துப்போகும் செயலுக்காகச் சில செயற்படு தன்மையை வெளிக்கொணர உள்ள ஆயத்த நிலை தன்மயமாதல் ஆகும். கையில் கிடைக்கும் அனைத்தையும் சிறு பிள்ளை வாயில் போடுதல் ஒத்துப்போகும் தன்மைக்கு ஆயத்தநிலையாக அமைவதோடு அது தன்மயமாதலாக அமையும். ஒத்துப்போகும் தன்மை என்பது இவ்வாறு தன்மயமாதலில் ஈடுபடும் அதேவேளை வாழ்வில் உள்ள மானசீக அமைப்பை மாற்றிக் கொள்வதாகும். இவ்வாறு மாறுவது மானசீக அமைப்பு மட்டுமே. இவ்வாறு ஏற்படும் மாற்றங்கள் காரணமாக விவேகம் படிப்படியாக விருத்தி அடையும்.

பியாஜேயினுடைய கருத்தின்படி ஆசிரியர் என்பவர், முன்னமே தயார் செய்துகொண்ட அறிவைப் (Readymade Knowledge) பிள்ளைகளுக்குக் கடத்துகின்ற (Transmitting) ஒருவராக அன்றி தன்னுடைய அனுபவங்களைப் பயிர் செய்து கொள்வதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்கும் ஒருவராவார்.

விவேக வளர்ச்சியிலே பிறக்கும் மேலும் இரண்டு பண்புகள் பற்றி பியாஜே குறிப்பிட்டுள்ளார். அதாவது,

1. தழுவல் ஆற்றல்
2. பின் திரும்புமியல்பு ஆற்றல்

தழுவல் என்பது தன்மயமாக்கல், தன்னமைவாக்கல் இரண்டுக்கும் இடையில் உண்டாகும் சமநிலையின் பின்னர் நபரிடம் மீதியாகும் விவேக ஆற்றல் ஆகும். அடுத்த நிகழ்வின் முன்னேற்றத்திற்கு அது உதவுவதாக அமையும். பின் திரும்பும் இயல்பு ஆற்றல் என்பது ஏதாவதொரு சிந்தனைத் திரளமைப்பில் ஏற்கனவே உள்ள நிலைமை ஒன்றை நோக்கித் திரும்பிச் செல்லும் ஆற்றலாகும். விருத்தியின் மூலம் உண்டாகும் பண்புசார் தன்மையை, முழுமையான விருத்தியாக்கிக் கொள்வதற்கு இப்பின்திரும்புமியல்பு ஆற்றல் பெரிதும் உதவும்.

விவேக வளர்ச்சி பற்றிய பியாஜேயினுடைய கொள்கை தொடர்பான மேலும் முக்கியமான ஒரு பண்பு, சிந்தனை வளர்ச்சி தொடர்பான பருவங்களை முன்வைப்பதாகும். இப் பருவங்கள் ஆரம்பிக்கும் ஒழுங்குமுறை ஒன்றையும் வயதெல்லை ஒன்றையும் அவர் முன்வைத்துள்ளார். ஏதாவதொரு விவேகமய சக்தி ஆரம்பிக்கும் வயதெல்லை மக்கள் சமுகத்தின்படி பெரும்பாலும் வேறுபட முடியும் என அவர் கூறியதோடு, பிரதான வளர்ச்சிப் பருவங்கள் நான்கை பியாஜே முன்வைத்துள்ளார். அவை பின்வருமாறு:

1. புலன் இயக்கப் பருவம்
2. முன் சிந்தனைப் பருவம்
3. தூல சிந்தனைப் பருவம்
4. நியம சிந்தனைப் பருவம்

## 1. புலன் இயக்கப் பருவம்

இப்பருவம் பிறப்பு முதல் இரண்டு வயது வரையிலான காலத்திற்கிடைப்பட்டதாகும். குழந்தை தனக்குள் ஆக்கிய அனுபவத் திரளமைப்பை (புலக்காட்சியை) பயன்படுத்திக் கொண்டு, புலனியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடும். பாலை உறிஞ்சல், ஏதாவதொன்றைப் பிடித்தல், சத்தங்களை வெளியிடுதல் போன்றவை அனுபவத் திரளமைப்பைக் காரணமாகக் கொண்டு நிகழும். உயிரியல் விஞ்ஞான ரீதியில் பிறப்பிலிருந்து வரும் சில பண்புகளைப் புதிய பழக்கங்களுடனும் அறிவாற்றலுடனும் தொடர்புபடுத்துவார். அதன் மூலம் புதிய அனுபவங்களுடன் தன்மயமாக்கலிலும், தன்னமைவாக்கலிலும் குழந்தை ஈடுபடும். வெளியில் நடைபெறும் மலர்ச்சி பற்றி அதற்குத் தெரிய வருவதால் ஒவ்வொரு பொருளையும் அவற்றிற்கிடையில் இடம்பெறும் தொடர்புகளையும் தெளிவு பெறுவதற்கு ஆரம்பிக்கும். இக்காலத்தில் குழந்தை சூழலில் நிகழும் சில சத்தங்களையும் பாவனை செய்து ஒவ்வொரு செயற்பாடுகளிலும் ஈடுபடும். சில வேளைகளில் சத்தத்தைக் கேட்கும் தேவை காரணமாக கிலுகிலுப்பு போன்ற ஒன்றை அசைப்பதை இப்பருவத்திலே காணமுடியும். இப்பருவத்திலே அனுபவத்திரளமைப்பில் முறையான வளர்ச்சியொன்றைக் காணமுடியும். காலத்தையும் நிகழ்வுகளுக்கான காரணத்தையும் விளங்குவதற்கு முடியும். அதேபோல் பொருளொன்றின் நிலையான தன்மை, இடைவெளி சம்பந்தமான கருத்துகளும் எண்ணக்கருக்களும் பற்றிய விளக்கம் வியாபிக்க ஆரம்பிக்கும். நடத்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக முறைசார் நிலைக்கு மாற ஆரம்பிக்கும். இடைவெளி, தூ ரம் பற்றிய விளக்கம் வளர்ச்சியுறும். பாவனை செய்தல் செயற்பாடுகளில் பிரதான பண்பாக

மாறிவிடும். இப்பருவத்தில் விளையாடுவதையும் பாவனைசெய்வதையும் அதிகமாகக் காணமுடியும். பிள்ளை வளர்ந்தவர்களுடைய சிக்கலான நடத்தைகளைப் பாவனை செய்யும்.

## 2. முன்சிந்தனைப் பருவம்

ஏறத்தாழ இரண்டு வயதிலிருந்து ஏழு வயது வரைக்குமான காலப்பகுதி இப்பருவத்தில் அடங்கும். புலன் இயக்கப் பருவத்தில் இருந்து தூல சிந்தனைப் பருவத்திற்குப் பிரவேசம் நிகழ்வது முன் சிந்தனைப் பருவத்தினூடாகவே ஆகும். ஒவ்வொரு குறியீடுகளை உள்வாங்குவதன் மூலம் இப்பிரவேசம் நிகழும். மொழிவிருத்தி இப்பருவத்திலே காணக்கூடிய ஒரு விசேட பண்பாகும். மொழிவிருத்தி காரணமாக, பொருட்களைக் குறியீட்டு ரீதியாகக் காண்பதற்குப் பிள்ளை பயிலும். நான்கு வருடம் ஆகும்போது மொழி விருத்தி துரிதமாக நிகழ்வதால் எண்ணக்கரு விருத்தியும் வியாபிக்கும். மொழிப் பயன்பாடு காரணமாகச் சிந்தனையின் வேகமும் சுபாவமும் வேறுபடும். மொழி காரணமாக நிகழ்காலச் செயற்பாட்டின் மூலம் தூர சிந்தனையில் ஈடுபடும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளும். இப்பருவமாகும்போது பிள்ளை மொழியை ஓரளவுக்குப் பிரயோகிக்கும். இப்பருவத்திலே நடத்தைகளில் காணக்கிடைக்கும் பண்புகள் சில பின்வருமாறு:

- 1,2,3,4,5 போன்ற ஒழுங்கமைப்பைத் திரும்பிச் சிந்திக்கும் ஆற்றல் இல்லாமை.
- தன்மய சுபாவத்தைப் பெறுதல், தன்மய சுபாவம் காரணமாக வேறு ஒருவருடைய கண்ணோட்டத்தில் ஒன்றைப் பார்க்கும் ஆற்றல் இல்லாமை. மற்றைய அனைவரும் தாம் சிந்திக்கும் முறையில், தான் சிந்திப்பவற்றையே சிந்திப்பதாக பிள்ளை கருதும். இதனால் தன்னுடைய சிந்தனைகளின் சரி பிழை பற்றி வினவுவதற்கு பிள்ளையால் முடியாது.
- ஒரு சந்தர்ப்பத்திலே ஒரு காரணத்தை மட்டும் தொடர்புபடுத்தி நிகழ்வைக் காணல், அது தொடர்பான வேறு காரணங்களைக் காண்பதற்கு முடியாமை.
- நிகழ்வொன்றை ஒரு காரணத்திற்கு மட்டும் வரையறுத்து அதன் முழுமையைக் காணமுடியாமை.
- ஒரு விடயத்திலிருந்து இன்னுமொரு விடயத்திற்கு மாறமுடியுமே தவிர ஒரு விடயத்தை மட்டும் வைத்துக்கொண்டு பொதுமைப்படுத்தும் ஆற்றல் இல்லாமை.
- தழுவல் பற்றிய ஆற்றலும் பிள்ளையிடத்தில் உண்டு. தழுவல் என்பது ஒரு பொருளினது வேறு பண்புகள் வேறுபட்டாலும் பிரதான பண்பு மாறுபடாது என்பதை விளங்கிக் கொள்வதாகும்.

## 3. தூல சிந்தனைப் பருவம்

ஏழு வயதிலிருந்து பதினொரு வயது வரையிலான காலப்பகுதியை இப்பருவம் உள்ளடக்கும். இதற்கு முன்னுள்ள பருவத்திலிருந்த முதிர்ச்சி அடையாத சில உளப் பண்புகள் இப்பருவத்திலே இல்லாதொழிந்து விடும். ஒவ்வொன்றையும் தொகுதியாக்கவும் வகைப்படுத்தவும் தர்க்கரீதியாகச் சிந்திப்பதற்கும் பெறுமதிக்கேற்ப பொருட்களை ஒழுங்குமுறையாக வைக்கவும் கூடிய ஆற்றல் பிள்ளைக்குக் கிடைக்கும். இப்பருவத்திலேயே பொருட்களின் அளவு, நிறை, கனவளவு போன்ற பண்புகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல்கள் பிள்ளையிடத்தில் விருத்தியுறும். எடுத்துக்காட்டாக விளக்குவதெனில், உயர்ந்த ஒல்லிய கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் இருக்கும் நீரை, கட்டையான அகன்ற கண்ணாடிப் பாத்திரம் ஒன்றுக்குள் இட்டாலும் அதன் கனவளவு

மாறாது என்பது இப்பருவத்தில் உள்ள பிள்ளைகளுக்கு விளங்கும். இதனை அளவு, திரவக்காப்பு பற்றிய விளக்கமாகவும் கொள்ளலாம். அவ்வாறே பின்னோக்கிச் சிந்திப்பது அதாவது பின் திரும்புமியல்பு பற்றிய ஆற்றலும் தர்க்க சிந்தனையும் இப்பருவத்தில் உதயமாகும்.

பிள்ளை தன் மைய சிந்தனையில் இருந்து விடுபடும். அடுத்தவர்களின் கண்ணோட்டத்தின் ஊடாகப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும். பிள்ளை தன் மைய நிலையில் இருந்து விடுபடுவது சமுகத்தோடு உண்டாக்கிக் கொள்ளும் இடைவினைத் தொடர்புகள் காரணத்தினாலாகும். எனினும் இப்பருவத்திலும் பிரச்சினை விடுவிக்க முடிவது ஒன்றிணைந்த பொருட்கள் அல்லது நிகழ்வுகளை மையமாகக் கொண்டு மட்டுமேயாகும்.

## 4. நியம சிந்தனைப் பருவம்

இப்பருவம் 12வது வயதளவில் ஆரம்பித்து, முதிர் பருவம் வரையிலான வயதெல்லை வரைக்கும் நீடித்து காணப்படும். இக்காலத்திலேயே தர்க்கிக்கும் சிந்தனையில் விருத்தியைக் காணமுடியும். தூல சிந்தனைப் பருவத்திலே பிள்ளை தர்க்க ரீதியாகப் பிரச்சினைகளை விடுவித்தாலும், அது ஒன்றிணைந்த விடயங்கள் ஊடாகவே நிகழும். இதன் காரணமாகப் பிரச்சினை விடுவித்தல் அறிதல் ஆட்சியுடன் தொடர்புப்பட்டுக் காணப்படுகிறது. எனினும் நியம சிந்தனைப்பருவத்திலேயே நிகழ்கால, இறந்தகால, எதிர்காலப் பிரச்சினைகளை விடுவிப்பது பற்றிய ஆற்றல்களைப் போலவே வாய்மொழி ஊடாகப் பிரச்சினைகளை விடுவிக்கப் பெற்றுக் கொள்வர். பிரச்சினைகளை விடுவிப்பதற்குக் கொள்கைகளை இணைத்துக் கொள்வதற்கு முடியும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு பிரவேச முறைகளைப் பின்பற்றுவர். பிரச்சினைகளை விடுவிப்பதிலே ஒன்றிணைந்த சிந்தனையைப் பயன்படுத்துவர். கூட்டுப் பொருட்கள் அல்லது புலன் அனுபவங்கள் இல்லாதும் வெறுமையாக (மனதால் மட்டும்) கிரகித்தல் சிந்தனையில் ஈடுபட முடியும். நுண்மதிச் சோதனைப் பிரச்சினைகளையும் கணிதப் பிரச்சினைகளையும் மனக்கணிதமாகத் தீர்ப்பதற்கு மனதால் நினைத்துத் தர்க்கம் செய்ய முடியும். அடங்காத எண்ணக்கருவைக் கருக்கொள்ளவும் முடியும். பியாஜேயின் வளர்ச்சிக்கட்டங்களின் படி விவேக வளர்ச்சியின் உச்சநிலை இந்த வயதெல்லையிலே அமையும். உளச்செயற்பாடுகள் தொடர்பான சகல ஆற்றல்களும் இப்பருவத்திலேயே கிடைப்பதுண்டு. அவ்வாறு இல்லாவிட்டால் அறிவு வளர்ச்சியில் ஏதாவது குறைபாடு இருப்பதாக எண்ணமுடியும்.

## ● எரிக் எரிக்சனுடைய சமுக உளவியல் வளர்ச்சிக் கொள்கை

இக் கொள்கை ஒருவருடைய முழு வாழ்க்கைக் காலத்திலும் நிகழும் உளச் சமுக விருத்தி பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும். எரிக்சனின் கருத்துப்படி ஒரு நபர் தொடர்பாக நிகழும் அபிவிருத்தி, அவர் தனது சமுகச் சூழலோடு வைத்திருக்கும் தொடர்புகளை மையமாக வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது. பிள்ளையினுடைய பிறப்பு முதல் பிள்ளை சூழலோடு பல்வேறு நெருக்குதல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் ஆளாகும். பிள்ளை இப்பிரச்சினைகளுக்குத் தனக்கே உரிய உளவியல் தன்மை ஊடாக முகங்கொடுப்பதற்கு முயற்சிக்கும்.

பிள்ளை முதிர்ச்சி நிலைக்கு உட்படும்போது இப்பிரச்சினைகளின் சிக்கல் தன்மை அதிகரிக்கும். இவ்வபிவிருத்திச் செயலொழுங்கில் பல்வேறு பருவங்களிலே பிள்ளை புதிய புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும். அப்புதிய பிரச்சினைகளை உரிய வளர்ச்சிப்பருவத்திற்கு

ஏற்ற பிரவேசம் மூலம் விடுவிக்க வேண்டும். இந்த ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் உரிய பிரச்சினைகளை விடுவிக்கும் முறை பிள்ளையினுடைய ஆளுமை வளர்ச்சி தொடர்பாக முக்கியமாகும். அவை தனியாளின் ஆளுமைத் தொடர்பான வளர்ச்சியிலே புனர்ஜீவ மற்றும் பின்னடைவான தாக்கங்களாகச் செயற்படுவதற்கு ஆரம்பிக்கும். எரிக்சனுடைய கொள்கை அதுபோன்ற வளர்ச்சிப்பருவங்கள் எட்டை எடுத்துக்காட்டும். இப்பருவங்கள் எட்டும் ஒரு தனியாளின் பூரண வாழ்க்கைக்குப் பொருத்தமான உள, சமூக வளர்ச்சியைக் கொண்டிருக்கும். அப்பருவங்கள் எட்டையும் இவ்வாறு காட்ட முடியும்.

| உள-சமுக வளர்ச்சிப் பருவங்கள் | நிச்சயமான வயது இடைவெளி |
|---|---|
| நம்பிக்கைக்கு எதிரான அவநம்பிக்கை | பிறப்பிலிருந்து 1 ½ வயது வரை |
| சுயாதீனத்துக்கு எதிரான வெட்கமும் சந்தேகமும் | 1 ½ வயதிலிருந்து 3 வயது வரை |
| | 3 வயதிலிருந்து 6 வயது வரை |
| ஆரம்ப சக்திக்கு எதிரான குற்ற நிலை | 6 வயதிலிருந்து 12 வயது வரை |
| செயற்பாட்டுக்கு எதிரான குற்ற நிலை | நவ குமரப்பருவம் (12-20 வயது வரை) |
| அன்னியோன்னியத்துக்கு எதிரான குழப்ப நிலை | முன் முதுமைப் பருவம் (20-45 வயது வரை) |
| நட்புக்கு எதிரான தனிமையாதல் | இடைநிலை முதுமைப்பருவம் (45-65 வயது வரை) |
| உற்பத்திக்கு எதிரான ஓரிடத்தில் நிற்கின்ற | |
| மகிழ்வுக்கு எதிரான துக்கநிலை | பின் முதுமைப் பருவம் (65 வயதின் பின்) |

இப்பருவங்கள் தொடர்பாகக் காட்டப்படும் பண்புகளைப் பார்க்கும் போது தெளிவாவது ஆளுமை கட்டியெழுப்பப்படுவதற்கான அளவுகோல் யாது என்பதாகும். புனர்ஜீவ மற்றும் பின்னடைவான சகல குணங்களும் ஒருவரிடத்தில் உண்டாவது எரிக்சன் கூறும் விதத்துக்கு ஏற்ப தனியாள் தனது சூழலோடு தொடர்புபடும் விதத்திலேயாகும். ஒருவருடைய ஆளுமை வளர்ச்சி இப்பருவங்கள் ஊடாக படிப்படியாக நிகழும். தனியாள் ஆளுமை கட்டாயமாக இந்த இரு அந்தங்களில் செல்லும் என நினைக்க முடியாது. இப்பருவங்களின் ஒன்றிணைந்ததான ஆளுமை வளர்ச்சியொன்றை ஒருவரிடத்தில் காண்பதற்கு முடியும். இப்பருவங்கள் பற்றிய சுருக்கமான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

முதலாவது பருவம் (நம்பிக்கைக்கு எதிரான அவநம்பிக்கைப் பருவம் - பிறப்பிலிருந்து 1½ வயது வரை)

இக்காலத்தில் பிள்ளையினுடைய செயற்பாடு பூரணமாகத் தங்கியிருப்பது தாய் அல்லது பாதுகாவலரிடமாகும். பிள்ளையினுடைய தேவைகளின் கூட்டு தங்கியிருப்பது இத் தனிநபர்களைப் பொறுத்தேயாகும். போஷணை அளிக்கப்படும் முறை, பாதுகாக்கப்படும் முறை போன்ற சகல நிலைகளுக்கேற்பவும் பிள்ளையிடத்தில் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பற்ற தன்மை பற்றிய, நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை பற்றிய துலங்கல்கள் வடிவமையும்.

இரண்டாவது பருவம் (சுயாதீனத்துக்கு எதிரான வெட்கமும் சந்தேகமும் நீடிக்கும் பருவம் - 1½ முதல் 3 வயது வரை)

முதல் 1½ வயதிலும் தான் சுற்றுப்புறச் சூழல் தொடர்பாகக் கட்டியெழுப்பிய நம்பிக்கை அல்லது அவநம்பிக்கையை மனதில் இருத்திக் கொண்டு பிள்ளை இரண்டாவது வளர்ச்சிப் பருவத்திற்குள் பிரவேசிக்கும். இக்காலத்தினுள் பிள்ளை உடலியல் செயற்பாடுகள் தொடர்பாகவும், மொழி ஆற்றல்கள் தொடர்பாகவும் போதுமான அளவு முன்னேற்றமொன்றை வெளிக்காட்டும்.

இச்சக்தியைப் பாவித்து பிள்ளை தமது சூழல் ஆராய்ச்சிக்கு உட்படும். தனது சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளை இப்பருவத்தில் முயற்சி எடுக்கும். அலைந்து திரிதல், ஓடுதல், தள்ளுதல், இழுத்தல், தடவுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைக்கு உண்மையான பாதுகாப்பு இக்காலத்தில் தேவைப்படும். அதனால் இப்பருவத்தில் தனது சூழலில் உள்ள பிரச்சினைக்குரிய தேவைகளுக்கும், சுயேச்சைத் தன்மையை அண்மிக்கச் செய்வதற்கான தேவைகளுக்கும் இடையில் சமநிலையொன்றைக் கட்டியெழுப்புவதற்காகப் பிள்ளைக்குப் பெற்றோர்கள் மூலமாகவும் வளர்ந்தவர்களின் மூலமாகவும் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படல் வேண்டும்.

மூன்றாவது பருவம் (ஆரம்ப சக்திக்கு எதிரான நிலை - நீடிக்கும் பருவம் 3-6 வயது வரை)
முதலாவது பருவத்திலும் இரண்டாவது பருவத்திலும் கட்டியெழுப்பப்படும் நம்பிக்கைகளும் சுயாதீனமும் தொடர்பான உணர்வுகளுடன் மூன்றாவது பருவத்துக்கு உள்வாங்கப்படும் பிள்ளை தனது சூழலுடன் இடைவினைத் தொடர்பில் ஈடுபட முன்வரும். எல்லாவற்றைப் பற்றியும் கேள்விகளைக் கேட்பதற்கு பிள்ளை ஆரம்பிக்கும். முடிவில்லாது தனது சூழல் ஆராய்ச்சியில் ஈடுபடும். பல்வேறு விதமான செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும். இச்செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் போது கேட்கும் கேள்விகளுக்குப் பெற்றோரிடமிருந்து கிடைக்கும் துலங்கள் எதிர்கால வாழ்க்கையில் செய்யும் நடவடிக்கைகளில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தும். பிள்ளை செய்யும் நடவடிக்கைகளுக்குத் தடை செய்யும் அளவுக்குப் பிள்ளையுடைய ஆரம்ப சக்தி இல்லாது போய்விடும். தடைசெய்தல், குறை கூறுதல், தோல்வியை இழிவாகக் கருதுதல் பிள்ளையுடைய ஆரம்ப சக்தியை மழுங்கச் செய்யும். இதனால் பிள்ளை பின்தங்குவதற்கு ஆரம்பிக்கும். ஆரம்ப சக்தியை கனவு நிலைப்படுத்தும். சிறிய தோல்விகள் தொடர்பாகச் செய்யும் ஏச்சுப் பேச்சுக்கள், பகிடிபண்ணல் காரணமாக பிள்ளையிடத்தில் குற்ற உணர்வு இழையோடும். இந் நிலைமை பிள்ளையினுடைய ஆளுமை விருத்திக்குத் தடையை ஏற்படுத்தும். அதனால் இப்பருவத்தினுள் நல்லதொரு வழிகாட்டலுடன் கூடிய, உற்சாகப்படுத்தல் தேவைப்படுவதுடன், பிள்ளையினுடைய ஆராய்ச்சி சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நான்காவது பருவம் (செயற்பாடு என்பதற்கு எதிரான கனவுநிலை, நீடிக்கும் பருவம் 6-12 வயது வரை)
இப்பருவத்தினுள் பிள்ளை முறைசார் கல்விக்காகப் பாடசாலையில் உட்பிரவேசிக்கும். இதன் காரணமாகப் பிள்ளைக்குப் பல்வேறு ஆற்றல்களை மேலோங்கச் செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். உயர் செயலடைவினை அடைந்து கொள்ளும் முகமாக இக்காலத்தில் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் பிள்ளைக்குப் பெரிதும் தாக்கம் உண்டாகும். சில நேரங்களில் ஒரு பிள்ளை இக்காலத்தில் சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்க முடியும். இச்சகல நடவடிக்கைகளிலும் ஆசிரியர்களாலும் பிள்ளைக்கு நல்ல செயலடைவினைக் காட்ட முடியும். அவ்வாறான ஒரு பிள்ளை மென்மேலும் முயற்சியோடு வேலை செய்து மேலும் உயர் செயலடைவினைக் காட்டுவதற்கு உற்சாகப்படுவதுண்டு. மறுபுறமாகப் பிள்ளையினுடைய செயலடைவு மகிழ்ச்சியற்றதாயின் ஆசிரியர்களுடைய, பெற்றோர்களுடைய ஏச்சுப்பேச்சுக்கு உள்ளாகிப் பிள்ளையினிடத்தில் உளக்குறைபாடு ஏற்படுவதற்கு இடமுண்டு. இதனால் இப்பருவத்தில் பிள்ளையிடத்தில் கட்டியெழுப்பப்படும் செயற்றிறமைகள் அல்லது உளக்குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளை விடுவிப்பதற்காகப் பிள்ளைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் ஆசிரியர்களுடையதும், பெற்றோர்களுடையதும் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும்.

ஐந்தாவது பருவம் (அன்னியோன்னியத்துக்கு எதிரான குழப்பம் விளைவிக்கும் பருவம் 12-20 வயது வரை)

இப்பருவத்தில் பிள்ளை நவ குமரப்பருவ வயதுக்குள் பிரவேசிப்பர். அதன் காரணமாக அன்னியோன்னியத்துக்கு எதிராக எழும் குழப்ப நிலை தொடர்பான பிரச்சினையான நிலைமைக்குப் பிள்ளை உட்படும். இப்பருவமாகும் வரை பிள்ளையிடத்தில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை, சுயாதீனம், ஆரம்ப சக்தியும் செயற்றிறமையும் என்பவை பற்றிய உணர்வுகள், நவ குமரப்பருவத்துக்கு உள்ளாவதோடு அன்னியோன்னிய நிலையைக் கட்டியெழுப்பல் தொடர்பான உணர்வாகப் பிள்ளையிடத்தில் ஏற்படுவதற்கு இடம் உண்டு. உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் நிகழும் மிக வேகமான மாற்றங்கள் காரணமாகத் தான் யார் என்பதை விளங்கும் தேவை பிள்ளையிடத்தில் உண்டாகும். இது வரைக்கும் பிள்ளையிடத்தில் நிகழ்ந்த சகல மாற்றங்களும் இக்காலத்தினுள் பிள்ளையினிடத்தில் பிள்ளையுடைய கல்வி, எதிர்காலம், எதிர்காலத்தொழில் போன்றவற்றைப் பற்றிய உணர்வுகளோடு தொடர்புபட்டதாகும். இப்பிரச்சினைகளுக்கு விடை பெற்றுக் கொள்ள முடியுமாவது ஆரம்பப் பருவங்களில் பிள்ளை எவ்வாறான வளர்ச்சிக்கு உள்ளாகியது என்ற காரணத்தின் அடிப்படையிலாகும். பிள்ளையினிடத்தில் புனர்ஜீவ வளர்ச்சியொன்றை எதிர்பார்க்க முடியும். பிள்ளையின் பெற்றோர்களுக்கும், வளர்ந்தோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல்வேறு விதத்தில் நவ குமரப்பருவத்திற்கு உதவி செய்ய முடியும். நவ குமரப்பருவத்தை நன்றாக விளங்குவதும், பிள்ளைக்கு நன்றாகச் செவிமடுத்துப் பிள்ளையினுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவி செய்வதன் மூலம் பிள்ளையினது பிரச்சினையான நிலைமைகளுக்கு மகிழ்ச்சிகரமாக முகங்கொடுப்பதற்கு உதவி செய்ய முடியும்.

ஆறாவது பருவம் (நட்புக்கு எதிரான தனித்திருக்கும் பருவம் 20-45 வயது வரை)

இப்பருவம் முதிய பருவத்துக்குக் கால்வைப்பதற்குரிய பருவமாகும். இப்பருவத்தில் வேறு நபர்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்வதில் ஈடுபடுவர். திருமணமாகிய நிலைக்கு உள்ளாகிய நபர்களுக்கு இடையில் உண்டாகும் கணவன் - மனைவி தொடர்பு இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அதற்கு எதிரான நிலை தனித்திருப்பதாகும். சில வேளைகளில் பிறரோடு உண்டாகும் தொடர்புகள் முறிவுபடுவதனால் ஒருவர் தனித்திருக்க முடியும். அதனால் அவர் சமுகத்திலிருந்து மெதுவாகத் தூரமாவதற்கு ஆரம்பிப்பார். நெருங்கிய தொடர்பு வாழ்க்கையில் சந்தோசகரமான நிலைமையை உருவாக்கும். தனித்தல் கெட்ட விடயமொன்றல்ல. தனித்தல் பெரும்பாலும் தனிநபருடைய தனித்துவத்தை வளர்ப்பதற்கும் காரணமாகும். நெருங்கிய தொடர்பு இருப்பதற்கும் தனித்திருப்பதற்கும் இடையில் உள்ள பிரச்சினையை மிகவும் கவனமாகச் சமநிலைப்படுத்தல் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்நிலைமை சிறந்த ஆளுமையொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையாகும்.

ஏழாவது பருவம் (உற்பத்திக்கு எதிராக ஓரிடத்தில் நிற்கும் பருவம் - 45-65 வயது வரை)

இப்பருவம் ஒருவர் தொழில் ரீதியாகச் செயற்படும் காலப்பகுதியாகும். இப்பருவத்தில் தமது பரம்பரையை முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கத்துடன் இந்நபர் செயற்படுவார். தமது பிள்ளைகள், இளைஞர்களை உற்சாகப்படுத்தி ஈடுபடுத்துவதுடன் நாட்டுக்கும் சமுகத்துக்கும் பயனுள்ள வேலையைச் செய்வதற்கு இப்பருவத்தில் அவர்கள் முயற்சிப்பர். தங்களுடைய நடவடிக்கைகள் மட்டுமன்றி சமுகவேலைகளிலும் அவர்கள் ஈடுபடுவர். இச்சுபாவத்துக்கு மாற்றமாகத் தங்களைப்பற்றி மட்டுமே நினைக்கும் நிலையையும் இக்காலத்தில் காண முடியும். அவ்வாறு சுயநல சுபாவம் ஒன்றைக் காட்டும் நிலையையும் இப்பருவத்தில் காணமுடியும். இந்நிலைகள் இரண்டுக்கும் இடையில் சமநிலை ஒன்றைப் பாதுகாப்பது இப்பருவத்திலே அவசியமாகும்.

எட்டாவது பருவம் (மகிழ்வுக்கு எதிரான துக்க நிலை (மகிழ்வுக்கு எதிரான துக்க நிலை, நீடிக்கும் பருவம் 65 வயதின் பின்பு)

இப்பருவம் பின் வளர்ந்தோர் பருவம் அல்லது முதியோர் வயதுடன் தொடர்புபட்ட பருவமாகும். பெரும்பாலானோர்கள் இக்காலத்தில் ஆரோக்கியத்துடன் இருக்க முடிவதுடன் மேலும் சிலர் நோயாளிகளாகவும் பலவீனமான நிலைமைகளோடும் காணப்படுவர். இப்பருவத்தின் ஆத்ம சமநிலைக்கும் துக்க நிலைக்குமிடையில் ஒரு பிரச்சினைக்கு நபர் உட்படுவார். இதற்கு மேலுள்ள பருவங்களில் நிகழ்ந்த வளர்ச்சி புனர்ஜீவ நிலையிலிருந்திருப்பின் நபரிடம் ஆத்ம சமநிலையொன்றைக் காணக்கிடைக்கும். அவ்வாறு இல்லையெனில் நபரிடம் காணப்படுவது துக்ககரமான ஒரு நிலையாகும்.

## ● கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சி சம்பந்தமான கோட்பாடு

லோரன்ஸ் கோல்பர்க் என்னும் உளவியலறிஞர் சிறு பருவத்திலிருந்து வளர்ந்த வயது வரைக்கும் தனியாளிடம் நிகழும் ஒழுக்க வளர்ச்சி தொடர்பாகக் கருத்தொன்றைக் கட்டியெழுப்பியுள்ளார். இக்கருத்தைக் கட்டியெழுப்புவதில் பல்வேறு கலாசாரங்களுக்கு உட்பட்ட பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தியுள்ளார்.

சிறு பிள்ளைகள் தமது பெற்றோர்களிடமிருந்தும் வளர்ந்தவர்களிடமிருந்தும் ஒழுக்கக் குணவியல்புகளைக் கற்றுக் கொள்வர் எனக்கூறும் சாதாரண கருத்தைக் கோல்பர்க் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய பிரதான கருத்தாவது பிள்ளைகளினுடைய அறிவு வளர்ச்சி மட்டம் ஒழுக்க வளர்ச்சியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் பெரும்பாலும் பிள்ளைகளினுடைய அந்தரங்கச் சிந்தனையும் அறிதலாட்சிச் செயற்பாடும் ஒழுக்க வளர்ச்சி தொடர்பாக முக்கியமாகின்றது என்பதாகும். பெரும்பாலான பிள்ளைகளை வளர்க்கும் முறைகள் அவர்கள் பெறும் கற்றல் அனுபவங்களையும் ஒழுக்க வளர்ச்சியையும் பாதிப்படையச் செய்யும்.

ஒழுக்க வளர்ச்சியை அவர் சாதாரண நிலைமை பற்றிய உணர்வின் வளர்ச்சி என வரைவிலக்கணப்படுத்துகிறார். அவர் இந்நிலையைத் தீர்மானிப்பதற்கு முன்வைப்பது பிரச்சினை சார்ந்த சந்தர்ப்பங்கள் பற்றிய கீழ்க்காணப்படும் எளிய ஆய்வுகளையாகும்.

- தன்னுடைய மரணத் தறுவாயில் மனைவிக்குத் தேவையான மருந்துகளை விலைகொடுத்து வாங்குவதற்கு முடியாதெனின் அவற்றைக் களவாடல் செய்ய வேண்டுமா?

- வைத்தியரொருவர் மூலம் வேதனையோடு இருக்கும் குணமாக்க முடியாத நோயாளி ஒருவரை மரணத்துக்கு இட்டுச் செல்ல வேண்டுமா?

- முக்கியமாவது மிகவும் பெறுமதி வாய்ந்த நபரொருவருடைய வாழ்க்கையைக் காப்பாற்றுவதா இல்லையெனில் பெறுமதியற்ற நபர்கள் பலருடைய வாழ்க்கையைக் காப்பாற்றுவதா?

இவ்வாறான ஒரு தொகைப் பிரச்சினைகளுக்குப் பெரிய மாதிரித் தொகுதி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட விடைகளின் அடிப்படையில் அவர் ஒழுக்க வளர்ச்சி பற்றிய பருவங்கள் பலவற்றை இனங்கண்டுள்ளார். அவற்றை இவ்வாறு காட்ட முடியும்.

முதலாவது மட்டம் முன் ஒழுக்க மட்டம் (4-10 வயது வரை)

படி 1 தண்டனையைத் தடுக்குமுகமாகக் கீழ்ப் படிவைக் காட்டும்படி

படி 2 பரிசு அல்லது ஆதரவு பெற்றுக் கொள்ளுமுகமாக அனுமதிக்கும்படி

இரண்டாவது மட்டம் சம்பிரதாய ஒழுக்கம் (10-13 வயது வரை)

படி 3 அடுத்தவர்களோடு தொடர்புகளை வைக்கும் அவ்வாறே அடுத்தவர்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்படி

படி 4 முன்னுள்ள அதிகாரம் மூலம் அல்லது சமுகத் தொகுதி மூலம் நிகழும் தணிக்கைகளைத் தடுக்குமுகமாகக் கீழ்ப் படிவைக்காட்டும்படி

மூன்றாவது மட்டம் தானே ஏற்றுக் கொண்ட ஒழுக்க மூலாதாரங்கள் (13 முதல் மத்தி அல்லது பின் வளர்ந்தோர் பருவம் வரைக்கும்)

படி 5 ஜனநாயகம் மூலம் ஏற்றுக்கொண்டிருக்கும் மக்கள் நலன் தொடர்பான விடயங்களில் ஒழுக்க மூலாதாரங்களுக்கு இணக்கம் தெரிவிக்கும்படி

படி 6 பலதரப்பட்ட ஒழுக்க மூலாதாரங்களுக்கு இணக்கம் தெரிவிக்கும் அதே நேரம் தன்னுடைய ஒழுக்க மூலாதாரம் ஊற்றெடுக்கும் படி

இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக அடுத்த பந்திகளில் கவனிப்போம்.

## ● முன் ஒழுக்க மட்டம்

இக்காலத்தில் பிள்ளைகள் பிழை எது, சரி எது, எது நல்லது, எது கெட்டது எனத் தீர்மானிப்பதற்கு ஆரம்பிப்பர். எவ்வாறாயினும் நல்லது கெட்டதைத் தீரிமானிப்பதற்குப் பிள்ளைகள் இக்காலத்தில் பயன்படுத்துவது அடுத்தவர்களுடைய ஒழுக்க அளவீடுகளையாகும். இவ்வாறான தீர்மானங்களை ஒரு பிள்ளை எடுப்பது தண்டனைகளைத் தடுத்துக் கொள்வதற்கு அல்லது பரிசில்கள் பெறுவதற்காகும். இம்மட்டத்தில் பின்வரும் படிமுறைகள் இரண்டு உண்டு.

படி 1

இப்படிமுறையிலே பிள்ளையினுடைய ஒழுக்கப் பண்புத் தீர்மானமாவது முன்பு கூறியவாறு தண்டனைகளைத் தடுத்துக் கொள்வதற்காகும். பிள்ளை வளர்ந்தவர்களுக்குக் கீழ்படிவது குறிப்பிட்ட நோக்கங்களை முன்னமே பெற்றுக் கொண்டதனாலாகும்.

படி 2

இப்படிமுறையில் பிள்ளை ஒழுக்கம் பற்றிக் கவனிப்பது பிறருக்குத் தன்னால் செய்ய முடிவது என்ன என்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டாகும். ஒரு பிள்ளை இப்படிமுறையில் ஏதாவது ஒன்றை மதிப்பது அதிலுள்ள நடைமுறைப் பெறுமதி மூலம் மட்டுமேயாகும். சம்பிரதாய ஒழுக்க மட்டம் (10-13 வயது வரை) இப்படியிலும் பிள்ளைகளினுடைய ஒழுக்க நடத்தைகள் தீர்மானமாவது அடுத்தவர்களுடைய விருப்பம் விருப்பமின்மை அடிப்படையிலாகும். இல்லையெனில் சமுகத்தைக் கௌரவிக்கும் சம்பிரதாயங்கள், சட்டங்கள், வரையறைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளுடைய ஒழுக்க நடத்தைகள் தீர்மானிக்கப்படும்.

படி 3

பிள்ளையிடம் ஏற்படும் ஒழுக்கத் தீர்வுகள் அடுத்தவர்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே அமையும். அவ்வாறே பிறர் விரும்பாமலிருப்பதை இவ்வயதில் பிள்ளைகள் விரும்பமாட்டார்கள். “நல்ல பிள்ளை” போன்ற சொற்களைக் கேட்பதற்கு இவ்வயதில் பிள்ளைகள் விருப்பம் காட்டுவர்.

படி 4

இப்பருவத்தில் சம்பிரதாயம் போலவே சமுகத்திலுள்ள சட்டங்கள், வரையறைகள் ஒழுக்க மூலாதாரங்கள் ஊடாக பிள்ளைகளுடைய ஒழுக்க நடத்தைகள் தீர்மானமாகும். அடுத்தவர்களுடைய தரங்களைப் பிள்ளைகள் பின்பற்றுவது ஒரு சம்பிரதாயமாக மாறும்.

தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க மூலாதார மட்டம் (13 வயதிலிருந்து)

இந்தக் கட்டத்தில் நபர் மூலமாகத் தீர்மானிக்கப்பெறும் ஒழுக்கத் தீர்வுகளுக்கு முன்வருவர். இங்கு அடுத்தவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கும் விதத்தில் ஒழுக்கத் தீர்வுகளுக்கு வருவதற்கு நபர் முயற்சிப்பதில்லை. அவ்வாறே சம்பிரதாயம் காரணமாக அல்லது சட்டங்கள் காரணமாக ஒழுக்கத் தீர்வுகளுக்கு நபர் இப்பருவத்தில் முயற்சிக்கமாட்டார். இம்மட்டத்தில் இரு படிமுறைகள் காணப்படும்.

படி 5

இப்படிமுறையில் நபருடைய ஒழுக்கத் தீர்வு அந்தரங்க சுபாவத்தில் தங்கியிருப்பதுடன் அவர் ஒழுக்கத் தீர்வுக்கு முன்வருவது பல அதிகாரம் மூலம் கேட்கும் மூலாதாரமும் தம்முடைய மூலாதாரமும் இணங்குவதாக இருந்தால் மட்டுமேயாகும். இப்பருவத்தில் நபர் தர்க்க ரீதியாகச் சிந்திப்பதற்கு முயற்சிப்பதுடன் மனிதர்களுடைய உரிமைகளை மதித்து, சமுகநல நிகழ்வுகளைப் பற்றியும் கவனிப்பர்.

படி 6

இப்படிமுறையில் ஒழுக்கத் தீர்வுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மிகவும் உயர் அந்தரங்க சுபாவத்தில் இருக்கும். ஒழுக்கத் தீர்வு பெரும்பாலும் தங்கி நிலை பெறுவது தனது மனச்சாட்சி அடிப்படையிலாவதுடன் கௌரவம், நியாயம், சமம் போன்ற உலகப் பொது மூலாதாரங்களின் அடிப்படையிலுமாகும். அடுத்தவர்கள் எதிர்ப்பார்ப்பதற்கு அப்பால் தான் சிந்திக்கும் விதத்தில் ஒழுக்கத் தீர்வுகளுக்கு வருவதற்கு இப்படிமுறையில் நபருக்கு முடியும்.



# 04

# முன் பிள்ளைப்பருவப் பாடத்திட்டம்

## முன் பிள்ளைப்பருவப் பாடத்திட்டம்

முன் பிள்ளைப்பருவப் பாதுகாப்பு மத்திய நிலையங்களிலும் முன்பள்ளிகளில் சேவை புரியும் ஆசிரியர்களிடத்திலும் பிள்ளைகளுக்காக ஒழுங்கமைக்கும் செயற்பாடுகள் என்ன முறையில் ஒழுங்கமைப்புச் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி ஒரு தெளிவான விளக்கம் இருக்க வேண்டும். அவ்விளக்கத்தைப் பெறுவதற்காக அவர்கள் அச் செயற்பாடுகளுக்கான அடிப்படையை வழங்கும் பாடத்திட்டம் தொடர்பாக விரிவான தெளிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனால் இவ்வதிகாரத்தில் எதிர்பார்ப்பது அவ்வாறான பாடத்திட்டமொன்றைத் தயாரிப்பதிலே கவனஞ்செலுத்த வேண்டிய மூலாதாரங்கள் சிலவற்றை முன்வைப்பதாகும்.

- **முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் கல்விக்கான பாடத்திட்டமொன்றைத் தயாரிப்பதில் பின்வரும் நோக்கங்களில் கவனஞ்செலுத்த வேண்டும்.**

1. பிள்ளையின் நுண்ணறிவை வளர்த்தல் - அதாவது,
   - மொழியைப் பிரயோகிப்பதற்கு உற்சாகப்படுத்தல்.
   - கற்பது எவ்வாறு எனக் கற்பதற்கு உதவுதல்.
   - ஆதங்கத்தை ஊக்குவித்தல்.
   - குறியீடுகளைப் பாவிப்பதில் பிள்ளையிடம் உள்ள ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளித்தல்.

2. பிள்ளையின் சமுக மற்றும் மனவெழுச்சியை வளர்த்தல் - அதாவது,
   - நிலையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பிள்ளைக்கு உதவுதல்.
   - பொறுப்புணர்ச்சி பற்றிய உணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கு உற்சாகப்படுத்தல்.
   - பிறரைப் பற்றிக் கவனிப்பதை விருத்தி செய்தல்.
   - ஆத்ம நம்பிக்கை, சுயாதீனம், ஆத்ம கட்டுப்பாடு போன்றவற்றை மேலோங்கச் செய்தல்.

3. பிள்ளையின் அழகியல் உணர்வை விருத்தி செய்தல் - அதாவது,
   - கலைக்கும் சங்கீதத்துக்கும் தொடர்பான பல்வேறு பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கும் சந்தர்ப்பங்களை அளித்தல்.
   - ஆக்கபூர்வமான, கருத்துப் பரிமாறுவதற்காகத் திறமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு உற்சாகமளித்தல்.
   - அழகியல் பற்றி உதயமாகும் விளக்கத்தையும் உணர்வையும் மலரச் செய்தல்.

4. பிள்ளையின் உடல்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல் - அதாவது,
   - தூய காற்றை வழங்கி, விளையாடுவதற்கும் நித்திரை செய்வதற்கும் இடமளித்து, சிறந்த உணவை வழங்கி, தனிப்பட்ட சுகாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பயிற்சி அளித்து, தினமும் வைத்திய உதவிகளை வழங்கி, தம்முடைய உடலைப் பயனுள்ளதாகக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குப் பிள்ளைக்கு உதவுதல்.

5. பிள்ளையின் கல்வி, ஒழுக்கவியல், கலாசாரம், உளவியல் வளர்ச்சி - அதாவது,
   - வளர்ந்தவராகும் போது, பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் பொறுப்புக்களுக்கும் நிகழ்வுகளுக்கும் முகங்கொடுப்பதற்காக அவர்களை ஆயத்தப்படுத்தல்.

6. வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயனுள்ளதாக இடம் மாறுவதற்காக நடவடிக்கைகளைத் திட்டமிடல் - அதாவது,

- வீட்டைப் போலவே பாடசாலையிலும் பிள்ளையின் அபிவிருத்திக்காக அன்னியோன்னிய உபகார சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## முன் பிள்ளைப்பருவ பிள்ளைகளுக்காகப் பாடத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் கீழேயுள்ள விடயங்களைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்

- கல்வி ஆரம்பமாவது பிறப்பு முதல் என்பது.
- பாதுகாப்பையும் கல்வியையும் பிரிக்க முடியாது என்பது - தரமுள்ள பாதுகாப்பு கல்விக்கு வழிவகுக்கும் - தரமுள்ள கல்வி பாதுகாப்புக்கு வழிவகுக்கும்
- சகல பிள்ளைகளும் அவர்களுடைய திறமைக்கு ஏற்ப அபிவிருத்தியடைவர் என்பது - கற்றலை மலரச் செய்வதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் வளர்ந்தவர்களுக்கு முடியும்.
- சகல பிள்ளைகளுக்கும் அபிவிருத்தி சார்ந்த பொருத்தமான பழக்கவழக்கங்களால், கல்வியால் நன்மை ஏற்படுகிறது.
- வினைத்திறமையும் கவனமிகு அவதானிப்பும், பிள்ளைகளுக்குக் கற்க உதவும் ஒரு முறையாகும்.
- கலாசாரத்தையும் உடல்சார் வேறுபாடுகளையும் ஏற்றுக் கொண்டு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பது - செயற்றிறன் மிக்க, நெகிழ்வான பிரவேசம் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், இணைத்து ஒரே முறையாகப் பின்பற்றக் கூடாது.
- கற்றல் முழுமையான ஒரு விடயம் ஆவதுடன் அதனைப் பகுதிகளாப் பிரிக்க முடியாது என்பது - நம்பிக்கை, உற்சாகமளித்தல், விருப்பம், இரசனை ஒன்றைப் பெறுதல், உடலியல், சமுகத் தேர்ச்சிகள், தனிப்பட்ட விவேக விருத்தி போன்றவை முக்கியமான விடயங்களாகும்.
- பிள்ளைகள் விளையாட்டு, தானே பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள், கதைகள் ஊடாக மிகச் சிறப்பாகக் கற்கிறார்கள்.
- பாதுகாவலர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களாகிய பெற்றோர்களோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.
- தரமான பராமரிப்பு, கல்வி என்பவற்றுக்காக, முறையாக நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடையதும் பாதுகாவலர்களினுடையதும் ஒத்துழைப்பு தொடர்ந்தும் தேவை.

பாட அறிவு தொடர்பாக மேற்கூறிய கொள்கைகளிலிருந்து செய்யப்படுகின்ற வலியுறுத்தல்களையும், இத்சகாப்தத்தில் வாழ்வதற்குப் பிள்ளைக்கு நாம் தெரிந்த வகையில் தேவையானது புதிய முறையிலான பாட அறிவாகும் என்பதையும் ஏற்றுக் கொண்டு, கல்வி தொடர்பான சம்பிரதாய முறைகளுக்குப் பதிலாக, செயலொழுங்கினை வலியுறுத்துகின்ற பாடத்திட்டமொன்றைப் பற்றி அவதானத்தைச் செலுத்த வேண்டி ஏற்படும்.

அதனால் விருப்பையும் செயற்பாட்டையும் மையமாகக் கொண்டு பாடத்திட்டம் ஒன்றைத் திட்டமிடும்போது நாம் முன்வைக்கும் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு முடியுமா? என்பதையும் வகை பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளை கற்கும் போது உறுதுணையாகும் (திட்டமிடப்பட்டதும் திட்டமிடப்படாததும் முறைசார்ந்ததும் முறைசாராததும் வெளிப்படையானதும் மறைவானதும்) சகல செயற்பாடுகளும், அனுபவங்களும் பாடத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும். பாடத்திட்டமொன்றை விரிவாக

நோக்கும் போது, அக்கற்றல் செயலொழுங்கு (ஒரு பிள்ளை கற்பது எவ்வாறு? என்பது போன்ற) கற்றல் முன்னேற்றம் (ஒரு பிள்ளை கற்பது எப்போது? என்பது போன்ற) கற்கும் சந்தர்ப்பம் (ஒரு பிள்ளை கற்பது எங்கே? ஏன்? எதற்கு? என்பன போன்ற) போன்றவை பற்றிக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளைக்குத் திறந்ததும் மூடியதுமான கற்கும் சூழலொன்றிலே பாதிப்பை ஏற்படுத்தும் ஒரே ஒரு விடயம் பாடத்திட்டமாகும். அது பிள்ளைகளுக்கு முன்வைக்கப்படும் வெளியக, உள்ளக செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி, ஆசிரியர் குழு பிள்ளைகளிடத்தும், அவரவர்களிடத்தும், பெற்றோர்களிடத்தும், அதிதிகளிடத்தும் காட்டும் மனப்பாங்குகளிலும் செல்வாக்குச் செலுத்தும்.

முன்பள்ளிப் பிள்ளைகளுக்காகப் பாடத்திட்டம் ஒன்றைத் திட்டமிடும் போது கீழே காணப்படும் பண்புகள் அதற்குள் உள்ளடங்கும் வகையில் ஒழுங்குகளைத் திட்டமிடல் வேண்டும்.

- புதிய எண்ணக்கருக்களைக் கற்பதிலே ஒன்றுக்கொன்று சமமற்ற விடயங்கள், புதுமையான விடயங்கள், புதிய விடயங்களையும் முன்வைத்தல்.
- சூழலில் கவனிக்கத்தக்க மாற்றம் ஒன்றைப் பிள்ளைகளுக்குக் காணக்கூடிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- தனிப்பட்ட விருப்பத்தை விமர்சிப்பதற்குப் பிள்ளைகளுக்கு முடியுமான சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- பிள்ளைகளுக்குப் பிழையாவதற்கு இடமுண்டு என்ற பயமின்றி வினாக்கள் தொடுப்பதற்கு இடமளிக்கும் நம்பிக்கைக்குரிய சூழலொன்றைத் தயார் செய்தல்.

இவ்வதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட மேலே குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் கல்விக்காகத் தயாரிக்கப்படுகின்ற இந்நூலில் முன்வைக்கப்படுகின்ற கொள்கைசார் தகவல்களும் செயற்பாடுகளும் பிள்ளைகளினுடைய பின்வரும் பகுதிகளைத் திசைமுகப்படுத்திக் கொண்டு ஒழுங்கு செய்யப்படுகின்றது.

- உடல்சார் தேர்ச்சிகள் விருத்தி.
- தனிநபர் மற்றும் சமுகத் தொடர்புகள் விருத்தி.
- தொடர்பாடல் திறன்கள் விருத்தி.
- பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி.
- ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி.

இந்த ஒவ்வொரு துறை பற்றியும் உரிய அபிவிருத்திப் பண்புகள், நடத்தைகள் பற்றியும் அடுத்த அதிகாரங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.



# 05

## உடல்சார் தேர்ச்சிகள் விருத்தி

## உடல்சார் தேர்ச்சிகள் விருத்தி

### அறிமுகம்

பிள்ளைகளின் உடல்சார் தேர்ச்சிகள் விருத்தி அல்லது இயக்க செயற்பாடுகள் விருத்திக்காக சந்தர்ப்பங்களை அளிப்பதற்கு உடலில் பல்வேறு பகுதிகளை அசைக்கும்போது, மனதை ஒரு நிலைப்படுத்தல், வேகத்தையும் திசையையும் மாற்றுதல் போன்ற சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு இடமளித்து, தமது உடலைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள ஆற்றலை விருத்தி செய்து கொள்வதற்காகப் பிள்ளைகளை உற்சாகப்படுத்த முடியும்.

### இயக்க செயற்பாடுகளை இரண்டாக வகுக்க முடியும்

1. உடலின் பெரிய தசைநார்களின் அசைவுடன் தொடர்பான நடத்தல், ஓடுதல், பாய்ந்து பாய்ந்து செல்லுதல், சமநிலையில நிற்றல் போன்ற பிரதான இயக்க செயற்பாடுகள் முதல் வகைகளுக்குள் அடங்கும்.

2. குறிப்பிட்ட செயற்பாடுகளைச் செய்யும் போது தொடர்புபடுகின்ற கைகளையும் விரல்களையும் பாவித்தல், வெட்டுதல், ஒட்டுதல் போன்ற திறமைகளை உள்ளடக்கிய உடலின் வரையறைக்குட்பட்ட பகுதிகளை இயக்குதலுடன் தொடர்பான நுண்ணியக்கச் செயற்பாடுகள் இரண்டாவது வகையாகக் கொள்ளப்படும். நுண் இயக்கச் செயற்பாடுகளின் பிரதான பண்பு கண்கள், கைகள், விரல்கள், பாதங்களிலுள்ள சிறிய தசைநார்களைப் பயன்படுத்தலுடன் ஏற்படும் வினைத்திறன்மிக்க தொடர்பாகும்.

### பாலர் பாடசாலை வேளைகளில் பிள்ளைகள் வளர்த்துக் கொள்ளும் பிரதான இயக்க செயற்பாடுகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. நடத்தல் - முதிர்ச்சியுற்ற ஒருவரைப்போல் நடக்கும் ஆற்றலைப் பெறுவது மூன்று வயதுக்கும் நான்கு வயதுக்கும் இடைப்பட்ட காலத்திலாகும். இப்பருவத்தை அடையும்போது, பல்வேறு திசைகளில் நடப்பதற்குப் பிள்ளைக்கு ஆற்றல் கிடைக்கும். எடுத்துக்காட்டு: பின்பக்கத்துக்கு நடத்தல், பக்கத்துக்கு நடத்தல், நடக்கும் அளவைக் குறைத்துக் கூட்டுதல், விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது காலின் விரல் நுனிகளால் நடத்தல் அல்லது கோடுகளின் மீது நடத்தல் போன்றவைகளைச் செய்து பார்ப்பதை இப்பருவத்தில் காணமுடியும்.

2. மேலே ஏறுதல் - இது நடத்தல் மூலம் பெறும் மேலும் ஓர் ஆற்றலாகும். பிள்ளைகளுக்குத் தனியாக நிற்கும் ஆற்றலைப் பெறுவதற்கு முன், அவர்கள் படிவரிசைகளில் ஏறுவதற்கு முயற்சி செய்வதோடு, தனியாக நடப்பதற்கு முயற்சிக்கும்போது, வளர்ந்தவர் ஒருவருடைய உதவியுடன் அல்லது கைகளின் உதவியுடன் உடலை நேராக வைத்துப் படிக்கட்டுகளில் ஏறுவதற்கும் அவர்களுக்கு முடியும். மேலே ஏறுவதற்கு எடுக்கும் முதல் முயற்சியிலே, ஏறும் ஒவ்வொரு படியிலும் முதலில் முன்னால் வைப்பது ஒரே காலையேயாகும். இவ்வொழுங்கில் பல மாதங்கள் தொடர்ந்து ஈடுபடுவதுடன் அதன் கால்கள் இரண்டையும் மாறி மாறி வைத்துச் செல்வதற்கு ஆரம்பிக்கும். அதிலும், கீழே இறங்கும் விதம் பெரும்பாலும் வேறுபட்டதாகும். சாதாரணமாக பிள்ளைகள் கீழிறங்குவதற்கு முதலில் முயற்சிப்பது, பின்னோக்கி இறங்குவதற்கே ஆகும். முதிர்ச்சியுடைய ஒருவர் போல் கீழ் இறங்குவதற்கு முயற்சிப்பது நான்கு அல்லது ஐந்து வயது கடந்த பின்பாகும்.

3. ஓடுதல் - பிள்ளைகள் நடப்பதற்குக் கற்றுக்கொண்ட பின் சிறிது காலத்தில் ஓடுவதற்கு ஆரம்பிப்பர். பெரும்பாலான பிள்ளைகளுக்கு ஐந்து வயதாகும் போது, ஓடுவதற்கு முடியும். சரியான முறையில் ஓடுவதற்கு அவர்களுக்கு முடியாமற் போனால், சம வயதில் இருக்கும்

பிள்ளைகள் செய்யும் பெரும்பாலான உடற்செயற்பாடுகளைச் செய்வதற்கு அவர்களுக்கு முடியாமற் போவதுண்டு.

4. மேலே பாய்தல் - நேராகவும் நின்றுகொண்டும் நீளம் பாய்வதை ஆரம்பிப்பது சிறு வயதிலேயே ஆகும். அதுவும் முதிர்ச்சியடைந்த ஒருவர் போல் நின்று கொண்டு, நிலத்துக்குச் சமாந்தரமாக மேலே பாய்வதற்கு ஆறு வயதாகும்வரை முடியாமற் போவதுண்டு. ஐந்து வயதாகும் பெரும்பாலான பிள்ளைகளுக்கு, பொதுவாகப் பார்க்கும்போது, உயர்ந்த மட்டத்திலான திறமையில் நேரடியாக மேலே பாய்வதற்கு முடியும். மூன்று அல்லது நான்கு வயதுள்ள பிள்ளைகள், ஒவ்வொரு அளவில் உயரமுள்ள கல் அல்லது மரக்கட்டைகளின் மேலிருந்து நிலத்துக்குப் பாய்வதைப்போல் கோடுகளின் மேலால், மிக உயரமில்லாத தடைகளின் மேலால் பாய்ந்தும் பொழுது போக்குவர்.

5. தனிக்காலால் பாய்தல் - இது சிறு பிள்ளைகளுக்குக் கஷ்டமான ஒரு காரியமாகும். அதற்குக் காரணமானது, ஒருமுறை மேலே பாயும்போது, ஒரு காலின் சமநிலையை மீண்டும் பெறுவதற்குத் தேவைப்படுவதனாலாகும். மூன்றரை வயதாகும் போது பிள்ளைக்கு ஒன்றிலிருந்து மூன்று படிகள் வரை தனிக்காலால் பாய்ந்து பாய்ந்து செல்வதற்கு முடியும். ஐந்துவயதாகும்போது பெரும்பாலான பிள்ளைகளுக்கு ஒரே சமயத்தில் ஆறு படிகள் வரை தனிக்காலால் பாய்ந்து பாய்ந்து செல்லமுடியும். இத்திறமை சாதாரணமாக முன்பள்ளிக் காலத்தில் விருத்தியாகும்.

6. பாய்ந்து பாய்ந்து ஓடுதல் - பாய்ந்து ஓடுதல் என்பது நடத்தலும், பாய்தலும் ஒன்றாகச் சம்பந்தப்பட்டதாகும். இதனை, ஐந்து வயதின் இறுதியில் முறையாகக் கற்பதற்கு முடிவதுண்டு. அவ்வயதாகும் போது, பெரும்பாலான பிள்கைளுக்குத் திறமையாகப் பாய்ந்து ஓடுவதற்குக் கற்றுக்கொள்ள முடிவது மட்டுமன்றி, பின்பக்கத்துக்குச் செல்வதையும் அவர்கள் தமது செயற்பாட்டில் புதிதாகச் சேர்ப்பதைக் காண முடியும்.

7. ஏதாவதொன்றிற்கு மேலால் பாய்தல் - ஏதாவதொன்றிற்கு மேலால் பாய்தல் இப்பருவத்தில் கைப்பற்றிக் கொள்ளும் ஒரு இயக்கத் திறமையாயினும், முன்பள்ளிக் காலத்திலே அத் திறமையைக் கைப்பற்றிக் கொள்ள முடிவது ஒரு சில பிள்ளைகளுக்கு மட்டுமேயாகும். மூன்று வயதளவில் சில பிள்ளைகள் ஓடுதல் நடத்தல் போன்ற செயற்பாடுகள் இரண்டுக்கும் இடையில் செயலொன்றை வெளிக்காட்டும் விதத்தில் ஊர்ந்து செல்லும் முறையில் கால்களை இழுத்துக் கொண்டு அடிவைப்பதற்கு முயற்சிப்பர். தனிக்காலால் பாயும் ஆற்றல் விருத்தியுறும்போது, நான்கு வயதுள்ள பெரும்பாலான பிள்ளைகளின் பண்பான, குலுங்கி, அசைகின்ற, இசையொன்றோடு கூடிய அசையும் விதத்தில் அடிவைத்தல், தனிக்காலால் பாய்தல் போன்றவற்றைக் காணமுடியும். முதிர்ச்சி அடைந்த ஒருவரைப் போலவே ஏதாவதொன்றின் மேலால் பாயும் ஆற்றலைப் பெறுவதற்கு மேலும் இரண்டு, மூன்று வருடங்கள் செல்லும்.

## • சமநிலையில் நிற்கும் திறமையை விருத்தி செய்தல்

சமநிலையில் நிற்கும் செயலில் பிரதான இலட்சணங்கள் இரண்டு உண்டு. அவை, அசையாதிருத்தலும் செயற்றிறமையும் ஆகும். அசைவின்றிச், சமநிலையில் நிற்கும் செயலுக்காக அசையாது எழுந்து நிற்கும்போது சமநிலையில் நிற்பது அவசியமாவதுடன் செயற்றிறமையுடன் கூடிய சமநிலையில் நிற்கும் செயலுக்காக, நடந்துகொண்டிருக்கும் போது சமநிலையைப் பேணிச் செல்வது அவசியமாகும்.

## ● நுண் சமநிலை

1. பாதத்திலுள்ள விரல் நுனிகளால் நிற்றல்.

2. ஒரு காலால் நின்றுகொண்டு, சமநிலையில் நிற்றல் அதன் பின் சிறிது நேரத்தின் பின் மற்றைய காலால் அவ்வாறு நின்றுகொண்டிருத்தல்.
சிறு பிள்ளைகள் சமநிலையில் இருக்கும் போது கண்பார்வை முக்கிய விடயங்களைச் செய்யும். ஆறு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குத் தம் கண்களை மூடிக்கொண்டு, தனிக்காலால் சமநிலையில் நிற்பது கடினமாகும்.

## ● உடல் சமநிலை

1. ஒரு திட்டின் மீது நடத்தல் - மூன்று அல்லது நான்கு வயதுள்ள பிள்ளைகளுக்கு, இரண்டு அங்குல திட்டின் மீது நடப்பதற்கு முடியும். எனினும், ஆறு வயது முடியும் வரை பெரும்பாலான பிள்ளைகளுக்கு மாறி அடிவைப்பதற்கும் திட்டிற்கு அப்பால் பார்வையை ஈடுபடுத்துவதற்கும் முடியாது போகும்.

2. பொருள் ஒன்றைப் பயன்படுத்திக் கொண்டு சமநிலையில் நிற்றல் - இவ்வயதில் பிள்ளைகள் தமது கைகளால், பின்னால், தலையில் என்றவாறு சோளம் விதைகளை நிரப்பிய உறைகளை ஏந்திக்கொண்டு நடப்பதால் திருப்தி அடைவர். பழகியதன் பின்பு அவர்களுக்கு இச்செயலில் உள்ள திறமையைப் பெற்றுக்கொள்ள முடிவதுண்டு.

3. நிலத்தில் உருளுதல் - இது முன்பக்கத்துக்கு, இரு பக்கங்களுக்கு அல்லது பின்பக்கத்துக்கு உடலை உருளச்செய்வது தொடர்பான ஓர் இயக்கச் செயற்பாடாகும். இச்செயலுக்காகப் பெரும்பாலும் சமநிலையில் நிற்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.

வேறு இயக்கச் செயற்பாடுகள் போலவே இவற்றைப் பற்றிய ஒரு ஒழுங்கு முறை இருப்பதுடன் முதிர்ச்சி அடைந்த ஒருவருடைய மட்டத்துக்கு விருத்தியாவதற்கு முன்பள்ளிக்குச் செல்லும் வரை முடியாது போகும். தள்ளுதல், இழுத்தல் போன்றவை சம்பந்தமான செயல்களுக்காகப் பிள்ளையின் சமநிலையில் நிற்கும் திறமை அவசியமாகும்.

## ● நுண் இயக்கச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்

இதனுடன் சம்பந்தப்பட்ட ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட தன்மையுடைய திறமைகள் இரண்டு உண்டு.

- முதலாவது முன்பள்ளிகளில் கல்வியைப் பெறுகின்ற பிள்ளைகளுக்குப் பொருத்தமான ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டால், சாதாரண மட்டத்தில் கைப்பற்றிக் கொள்ள முடியுமான பிரதான இயக்கத் திறன்களைக் காட்ட முடியும்.

- இரண்டாவது கைகளிலும் விரல்களிலும் உள்ள சிறு தசைநார்கள் தொடர்பான நுண் இயக்கத் திறன்களைக் காட்டமுடியும்.

1. மேலே வீசுதல் - மிகவும் சிறு வயதிலிருந்தே பிள்ளைகள் ஒவ்வொன்றையும் மேலே வீசுவதற்கு ஆரம்பிப்பர். பெரும்பாலான தாய்மார்களின் அனுபவத்தின்படி ஆறு மாதங்களுக்கும், எட்டு வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பாலர் வண்டியில் வைத்துக் கொண்டு செல்லும் போது பல்வேறு பொருட்களை வெளியே வீசுவர். ஆயினும் அது போன்ற பொருட்களை வீசும் திசையைக் கட்டுப்படுத்துவதற்கு முடியும் வகையில், முதிர்ச்சி அடைந்த ஒருவர் வீசுவது போன்று வீசுவதை விருத்தி செய்து கொள்வதற்குப் பல வருடங்கள் செல்லும். அது புதுமைக்குரிய ஒரு காரணமாக அமைவதில்லை. காரணம், நிமிர்ந்து நின்று கொண்டு

பொருள் ஒன்றை முன்னே வீசுவதற்குத் தேவையான சமநிலையில் நிற்கும் ஆற்றலையும், உடலைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் பெற முடிவது, நடத்தல், ஓடுதல் போன்ற பிரதான இயக்கத் திறமைகளை ஓரளவாவது பிள்ளைகள் பெற்றுக் கொண்டால் மட்டுமே.

2. பிடித்துக் கொள்ளுதல் - பிடித்தல் என்பது, வீசிய பொருட்களை நிறுத்திக் கொள்வதற்குக் கைகளைப் பாவிப்பது தொடர்பான ஒரு விசேட இயக்கத் திறனாகும். ஓடுதலைப் போலவே, பிடித்துக் கொள்வதும், பிள்ளைகள் மூலம் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய மிக முக்கியமான திறமை ஒன்றாகும். அதற்குக் காரணம், பிடித்தல் பெரும்பாலான விளையாட்டுக்களினதும் விளையாட்டு நடவடிக்கைகளினதும் அடிப்படையாக அமைவதனாலாகும். மேலே வீசப்படுகின்ற பந்தொன்றைப் பிடிப்பதற்கு ஒரு பிள்ளை முதலில் முயற்சிப்பதை மூன்று வயதளவில் காணமுடியும். பந்தொன்று கைகளில் படுவதோடு தமது உடல் பக்கத்துக்குப் பந்தை இழுத்தெடுக்கும் நோக்கில் பிள்ளைகள் இறுக்கமாக பிடித்துக் கொண்ட இருகைகளையும் மேலே உயர்த்தும் போது அது எங்களுக்குத் தெளிவாகும். இணைப்புக் குறைபாடு காரணமாகவும் குறிப்பிட்ட நேரத்துக்குப் பந்தைப் பிடிப்பதற்கு முடியாமற் போவதனாலும் எந்நேரமும் பந்து அவர்களுடைய கைகளிலிருந்து நழுவிச் செல்லும். இச்சந்தர்ப்பத்திலே வெற்றிகரத் தன்மை பெரிதும் தங்கியிருப்பது, பிடிப்பவருடைய திறமையை விட வீசுபவருடைய திறமையின் அடிப்படையிலேயே ஆகும். பயிற்சி பெறுவதோடும் நுண்ணறிவு முதிர்ச்சி பெறுவதோடும் ஐந்து வயது இறுதியாகும் போது, இத்திறனில் போதுமான அளவு முன்னேற்ற நிலைக்குப் பிள்ளைகளுக்கு ஆளாக முடியும். அவ்வாறாயினும் பந்தொன்றைப் பிடிப்பதில் பாதிக்கும் காரணிகளில் ஒன்று, பந்தின் அளவாகும். பிள்ளைகள் மிகவும் திறமை காட்டுவது சிறிய பந்தைப் பிடிப்பதைவிட பெரிய பந்தொன்றைப் பிடிப்பதற்காகும். எனினும் பந்தொன்றைப் பிடிப்பதிலே மிகவும் முதிர்ச்சியடைந்த துலங்கல் வெளிப்படுவது, பெரிய பந்தைப் பிடிக்கும் போது அன்றி, சிறிய பந்தொன்றைப் பிடிக்கும் போதாகும். பிடிப்பதற்குப் பிள்ளைகளுக்கு உள்ள ஆற்றலைப் பாதிக்கும் மேலும் ஒரு காரணி யாதெனில், பந்தை வீசும் வேகமாகும்.

3. ஏதாவதொன்றால் அடித்தல் - ஏதாவதொரு உபகரணம் மூலம் ஒரு பொருளுக்கு அடிப்பதிலே பிள்ளைகளுக்குப் பல்வேறு வினாக்கள் எழமுடியும். இங்கே உடலில் அசைவு ஏற்படுவது மட்டுமன்றி, அந்த உபகரண அசைவுக்கும் உடலுக்கும் இடையில் உண்டாகும் இணைப்பையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

4. உதைத்தல் - உதைக்கும் திறமையின் அடிப்படையாகக் கருதப்படுவது ஓரிடத்தில் நின்று கொண்டு உதைப்பதாகும். ஓரளவுக்கு முதிர்ச்சி ஏற்படும் வரை, வீசப்படுகின்ற பந்தொன்றுக்கு உதைப்பதற்கு முடியாமல் போவதுண்டு. அதற்குக் காரணம் யாதெனில் அதற்காக மேலதிக அறிதலாட்சித் திறமை தேவைப்படுவதேயாகும். உருண்டு செல்லும் பந்தொன்றுக்கு உதைப்பதற்கு முயற்சிக்கும் போது, உதைப்பதோடு வேகத்தையும், திசையையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். முன் பள்ளிக் காலம் வரும் வரை பெரும்பாலான ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் ஓரிடத்தில் இருக்கும் பந்தொன்றுக்கு உதைக்கும் முதிர்ச்சியைப் பெற்றுக் கொள்ள முடியாது போவதுண்டு. சாதாரணமாக ஓரளவு காலம் செல்லும் வரை உருண்டு செல்லும் பந்தொன்றுக்கு உதைக்க முடியாமற் போவதுண்டு.

5. மேலே துள்ளுமாறு பந்தொன்றை நிலத்தில் அடித்தல் - பொதுவாக இத்திறமை வளர்வது பற்றிக் காணக்கிடைக்கும் தகவல்கள் மிகக் குறைவாகும். மேலே துள்ளும் வகையில் பந்தொன்றை நிலத்தில் அடிக்கும் திறமை ஆரம்பமாவது, பந்தொன்று எதிர்பாராத விதமாக நிலத்தில் விழும் போது அல்லது அது மேலே துள்ளுமாறு வேண்டுமென்றே கீழே போடும் போதுதான். அதன் பிறகு பிள்ளை, அதனை மேலே துள்ளுவது மீண்டும் மீண்டும் நிகழும் விதத்தில் கையால் தட்டுவதுண்டு. ஒரு கையைப் பாவிப்பதற்கு ஆரம்பிப்பதற்கு முதல் பிள்ளைக்கு இரு கைகளையும் பாவித்து பெரிய பந்தொன்றின் மூலம் இத்திறைமையைப் பயின்று கொள்வது இலகுவாகும். நிறுத்தாது அவ்வாறே பந்துக்குத் தட்டும் முதிர்ச்சியை அவர்கள் பெற்று விடும்போது, அதனை ஒவ்வொருவரின் பக்கம் தெறிக்கும் வண்ணம் தட்டும் திறமையை வளர்த்துக்கொள்ள முடியும்.

## நுண் இயக்கச் செயற் கட்டுப்பாட்டின் தேவையை வலியுறுத்துகின்ற ஏதாவதொன்றை இயக்கும் திறமைகள்

மூன்று, நான்கு வயதுப் பிள்ளைகள் பாரிய முன்னேற்றத்தைக் காட்டுவது, நுண் இயக்கத் திறன்களைக் கட்டுப்படுத்தும் விருத்தி தொடர்பில் ஆகும். இரண்டரை வயதிலிருந்து ஐந்து வயது வரை வளர்க்க முடியுமான, நுண் இயக்கத் திறமைகளில் கீழ்காட்டப்படும் திறமைகள் அடங்கும்.

1. விசேடமாக பொத்தான் இடுவதும் கழற்றுவதும், இது போன்ற ஏனைய சில விடயங்கள் தொடர்பான உடைகள் அணிதலும் களைதலும், பல் துலக்குதல், உணவு உண்ணுதல் போன்ற தனிப்பட்ட திறமைகள்.
2. ஒரு வாய்க்கால், ஒரு பாதை, படிக்கட்டுகள் போன்றவற்றைச் சிறிய ப்ளொக்குகளைப் (Building Blocks) பயன்படுத்தி அமைத்தல், உபகரணப் பகுதிகளைச் சரியாக இணைத்துச் செய்யும் ஆற்றல். எடுத்துக்காட்டு : லெகோ தொகுதியைப் பயன்படுத்திச் செய்யும் விளையாட்டு.
3. கண்களுக்கும் கைகளுக்கும் இடையிலான இணைப்பு, இடத்தைப் பாவிக்கும் ஆற்றல். இவற்றை ஊக்குவிப்பதற்குப் பலபகுதிகளைச் சேர்த்துச் சித்திரம் ஒன்றை வரைதல் (ஜிக்ஸோ புதிர்கள்- Jigsaw Puzzles)
4. மரவேலை உபகரணங்கள், உணவு சமைப்பதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள், பாத்திரங்கள் பாவித்தல், உணவு தயார் செய்தலும் பகிர்தலும், உணவு மேசையைத் தயார் செய்தல்.
5. பென்சில், பேனை, சித்திரம் வரையும் தூரிகை, கத்தரிக்கோல், ஊசி போன்றவற்றைப் பாவித்தல்.
6. பொருத்தமான முறையில் சிறு பிராணிகளைத் தடவுதல்.
7. கிடையான, நிலைக்குத்தான இரேகைகள், வளைவுகள், சதுரங்கள், முக்கோணங்கள் போன்ற வடிவங்களைப் பார்த்து வரைதல்.
8. பாத்திரம் ஒன்றிற்குள்ளும் பாத்திரத்தின் வெளியேயும் நீர் ஊற்றுதல்.
9. நூல் கோர்த்தலும் தைத்தலும்.
10. கணினியையும், கணினிப் பொறிகளையும் (Calculators) இயக்குவித்தல்.

## அறிதலாட்சிசார் இயக்கத் திறன்களை விருத்தி செய்தல்

பிள்ளைகளுடைய அறிதலாட்சிச் செயற்பாடுகள் தொடர்பாக முக்கியமான ஒரு பொறுப்பை அறிதலாட்சி ஆற்றல்கள் விருத்தி நிறைவேற்றுகின்றது என்பது சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாற்றல் மிகவும் விருத்தியாவது, முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை வேளையிலாகும். அது போன்ற அறிதலாட்சி சார் திறமைகள் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

## கட்புல அறிதலாட்சித் திறமைகள்

ஆரம்பப் பருவத்திலே கட்புல அறிதலாட்சி ஆற்றல்கள் விருத்தியில், முக்கியமான விடயங்கள் ஐந்து உண்டு. அதாவது:

1. கண்களும் இயக்கச் செயல்களும் இணைப்பு: திறமையான முறையில் கைகளையும் கண்களையும் பாவித்து இணைப்புச் செய்து கொள்வதற்குரிய ஆற்றலே இதனால் கருதப்படுகின்றது.
2. உருவம் - பின்னணி அறிதலாட்சி : தெளிவாகத் தெரியாத பின்னணியொன்றில் இருக்கும் ஒருவரை இனம் காணும் ஆற்றலே இதனால் கருதப்படுகின்றது.

3. மாதிரிகள் நிலைப்பாடு : ஒரு வடிவம் இருக்கும் இடத்தைக் கவனிக்காது, அதன் வடிவத்தைச் சரியாக இனங்காணும் ஆற்றலே இதனால் கருதப்படுகின்றது.
4. இடவெளியிலுள்ள நிலை : யாதேனும் இடவெளியிலுள்ள சில படங்களில் காணப்படும் அமைவுகளின் மாற்றங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
5. வெளித் தொடர்புகள் : இடவெளியில் காணப்படும் இரு பொருட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களுக்கு இடையிலுள்ள தொடர்புகளை இனங்காணல்.

தனது உடலுக்காக எவ்வளவு இடம் தேவை என்ற அறிவு, பிள்ளைகள் எதிர் நோக்கும் மேலும் ஒரு பிரச்சினையாகும்.
திசைகள் பற்றிய அறிவு மேலும் ஒரு அறிதலாட்சித் திறமையாவதுடன் அது, பிற்பட்ட கால பாடசாலைக் கல்வி தொடர்பில் முக்கியமான தொடர்பைக் காட்டும்.

திசையை விளங்குவது தொடர்பான பூரணமற்ற விளக்கம், கீழ்ப்பிரிவிலே பிள்ளைகளுக்குப் பல்வேறு எழுத்துக்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகளை விளங்கும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். இதன் பெறுபேறாக, வாசிக்கும் எழுதும் பிரச்சினைகளும் எழுவதுண்டு.

ஆழமும் அசைவும் பற்றிய விளக்கம் வயதோடு விருத்தியுறுவதாகத் தென்படினும், தன்னுடைய இயக்க நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டு, அசையும் பொருட்களைப் பிடிப்பதற்கு இக்காலத்தில் பிள்ளைகளுக்கு முடியாமற் போவதுண்டு.

## ● செவிமடுக்கும் திறன்களை விருத்தி செய்து கொள்ளல்

முழு புலனியக்கத் தொகுதியில் மிகவும் பிரச்சினைகள் உள்ள தொகுதியாக செவிமடுக்கும் தொகுதியை அறிமுகம் செய்ய முடியுமாயினும், செவிமடுக்கும் திறன்கள் விருத்தி செய்யப்படும் முறை பற்றி நாம் அறிந்துள்ள விடயங்கள் மிகவும் சொற்பமே. செவிமடுத்தல் திறன்கள் விருத்தியாகும் சுபாவம் பற்றி எமக்குத் தெரியாவிட்டாலும், மூன்று வயதாகும் போது, சத்தம் வரும் திசையை அறிவதற்குப் பிள்ளைகளுக்கு முடியும் என்பது தெளிவாகும்.

## ● தொடுதல் - திறமைகள் விருத்தி

தொடுதல் பாடமொன்றின் அனுபவங்கள், பிள்ளை தனது வாழ்க்கையில் முக்கியமான விடயங்களில் ஈடுபடும் எனினும் இது தொடர்பாக மேலதிக தகவலெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## ● அறிதலாட்சி சார் இயக்கத் திறன்களை விருத்தி செய்தல்

கீழே காட்டப்படும் திறமைகளை மீண்டும் மீண்டும் செய்து பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் ஆசிரியர்களுக்கு இரு முறைகளிலும் அறிதலாட்சி சார் இயக்கத் திறன்கள் விருத்தியை உற்சாகப்படுத்த முடியும்.
1. இனங்கண்டுள்ள குறிப்பிட்ட திறமைகளில் பயிற்சி பெறுவதற்காகச் சந்தர்ப்பம் அளித்தல்.
2. ஆக்கபூர்வமான செயற்பாடுகள், சுய கூற்றுக்கள் மூலம் அறிதலாட்சி சார் இயக்கத் திறன்கள் விருத்தியை ஊக்குவித்தல்.

புலனனுபவங்களின், அறிதலாட்சி சார் இயக்கத் திறன்கள் விருத்தியின் முக்கியத்துவம் மிகவும் பெரியதாகும்.

பிள்ளைகளின் உடலியல் விளையாட்டுக்கள், அவர்களுடைய பாதுகாப்பு அமையும் முறையில் செய்வதற்குத் திட்டமிடப்பட வேண்டும் என்பதுடன் அவை சவாலாகவும், அவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்துகின்றவையாகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவற்றால் பிள்ளைகளுக்கு அச்சமற்ற தன்மையையும் புதியவைகளைச் செய்வதற்குச் சந்தர்ப்பங்களையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## உடல்சார் விருத்திக்கான உத்தேச செயற்பாடுகள் சில

- அறிதலாட்சியையும் இயக்கத் திறன்களையும் ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள்
- உடலை ஆட்டுதல்.

தேவையான பொருட்கள் : ஒரு சில பெரிய பிளாஸ்டிக் உதைபந்துகள் சில
செயற்பாடு: வளர்ந்த ஒருவர் தன்னுடைய இரு கைகளாலும் பிடித்துக் கொண்ட பந்தை மேலே துள்ளுமாறு நிலத்தில் அடித்துக் காட்டி அதனைச் செய்யுமாறு பிள்ளையிடம் கேட்டுக் கொள்ள முடியும். அதன் பின்பு ஒவ்வொரு பிள்ளைக்கும் மேலே பாயுமாறு கூற வேண்டும். தம்முடைய இரு கைகளையும் தமது நண்பருடைய கழுத்தைச் சுற்றி இட்டு, மாறிமாறி அறையைச் சுற்றி மேலே பாய்ந்து பாய்ந்து செல்லும் படி கூற வேண்டும். இது ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு உற்சாகத்தை அளிப்பதோடு மேலே பாய்வதற்குப் பழகிய பிள்ளைக்குப் பாய்ந்து பாய்ந்து செல்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கும் இடமளிக்கும்.

## மேலேயும் கீழேயும்

தேவையான பொருட்கள்: உறுதியான தேனீர் மேசை அல்லது கட்டையான மேசை ஒன்று அல்லது அதற்கு அதிகமான அளவு.
செயற்பாடு: இது உண்மையாகவே தலைமைத்துவத்தைப் பின்பற்றுவதற்குக் கற்பிக்கும் ஒரு செயற்பாடாகும். பிள்ளைகளை முன்னே அழைத்து மேசையின் கீழும் மேலும் இடம் இருக்கின்றது என்பதை அவர்களுக்குக் காட்ட வேண்டும். அடுத்ததாக அவர்களுக்கு ஒரு வரிசையில் (அல்லது வட்டமாக) இருக்குமாறு கூறி மேசையின் அடியில் புகுவதற்கும் மேசையின் மேல் ஏறுவதற்கும் இடமளிக்க வேண்டும். இதன் மூலம் அவசரமாக விளங்கிக் கொள்வதற்கு முடியாத எண்ணக்கருக்களாகிய 'மேல்', 'கீழ்' என்பவற்றுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்வதற்கு முடியுமான நல்லதொரு சந்தர்ப்பமும் கிடைப்பதுண்டு.

## கல்லுக்குக் கல் பாய்தல்

தேவையான பொருட்கள் : கொங்ரீட் இடப்பட்ட ஒரு பெரிய திறந்த வெளி அல்லது சுண்ணாம்பினால் வரையப்பட்ட வட்டங்கள் அல்லது லினோலியம் கார்ப்பட் ஒன்றில் வரையப்பட்ட வெவ்வேறான வடிவங்கள்.

செயற்பாடு: ஆரம்பமாக, எளிய கதையொன்றைத் தயார் செய்து கொள்ளுங்கள். ஒரு வட்டத்திலிருந்து மற்றைய வட்டத்துக்கு மாறுவதற்குரிய விதத்தில் செயற்பாடு ஒன்றை ஆரம்பிக்க முடியும். சிறிய அடிகளிலிருந்து, நீளம்பாய்வது வரை மாற்றம் செய்து, வட்டத்தால் காட்டப்பட்டுள்ள ஒரு குவியலிலிருந்து மேலும் ஒரு வட்டத்தில் காட்டப்படும் குவியலுக்கு மாறும் முறையில் மாற்றம் செய்வதற்கு உற்சாகப்படுத்து முகமாகக் குவியல்களுக்கிடையிலுள்ள தூரம் மாற்றம் செய்யப்படல் வேண்டும். ஒத்துழைப்போடு செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஒரு குவியலில் இருந்து மற்றைய வட்டத்துக்கு மாறுவதற்கு ஒருவருக்கொருவர் உதவி செய்யும்படி பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்ள முடியும். இது மிகப்பொருத்தமாவது குழுவிலுள்ள பெரிய பிள்ளைகளுக்காகும்.

## மர்ம அதிதி

தேவையான பொருட்கள் : ஒரு கைக்குட்டை

செயற்பாடு : கைக்குட்டை ஒன்றை எடுங்கள். கைக்குட்டையொன்றினால் யாராவது உங்கள் கண்களை மூடினால் அப்போது என்ன நிகழும் என்பதைக் கலந்துரையாடுங்கள். உங்களுக்கு உலகம் தென்படாதெனின், நீங்கள் உலகம் பற்றிக் கற்பது எவ்வாறு என்பதைக் கலந்துரையாடுங்கள். பிள்ளைகள் விளையாட்டொன்றில் ஈடுபடப் போகிறார்கள் எனவும், அந்த விளையாட்டிலே, ஒரு பிள்ளையினுடைய இரண்டு கண்களையும் மூடுவது எனவும், அந்தப்பிள்ளை தமக்கு முன்னால் இருப்பவரைக் கையால் பிடித்துப்பார்த்து அவர் யார்? என அனுமானம் செய்து கூற வேண்டும் எனவும் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். கண்களை மூடுவதற்கு விருப்பமுள்ள பிள்ளைக்குக் கூறுங்கள். 'மர்ம அதிதி' ஒருவரைத் தெரிவு செய்து கொண்டு, அப்பிள்ளைக்கு அமைதியாக நின்று கொள்ளுமாறு கூறுங்கள். 'மர்ம' அதிதியைக் கண்டுபிடிக்க முடியுமா? என கண்களை மூடிய பிள்ளையிடம் கேளுங்கள். அச்செயற்பாட்டை, மர்ம அதிதிக்குக் கதைக்கும்படி அறிவித்து அவருடைய குரலின் மூலம் அவர் யார் என அனுமானம் செய்து கூறும்படி கண்கள் இரண்டையும் மூடிய பிள்ளைக்குக் கூற வேண்டும். இம்முறையிலே இதனை அடிக்கடி செய்ய முடியும். இச்செயற்பாட்டின் மூலம், தொடுதல் மூலம் அறியும் உணர்வு பற்றி பிள்ளைகளுக்கு ஏற்படும் விளக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் பொருள் ஒன்றைத் தொடுவதன் மூலம் பிள்ளைக்கு எவ்வளவு விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு முடியும் என்பதை விளங்கிக் கொள்வதற்கும் முடியுமாகின்றது. பிரச்சினை விடுவிக்கும் திறமைகளை இனங்கண்டு அவற்றை உற்சாகப்படுத்துவதற்கும் கண்பார்வை குறைபாடுடையவர்களின் மீது கருணை காட்டுவதற்கும் அதன் மூலம் சந்தர்ப்பம் கிடைப்பதுண்டு.

## கண்ணாடி

தேவையான பொருட்கள் : ஒரு பெரிய கண்ணாடி

செயற்பாடு: ஒரு கண்ணாடியைக் கொண்டு வாருங்கள். கண்ணாடி மூலம் பார்க்கும் போது எங்களுக்குத் தெரிவது என்ன என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள். செயற்பாட்டைச் செய்யும்போது அதற்கு உங்களுக்கு உதவுமுகமாக ஒரு பிள்ளையைத் தெரிவு செய்யுங்கள். உங்களுக்கும் உங்களுக்கு உதவுபவருக்கும் இடையில் இடம் இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். 'பிரதி விம்பம்' (உதவியாளர்) உங்களுடைய சகல சமிக்ஞைகளையும் பின்பற்றிச் செய்து காட்ட வேண்டும். ஆனால் உங்கள் இருவருடைய உடல்கள் ஒன்றோடொன்று படவோ அல்லது நீங்கள் இருவரும் பேசவோ கூடாது. உங்களுடைய 'பிரதி விம்பம்' (உதவியாளர்) நிகழ்பவற்றை விளங்கும்போது, நீங்கள் 'பிரதி விம்பம்' ஆக ஆகும் வண்ணம் இருவருடைய பாத்திரங்களையும் மாற்ற வேண்டும். சிறிது நேரத்துக்குப் பின்பு, உங்களுடைய உதவியாளரோடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேறு ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். குழுவில் ஏனைய சகலரையும் சோடியாக வேறுபடுத்துங்கள். ஒவ்வொரு சோடியிலும் ஒரு பிள்ளைக்கு 'பிரதி விம்பம்' ஆகும்படி கூறுங்கள். சிறிது நேரத்துக்குப் பின்பு தமது பாத்திரங்களை மாற்றும்படி அவர்களுக்குக் கூறுங்கள். பிள்ளைகள் தம்மைப்பற்றியும் ஒவ்வொருவர் பற்றியும் மிகவும் அவதானமாக இருப்பதற்கும், இச்செயற்பாடு தசை நார்களின் கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதற்கும் காரணமாக இருக்க வேண்டும்.

## காணாமற் போயிருப்பது எது?

தேவையான பொருட்கள்: தினமும் பாவிக்கும் பொருட்கள் சிலவற்றை ஒரு பாத்திரத்தின் மேல் வையுங்கள்.

செயற்பாடு: ஒரு பாத்திரத்தின் மேலிருக்கும் பொருட்களின் பக்கம் சிறிது நேரம் பார்த்திருந்து விட்டு, அவற்றை தடவிப்பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கு இடமளியுங்கள். அதன் பின்பு அதில் ஒரு பொருளை அகற்றிவிட வேண்டும். அத்துடன் காணாமற்போன பொருள் எது என்பதை அவர்கள் இனங்காண வேண்டும்.

இச்செயற்பாடு, அவதானிப்புத் திறமையையும் பார்த்தவைகளை ஞாபகம் வைத்துக் கொள்ளும் சக்தியையும் விருத்தி செய்வதற்கு உதவும்.

- **வீதிச் சமிக்ஞைகள்**

தேவையான பொருட்கள் : சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறவட்டங்கள் மூன்று
செயற்பாடு: வளர்ந்த ஒருவர் நிற வட்டங்களைப் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும். அத்துடன் பொருத்தமான செயலைப் பிள்ளைகள் செய்ய வேண்டும். சிவப்பு வட்டத்தைக் காட்டும் போது நிற்றல், பச்சை வட்டம் காட்டும் போது முன்னே செல்லல், மஞ்சள் வட்டத்தைக் காட்டும் போது ஒரு அடி பின்னோக்கி வருதல். இச்செயற்பாட்டின் மூலம், பார்வை வேறுபாடுகளுக்கும் அவதானத்தை விருத்தி செய்து கொள்வதற்கும் ஊக்கம் கிடைப்பதுண்டு.



# 06

# தனிநபர் மற்றும் சமூகத் தொடர்புகள் விருத்தி

## தனிநபர் மற்றும் சமூகத் தொடர்புகள் விருத்தி

### அறிமுகம்

- முதற் சந்தர்ப்ப முன்பள்ளிப்பாடசாலைக் கல்வியின் பிரதான நோக்கம், சுயாதீனமானதும் சமநிலையானதுமான கருத்துக்களுடனான வளர்ந்தோர்களை உருவாக்குவதற்கு உதவுவதாகும்.

### தன்னைப்பற்றிய அறிவை விருத்தி செய்தல்

- பிள்ளையினுடைய விருத்தியில் முக்கியமான ஓர் அங்கமாகக் கொள்ளப்படுவது அப்பிள்ளை தன்னைப்பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதாகும்.
- சிறிய பிள்ளை மூலம் தன்னைப்பற்றிய அந்தரங்கமான உணர்வுகளை விருத்தி செய்து கொள்வதுடன் உடல்சார், புலனுறுப்புக்களின் விருத்தியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- இரண்டு தொடக்கம் ஐந்து வயது வரையிலான கால எல்லைக்குள் பிள்ளை தன்னுடைய உடல் சம்பந்தமான எண்ணக்கருக்கள் பற்றி ஓரளவு அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் அவர்களுடைய கருத்துக்கள் ஒன்றோடொன்று சிக்குண்டு, சிக்கலான தெளிவற்ற தன்மையை அடைய முடியும்.
- பிள்ளைகள் தம்முடைய பால் வேறுபாட்டை இனங்கண்டு கொள்வதை விருத்தி செய்து கொள்ளும் போது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என வெளியுலகு எதிர்பார்க்கும் விதம் பற்றி படிப்படியாகக் கற்றுக் கொள்வதுடன் தனது பால் வேறுபாட்டுக்கமைய செயற்பட வேண்டிய முறையையும் அவர்கள் கற்றுக் கொள்வர்.
- இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உடல் குறைபாடுகளை இனங்கண்டு கொள்வதற்கு ஆரம்பிக்கும்.
- வயது வளர்ச்சியுடன் உடல் மாற்றம் பெறும் என்பதை (சில குறைபாடுகள் இருந்தாலும்) விளங்கிக் கொள்வது பிள்ளைகளுக்குக் கஷ்டமான ஒரு செயலாகும்.

இவ்வாறான வயதுக்குட்பட்ட பிள்ளை ஒன்றின் மூலம் விருத்தி செய்து கொள்ள முடியுமான பல்வேறு விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

1. உடலின் பல்வேறு பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் பற்றிய விளக்கம்.
2. உடற் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், எல்லா உயிரோட்டமான விடயங்களிலும் நல்ல குணாதிசயங்கள் உண்டென்பதை விளங்கிக் கொள்ளுதல். உ+ம்: உணவு உண்பது, மலசலம் கழிப்பது.
3. ஒவ்வொரு நபரும் தோற்றத்தால் வித்தியாசப்பட்டாலும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான உடல் இலட்சணங்கள் இருக்குமென்பதை விளங்கிக் கொள்ளல்.
4. எல்லா நபர்களுக்கும் செய்யக்கூடியவற்றைச் செய்யும் சக்தி வரையறைக்குட்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளல்.
   உ-ம்: பெரும்பாலான மனிதர்களுக்கு உலாவுவதற்கும் உயரம் பாய்வதற்கும் முடியுமாக இருந்தாலும் அவர்களில் ஒருவருக்கும் மறக்க முடியாது. அது எவ்வாறாயினும் இவ்வயதில் சில பிள்ளைகளுக்கு, வளர்ந்தோர்கள், வேறு பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தனக்குள்ள வரையறையை ஏற்றுக்கொள்வது கடினமானது.
5. உடல் மாற்றம் பெறும் என்பதையும் உடல் விருத்திக்கு ஆரம்பமொன்றும் (பிறப்பு) முடிவொன்றும் (இறப்பு) உண்டென்பதையும் விளங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றல், தூ க்கம், விழிப்பு பற்றியும், வாழ்க்கைப் போக்கில் இக்கருத்துக்கள் இரண்டிலும் உள்ள முக்கியத்துவம் பற்றியும் விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல்.

6. புலனுணர்வுகளின் மூலம் பெற்றுக்கொள்ளும் உணர்வுகள் பற்றிய அறிவு - சுவை, தொடுதல், பார்த்தல், கேட்டல், மணத்தல் பற்றி பிள்ளைகளுக்குக் கலந்துரையாடக்கூடிய வகையில் பிள்ளைகளின் மூலம் சொற் களஞ்சியமொன்றை விருத்தி செய்து கொள்வது அவசியமாகும்.
7. உடல் களைப்புறக்கூடியது, நோயுறக்கூடியது என்றவாறு உடலில் உண்டாகும் சக்தியின் எல்லை பற்றி விளங்கிக் கொள்ளல்.
   வெற்றிகரமான கல்விக்காக ஆரோக்கியமான மனவெழுச்சி விருத்தி மிகவும் முக்கியமானதாகும். பிள்ளைகளுக்குப் பிரச்சினை உள்ளது எனவும், சில சந்தர்ப்பங்களில் மிகக் கடினமாக பிள்ளைகள் எதிர் செயற்பாடுகளைக் காட்டுவதென்பது இயல்பான ஒன்று எனவும் ஏற்றுக் கொள்வதுடன் மற்றையவர்களுடைய தேவைகள், உணர்வுகள் தொடர்பாக மனவெழுச்சியைக் காட்டுவதற்கு உள்ள ஆற்றலின் காரணமாக ஆசிரியர்களுக்குப் பிள்ளைகளுடைய மன எழுச்சி வளர்ச்சிக்கு உதவி செய்வதற்குப் பெரிதும் பாடுபடமுடியும்.

## சமுகத் திறமைகளை அபிவிருத்தி செய்தல்

அபிவிருத்தி பற்றிய இரண்டாவது சந்தர்ப்பம் சமுகத் திறமைகள் பற்றியதாகும்.

- குழந்தை சூழலில் முதியோர் வேலை செய்வதைப் பார்த்திருப்பதால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சமுகம் ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை மட்டுமன்றி குடும்பத்துக்கு வெளியே முதியோர்களோடு பயன் தரக்கூடிய அன்னியோன்னியமாக செயற்படும் வழிகளையும் கற்றுக்கொள்வதற்கு பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
- தான் சமவயதுக் குழுவினருடன் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் விருத்தி செய்து கொள்ளத்தக்க சமுக திறமைகள் கீழே தரப்படுகின்றன.
- சமுகத்தில் அன்னியோன்னியமாகச் செயற்படுவதற்குத் தேவையான அடிப்படை விடயங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
- ஒத்துழைப்பு, பிரச்சினை தீர்த்தல், கருணை (இரக்கம்)
- காப்பும் அன்பும் (பலமான திறமைகள்)

## அன்னியோன்னியமாகச் செயற்படுவது பற்றிய திறமைகள்

பிறருடன் ஒத்துழைப்போடு வேலை செய்வதற்கு உள்ள ஆற்றல் உயர்ந்த மட்டத்திலான நட்புச் சமுதாயமொன்றின் அத்தியாவசியமான ஒரு திறமையாகும். பங்குபற்றல் பற்றிய இன்னும் முக்கியமான சமுகத்திறமைகள் பல கீழே காணப்படுவதுடன் அத்திறமைகள் சமுக நடவடிக்கைகளுடன் தொடர்பான பழக்க வழக்கங்களுக்கு (சடங்கு சம்பிரதாயங்களுக்கு) உரியவைகளாகும்.

1. யாதேனும் ஒரு கலந்துரையாடலில் பிரவேசிக்கும் முறை பற்றி அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்.
2. ஒரு பிரச்சினை தோன்றும் போது, அதற்கு முகம் கொடுக்கும் முறையைத் தெரிந்திருக்க வேண்டும்.
3. ஏதாவதொரு கஷ்டத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதத்தில் விடுபடும் முறை பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

## சமூகத் திறமைகளை ஊக்குவிக்கும் போது வளர்ந்தோர்களின் பொறுப்பு என்ன?

- விளையாட்டில் ஈடுபடும் போது ஏற்படும் பிரச்சினைகளைச் சமாதானப்படுத்து வதற்குப்

பிள்ளைகள் சில சந்தர்ப்பங்களில் முதியோர்களாகிய எமது உதவியை நாடுவர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் விவேகமான முறையில் அவற்றில் தலையிடும் விதத்தை முதியோர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

- உடல், மொழி பற்றிய திறமைகளைக் கவனத்திற் கொள்ளும் போது பிள்ளைகளிடையே வேறுபாடுகள் இருப்பது போன்றே சமூகமயமாதலின் போது கூட வேறுபாடுகள் உள்ளன என்பதை முதியோர்கள் தெரிந்திருக்க வேண்டும்.
- இந்த விளக்கத்தை விருத்தி செய்து கொள்வதற்கு ஊக்குவிக்கக்கூடிய ஒரு செயற்பாட்டு முறை, ஒவ்வொருவரும் அறிமுகமாகிக் கொள்வதற்குத் தாம் விரும்புபவை, விரும்பாதவைகள், குறிக்கோள்கள் ஆகியவற்றை விளங்கிக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- நட்பின் பிரதான கருத்துகளையும் சமூகத் தொடர்புகளை உண்டாக்கிக் கொள்ளத்தக்க முறைகளையும் விளங்கிக் கொள்வதுடன் குடும்ப வாழ்க்கை பற்றிய எண்ணக் கருத்துக்களையும் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## ஒத்துழைப்பும் முரண்பாடுகளைத் தீர்த்தலும்

- தனக்குக் குழுவொன்றில் பங்குபற்ற முடியுமென்பதை பிள்ளைகள் விளங்கிக் கொள்ளும் போது, குழுவின் பக்கசார்பிற்குத் தேவையான திறமைகள் எவை என அறியும் போது மற்றவர்களுடைய நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பாதிப்புகளை ஏற்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படும்.

- ஏனையவர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தப் பிள்ளைகள் காட்டும் ஆர்வம் கட்டாயமாகப் பிரச்சினைகளுக்கு வழியமைப்பதுடன் சமவயதுக் குழுக்களுடன் பிரச்சினைகளை உண்டாக்கிக் கொள்ளுதல் சுயநல மனப்பாங்குகளைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான காரணமாக அமையும்.

பிள்ளைகளுக்கு, ஒத்துழைப்பு, பிரச்சினைகளைத் தீர்த்தல் பற்றிய திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு முதியோர்களால் எவ்வாறான உதவிகளைச் செய்ய முடியும்?

1. தனது நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்கு, கட்டளைகள், வரையறை என்பவற்றை இடுவதற்கான காரணம் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் பிள்ளைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
2. பிரச்சினைகளுக்கான காரணங்களை இனங்காண்பதற்காக மாற்று வழிகளை விளக்கிக் காட்டுவதற்கும் அதன் விளைவுகளை கவனத்திற் கொள்வதற்கும் பிள்ளைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
3. ஒத்துழைப்பு பற்றிய எண்ணக்கருவில் உள்ளடங்கப் பெற்றுள்ளவை என்ன என்பதைப் பற்றி பிள்ளை விளங்கிக் கொள்கிறதா? என்பதைக் கவனித்தல் - ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அல்லது செயற்பாடொன்றை முடிப்பதற்காக இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்தல் எவ்வளவு தூரம் பயனுள்ளது என்பதை சிறு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது அவசியமாகும்.
4. மற்றையவர்களைப் பாதுகாப்பதற்கும் பிரதியுபகாரத்தை ஏற்பதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது பொருத்தமாகும்.
5. ஓத்துழைப்பு, பாதுகாப்பு, பகிர்ந்து கொள்ளல் என்பன பற்றி எடுத்துக் காட்டும் கற்றல் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் சூழலை வழங்குவது போன்றே விளையாடுவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தையும் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## கருணையும் பாதுகாப்பும் அன்பும்

- மற்றையவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதற்கு, பாதுகாப்பும் அன்பும் காட்டுவதற்கு உள்ள ஆற்றல், இயல்பான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குக் காரணமாகும்.
- ஒருவருக்கொருவர் உதவுவதன் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கு முடியாத நிலைமைகளுக்கு அவர்கள் அடிக்கடி முகங்கொடுக்க வேண்டி வரும்.
- பகிர்ந்து கொள்ளல், தியாகத்தன்மை என்ற இரண்டுக்குமிடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்வதில் பிள்ளைகளுக்கு எந்நேரமும் கஷ்டம் உண்டாகும்.
- கருணை, அன்பு, குரூரம் போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கு பிள்ளைகளுக்குக் கஷ்டமாகும். ஆனால் தியாகம், பொறுமை, ஏனையவர்களின் விடயத்தில் காட்டும் கௌரவம், கவனிப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் சூழலில் இவர்களுக்கு இலகுவாகக் கற்றுக் கொள்ள முடியும்.
- விளையாட்டின் மூலம் பிள்ளையின் சமூகத் திறமைகளையும் பிறரது உணர்வுகளை விளங்கிக் கொள்ளும் சக்தியையும் ஏற்படுத்திக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு உதவி செய்வதால் அவர்களின் ஒழுக்க விருத்திக்கு உற்சாகமளிக்க முடியும்.
- ஏதாவதொரு சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொள்ளும் நிச்சயமான செயலைக் கற்பிப்பதற்குப் பதிலாக கொள்கைகளையும் காரணிகளையும் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதால் ஒழுக்க விழுமிய விருத்தியை மிக இலகுவாக்க முடியும்.
- அறிமுகப்படுத்தும் ஒழுங்குகள் யாவும் பிள்ளைகளினதும் முதியோர்களினதும் தேவைகளைக் கருத்திற்கொள்ளும் நன் நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## கலாசார அறிவை விருத்தி செய்தல்

பிள்ளைகள் சமுகத்திறமைகளைக் கற்றுக் கொள்வதுடன் அவர்கள் தமக்கும் தாம் வாழும் சூழலுக்கிடையிலும் இருக்கும் தொடர்புகளைப் பற்றியும் கற்றுக் கொள்வர்.

பல் - கலாசார சமூகத்துக்கு ஏற்ற ஓர் அங்கத்தவராவதற்கு கற்றல் முக்கிய விடயமாகும். தாம் வாழும் சமூகத்தில் பல்வேறு அங்கத்தவர்கள் பற்றி அறிந்து கொள்ளத்தக்க மிகவும் பொருத்தமான முறை அவர்களுக்கு வினா எழுப்பும் சுதந்திரம் இருக்கின்ற, பல்வேறு நபர்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் பற்றி கருத்துப்பரிமாறுவதற்கு முடியுமான சூழலொன்றில் வாழும் சந்தர்ப்பத்தைப் பெறுதலாகும்.

## பல் கலாசார அறிவை விருத்தி செய்தல்

பல் - கலாசார நீதி தவறாத பிரவேசம் ஒன்றை விருத்தி செய்யும் போது மிக முக்கியமாகக் கருதப்படுவது ஆசிரியருடைய மனப்பாங்கும், திறமையும், அறிவுமாகும். தனது கலாசாரப் பின்னணி மிகவும் விரிவான சமுகமொன்றுடனான தமது தொடர்புகளையும் பிற நபர்கள் விடயத்தில் தான் காட்டும் மனப்பாங்கு பற்றி முதியோர்கள் முறையான கலந்துரையாடல் ஒன்றைச் செய்வது பெரும்பாலும் வினைத்திறன்மிக்க அனுபவ பூர்வமானதாக அமையும். அவ்வாறாயினும் பிள்ளைகள் பற்றி ஆசிரியர்கள் காட்ட வேண்டிய சரியான மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்கள் எதிர்பார்ப்பதாயின் தனது அநீதிகளை இனங்கண்டு கொள்வது அவர்களுக்கு முக்கியமாகின்றது.

- கலாசார ரீதியில் நன்கு அறிவைப் பெறுவதற்காகப் பிள்ளைகளை உற்சாகமூட்டுவதற்கு ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை யாவை?

1. ஆத்ம விளக்கம், ஒவ்வொரு பிள்ளைகளினுடைய உணர்வுகளையும் திறமைகளையும் விளங்கிக் கொள்ளும் சக்தி ஆகியவற்றை வளர்க்கும் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.
2. தன்னுடைய வாழ்க்கை வட்டம் ஒரேமாதிரியானதாயினும் அதில் வேறுபட்டதன்மை உள்ளதென்பதைக் கலந்துரையாடுவதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துதல்.
3. தமது கருத்தை விட பிற நபர்களது கருத்து மாறுபட முடியும் என்பதையும் தமது உணர்வுகளை விட பிற நபர்களது உணர்வுகள் மாறுபடமுடியும் என்பதையும் விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்துதல்.
4. பல்வேறு வகையிலான ஆடையணிகள், பேச்சுக்கள், பாடல்கள், உணர்வுகள் போன்றவற்றைக் கலந்துரையாடவும் செயற்பாடுகளுக்கு உட்படுத்தவும் பாடத்திட்டத்தின் கலாசாரத் துறையை விரிவுபடுத்துதல்.
5. பிள்ளைகளுடைய, ஆசிரியர் குழுவுடைய, தமது குடும்ப அங்கத்தவர்களுடைய புகைப்படங்கள் போன்றே சிறிய இனக் குழுக்களில் சம்பந்தப்பட்டவர்களின் புகைப்படங்களுடனான சூழலொன்றை உருவாக்குதல்.

## தனிநபர் மற்றும் சமூக வளர்ச்சிக்கான உத்தேச செயற்பாடுகள் சில

- ஆத்ம விளக்கத்தை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் விருத்தியாதல்

  பங்கு கொள்வோர் : தாய், தந்தை, குழந்தை, பாலர் பாடசாலைக்கு வரும் பிரமுகர்களாகும். (தந்தை அல்லது தாயைத் தொடர்புபடுத்திக் கொள்ள முடியும்)

  தேவையான உபகரணங்கள்: டல்கம் பவுடர், ஒரு துவாய், குளிக்கும் பேசன், பஞ்சு, நெபீஸ் போன்றவை.

செயற்பாடுகள்:

1. தாய் அல்லது தந்தையையும் குழந்தையையும் அறிமுகம் செய்க, குழந்தை பற்றி பிள்ளைகளோடு பேசும் படி பெற்றோர்களுக்குக் கூறுக. மேலும் வினாக்கள் கேட்கும் படி பிள்ளைகளை உற்சாகமளிக்க.
2. பொருத்தமாயின் குழந்தையைக் குளிக்க வைக்கும்படியும் புதிய உடையை அணிவிக்கும் படியும் பெற்றோர்களுக்குக் கூறுக.
3. பிள்ளைகள் தற்போது இருக்கும் நிலையில் பார்க்கும் போது அவர்களுக்கும் குழந்தைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவர்களோடு கலந்துரையாடுக. தனக்குச் செய்ய முடியுமான ஆனால் குழந்தைக்குச் செய்ய முடியாதவை என்ன என்பது பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடுக. உ+ம்: பேசுதல், நடத்தல் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
4. தன்னுடைய தேவைகளுக்கும் குழந்தையின் தேவைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஒப்பிட்டுக் காட்டுங்கள்.

## நான் எவ்வளவு பெரியவன்?

பொருட்கள்: பெரிய தாள், க்ரேயோனும் பெல்ட் பேனாவும் அல்லது நிறவெண்கட்டி, கொங்க்ரீட் இடப்பட்ட நிலப்பகுதி.

செயற்பாடுகள்:

ஆசிரியருடையதும் பிள்ளைகளுடையதும் உடல்களின் மாதிரியைக் கோடுகளால் தாளில் அல்லது சீமெந்து இடப்பட்ட பகுதியில் வரையுங்கள். பின்பு பிள்ளைகள் அவ்வுருவத்தை நிறவெண்கட்டிகள் மூலம் நிறந்தீட்டும் போது தன்னுடைய உடல் பகுதிகளை இனங்கண்டு கொண்டு அவற்றை பற்றிக் கலந்துரையாடுவதற்கு முடியும். பிள்ளைகள் உருவம் வரையும் போது அவர்களுக்குக் கை கால்களை வெளியே நீட்டுதல், பந்து போன்று சுருளல் போன்ற நிலைகளை வேறுபடுத்துவதன் மூலம் உற்சாகத்தை அதிகப்படுத்த முடிவதுடன் உடல் அளவை உருவத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கின்றது.

- ## என்னை எதற்காக நான் விரும்புகின்றேன்?

பொருள்: எதுவும் இல்லை

செயற்பாடுகள்: முதியவர் உடலில் விசேட பகுதியொன்றைப் பற்றி பேசுவார். அதனை அவ்வளவு முக்கியமாகக் கருதுவது ஏன்? தன்னுடைய உடலில் தான் விரும்பிய பகுதியொன்றைப் பற்றி விளக்குவதற்குப் பிள்ளைகளுக்கிடையே உற்சாகத்தை ஏற்படுத்துவதுடன் அதற்கு ஏன் விரும்புவது? அதனால் செய்ய முடியுமானவை, அதனைப் பாவிப்பது எவ்வாறு? போன்ற கருத்துக்களை விளக்குவதற்கு அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதனால் தனது உடலை முழுமையாகக் காண்பதற்குப் பிள்ளைகளைப் பழக்குவதுடன் தன்னுடைய உடலிலிருந்து பிறரது உடல் வேறுபடுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களைப் பயிற்றுவிப்பதே இதன் நோக்கமாகும்.

- ## அமைதியடைதல்

பொருள்: எதுவுமில்லை

செயற்பாடுகள்: முதியவர் உடலின் பகுதிகளை அறிந்து ஒவ்வொரு பகுதியையும் கடினமாக அசைப்பார். பிள்ளைகளுக்கும் இச்செயற்பாட்டைச் செய்வித்து இறுதியில் முழு உடலையும் அசைக்கும்படி செய்வித்தல். அதன் பிறகு அவர்களை அமரும்படி செய்து, தமது உடலை அமைதி பெறும்போது உண்டாகும் உணர்வைச் சுதந்திரமாக அனுபவிக்க அவர்களுக்கு இடமளிக்க. சிறிது நேரத்தின் பின்பு இவ்வனுபவத்தைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். மேலும் இது உண்மையாகவே உடலை அமைதியடையச் செய்யும் என்பதையும் கலந்துரையாடுங்கள். உடல் அமைதிபெறும் வேறு சந்தர்ப்பங்கள் பற்றியும் சிந்திப்பதற்கு அவர்களுக்கு உற்சாகம் அளியுங்கள்.

- ## நறுமணம் வீசும் (ஜக்)கோப்பை

பொருட்கள்: கைக்குட்டை (கண்ணை மூடிக்கொள்வதற்கு), நறுமண வகைகள் கொண்ட ஜக்குகள் சில (மலரிதழ்), பழவகை (தோடை, அப்பிள்) சுவைச்சரக்கு (சாதிக்காய், கறுவா) மரவகை (பலா, பாலை)

செயற்பாடு: இச்செயற்பாட்டைச் செய்வதற்காகப் பிள்ளைகளின் கண்ணைக் கட்டிக்கொள்வது மிகவும் பொருத்தமாகும். எல்லா ஜக்குகளிலும் மணத்தை முகர்வதற்குப் பிள்ளைகளுக்கு இடமளித்தல் வேண்டும். பின்பு அவர்கள் மூலம் மணத்துக் கேற்ப வேறுபடுத்தி வகைப்படுத்த வேண்டுவதுடன் மணத்தின் இன்பத்தை விளக்க வேண்டும். சில பிள்ளைகளுக்குச் சில மணப்பூக்களை இனங்கண்டு கொள்ள முடிவதுடன் அதில் மிகவும் விருப்பமான மணம் பற்றிக் கலந்துரையாடுவதற்கு வழி பிறப்பதுண்டு. இச்செயற்பாட்டிற்கு முன்பு அவர்களின் மூக்குக்கு அண்மையில் மணவகைகளை முகர்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

## மீண்டும் செல்கிறது .... (நான் சொல்வதைக் கேட்பீரா)

பொருள் : எதுவுமில்லை
செயற்பாடு: எல்லோருக்கும் தெரிந்த இவ்விளையாட்டு தனது உடலில் பல்வேறு பகுதிகளை இனங்கண்டு கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு உதவ முடியும். ‘உமது .. தொடும்படி சொல்கிறேன்.- என ஆசிரியர் சொல்லும் போது தான் இனங்கண்டு கொண்டது என்ன பகுதியை எனப் பிள்ளைக்குக் காட்டுவதற்கு முடியும். குழுவின் நிலைக்கேற்ப சில பிள்ளைகளுக்குத் தலைவராக முடியும். செவிமடுக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கு இது உதவ முடியும்.

## தெறிப்பு விம்பங்கள்

பொருட்கள் : முகம் பார்க்கும் கண்ணாடியொன்று, நீர் நிறைந்த கடின நிறத்தினாலான பாத்திரமொன்று, அகப்பையொன்று, மினுமினுப்பான தாளொன்று (வெள்ளிநிறம்)

செயற்பாடுகள்: பல்வேறு முறையில் தத்தமது உருவங்களை விம்பமாகக் காணும் விதத்தை முதியோர்கள் காண்பிக்க வேண்டும். மேலும் அவற்றோடு விளையாடுவதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். முகத்தை நீட்டுவதால் விம்பமாகி மேலே காண்பவற்றை அங்குமிங்கும் அசைத்தும் அல்லது சிறிய அலை ஏற்படுமாறு நீர்ப்பாத்திரத்தில் ஏதாவது இடுதல், திரிபு படுத்தல் மூலம் செய்து பார்க்கும்படி பிள்ளைகளை ஊக்குவித்தல். பிள்ளைகள் காணும் பல்வேறு விம்பங்கள் பற்றி பேசுவதற்கும் அவர்கள் எந்த விம்பத்துக்கு விருப்பம் என்பதையும் அவ்வாறு விரும்புவதற்குக் காரணம் என்ன என்பன போன்றவற்றைப் பேசுவதற்கு ஆசிரியர்கள் அவர்களை உற்சாகப்படுத்தல் வேண்டும். சில பிள்ளைகள் விம்பங்களுக்குப் பயப்பட முடியும் என்பதையும் ஆசிரியர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

## தலைமைத்துவத்தைப் பின்பற்றுங்கள்

பொருட்கள் : எதுவுமில்லை
செயற்பாடுகள்: பிள்ளைகளை மாறிமாறி தலைமைத்துவத்தை ஏற்பதுடன் அக்காலத்தில் அவர்கள் செய்யும் அல்லது எடுக்கும் தீர்மானங்களை மற்றைய பிள்ளைகள் மூலம் பாவனை செய்தல் வேண்டும். இதனால் காட்சி விளக்கத்தோடு உடல் பற்றிய விளக்கமும் ஒன்றிணையும் என கருதப்படுகிறது.

## சமூகத் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகள்

பெயரைக் கைவிடுதல்
பொருட்கள் : எதுவுமில்லை
செயற்பாடுகள்: பிள்ளைகள் குழுவொன்றுக்கு மத்தியில் முதியவர் ஒருவர் இருந்துகொண்டு ‘தான் கருதும் பிள்ளை போலி உருவத்தோடு விளையாடுவதற்கு விருப்பமுள்ள பிள்ளை’என்பது போன்று துணுக்கு ஒன்றை முன்வைத்ததன் பின் முதியவர் கருதும் பிள்ளை யார்? என நினைக்குமாறு பிள்ளைகளிடம் கேட்டறிந்து செயற்பாட்டை ஆரம்பிப்பார். இதனை மாறி மாறிப் பிள்ளைகள் செய்தல் வேண்டும். கருத்துப் பரிமாறும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கு இது உதவும்.

## நாம் எல்லோரும் சேர்ந்து இழுப்போம்

பொருட்கள் : நாற்பது அடி நீளமான பலம்மிக்க கயிறு ஒன்று
செயற்பாடுகள்: மிகவும் பெரிய (குழு மட்டும் சேர்ந்து அங்கும் இங்கும் செயற்பட முடியுமான

அளவு பெரிய) ஒரு பொருளை அங்குமிங்கும் அசைக்க வேண்டியுள்ளது என்பதைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். பொருளைக் கயிற்றில் கட்டுங்கள். பிள்ளைகள் அதனை இழுக்கும் போது உற்சாகப்படுத்தும் வசனங்களைக் கூறிச் சத்தமிடுங்கள். (பொருத்தமான முறை யாதெனில் மிகவும் இலகுவான முறையிலன்றி செய்வதற்கு ஒரு முதியவர் அவர்களுடன் சேரவேண்டும்) முதலில் எடுத்த தீர்மானத்தின்படி ஓர் இடத்துக்கு அவர்கள் அதை இழுக்கும் போது நன்றி கூறி, தனிநபருக்கு அதனை அவ்வாறு இழுக்க முடியாது என்பதையும் அதற்காக ஒத்துழைப்பு அவசியம் எனவும் கருத்துக்களை அவர்களோடு கலந்துரையாடுங்கள்.

- ## கால்களைக் கட்டி ஓடுதல்

பொருட்கள் : கைக்குட்டை அல்லது கால்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவதற்குப் பொருத்தமான ஒன்று.
செயற்பாடுகள்: ஒத்துழைப்புடன் செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறியதன் பின்பு பிள்ளைகளை இருவர் வீதம் சோடியாக நிற்கச் செய்து இருவர் அருகருகே நிற்கும் போது அடுத்தடுத்துள்ள கால்களை ஒன்றாகச் சேர்த்துக்கட்ட வேண்டும். அதன் பிறகு இருவரும் ஒத்துழைப்போடு இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் இருவருக்கிடையிலும் போட்டி மனப்பாங்கு இருக்கக் கூடாது என்பதையும் எடுத்துக் கூறிய பின் பிள்ளைகளுக்கு வகுப்பறையைச் சுற்றி அல்லது அதற்கு வெளியே உலாவ முயற்சிக்கச் செய்யலாம். இதனைச் செய்வதற்கு முடியுமான பிள்ளைகளுக்கு அதிலும் கூடுதலான தூரம் நடப்பதற்கு வழிசெய்ய முடியும்.

- ## ஒரு பொதியைக் கைக்குக் கை மாற்றியனுப்புக

பொருட்கள் : தூக்கக்கூடிய இலகுவான சுற்றுறை இல்லாத ஒரு பெரிய பொதி
செயற்பாடுகள்: தெளிவாக இவ்விளையாட்டில் எளிய முறையொன்றைக் காண முடிந்தாலும் உண்மையாகவே பிள்ளைகள் சமுகத்திறமைகள் பலவற்றை இவ்விளையாட்டில் ஈடுபடுவதனால் கற்றுக் கொள்ள முடிகிறது. அவதானமாகக் கேட்பதற்கு, பரிசுப் பொருளைச் சுற்றியுள்ள தாளை நீக்குவதற்கு, இன்னுமொரு பிள்ளையுடைய பொதியைப் பறிக்காதிருப்பதற்கு, சிலருக்கு ஏதாவது சுற்றியுள்ள சுற்றுத் தாளை நீக்குவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும் எனவும் வெற்றி பெறுபவர் ஒருவர் மட்டுமே எனவும் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

- ## ஒத்துழைப்புடனான சங்கீதக்கதிரைப் போட்டி

பொருட்கள்: ரெகோட் பிளேயர் அல்லது டேப் ரெகோடர், பதிவு நாடாக்கள்
செயற்பாடுகள்: இது மாற்றமான முறையில் செய்யப்படும் ஒரு சங்கீதக் கதிரைப் போட்டியாகும். ஒரு விளையாட்டுச் சங்கீதக்கதிரைப் போட்டி போன்று செய்யப்படும். ஆனால் ஒழுங்கு விதிகளில் வித்தியாசப்படும். சங்கீதத்தை நிறுத்தியவுடன் எல்லோருமாகக் கதிரையின் மீது அல்லது மற்றையவரின் மடியில் இருக்க வேண்டும். இதனால் கருதப்படுவது யாதெனில் போட்டி மனப்பாங்குடனல்லாது மிகவும் ஒற்றுமையை வளர்ப்பதாகும்.

- ## பாதுகாப்பும் கருணையும்

பொருள்: ஒரு சிறிய செல்லப்பிராணி (முயல் அல்லது அணில் போன்ற சிறிய உயிரினம் ஒன்று)

செயற்பாடுகள்: கருணை, மிருதுவான உள்ளம், உளத்தூய்மை, நட்பு போன்ற சொற்களின் கருத்தைப் பிள்ளைகளோடு கலந்துரையாடுங்கள். தன்னை விடச் சிறியவர்களோடு மிருதுவாகச் செயற்படவேண்டியதன் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். தேவையான போது ஒத்துழைப்பு வழங்கி செல்லப்பிராணியைத் தடவுவதற்குப் பிள்ளைகளுக்கு இடமளியுங்கள். விசேடமான முறையில் மிருதுவாக நடக்கும்போது மதிப்பளியுங்கள். கடினமாக நடந்து கொண்டவர்களுக்கு மாற்று வழிகளைச் சொல்லிக் கொடுங்கள்.

## பொலிஸ் அதிகாரி போல் சேவை செய்தல்

பொருட்கள்: பொலிஸ் அதிகாரியினுடைய பாதுகாப்பான தலைக்கவசம், கடும் நிறத்தினாலான காற்சட்டையொன்று, ஒரு பழைய பிளேசர், ஒரு நீல நிறக் கமிசை

செயற்பாடுகள்: பாதுகாப்பான தலைக்கவசத்தை அணிந்து கொண்டு பொலிஸ் அதிகாரியாவதற்கு ஒரு பிள்ளையைத் தெரிவு செய்யுங்கள். மற்றையவர்கள் சொல்பவைகளைக் கேட்க முடியாத தூரத்தில் அப்பிள்ளையை நிறுத்த வேண்டும். ஓர் ஆண் பிள்ளையையும் ஒரு பெண் பிள்ளையையும் பெற்றோராகத் தெரிவு செய்து கொள்வதுடன் தமது காணாமற்போன பிள்ளையுடைய தலைமுடியின் நிறம், உடைகள் போன்றவற்றை ‘பொலிஸ் பிள்ளை’ விசாரிக்க வேண்டும். விளங்கப்படுத்துவது குழுவில் எந்தப் பிள்ளையை என பொலிஸ் அதிகாரிக்கு விளங்கும் வரை பிள்ளை கேள்விகள் கேட்க வேண்டும். மாற்று வழியாக முதியவர் ஒருவருக்குப் பொலிஸ் அதிகாரியாக நடிக்க முடியும். காணாமற் போன பிள்ளையை ‘பொலிஸ் பிள்ளை’ மூலம் கண்டுபிடிப்பதுடன் தனது முழுப் பெயரையும் முகவரியையும் கொடுப்பதற்குப் பிள்ளைக்கு நேரிடலாம். எல்லாப் பிள்ளைகளும் மாறி மாறி ‘காணாமற் போகும்’ பிள்ளையாக முன்வர வேண்டும்.

## கலாசாரம் பற்றிய அறிவை விருத்தி செய்யும் செயற்பாடு

## சமூகத்தில் வாழ்தல்

சுதந்திரமான சமுகத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்குச் சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும். முடியுமான எல்லா நேரத்திலும் தபால் அலுவலகம், சுகாதார மத்திய நிலையம், பொலிஸ் நிலையம், சந்தை போன்ற நிலையங்களுக்குப் பிள்ளைகளைக் கூட்டி செல்ல வேண்டும். இதனை ஒழுங்கு செய்ய முடியாது போனால் தமது வேலை பற்றிக் கதைப்பதற்குப் பாலர் பாடசாலைக்கு வருவதற்கு விரும்பும் பெற்றோர்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு வந்ததன் பின் அவர்களோடு கதைத்துப் பேசுவதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும்.

## உடை

கலாசார மாற்றங்களைத் தெளிவாகக் காட்டும் இலட்சணங்களில் ஒன்றான உடையால் கருதப்படுவது ஒவ்வொரு நாட்டிற்கும் சுயாதீனமான ஓர் அடையாளத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும். உண்மையான உடையைத் தேடிக் கொள்ள முடியாமல் போனால், ஸ்கொட்லாந்து வாசிகளின் முழங்கால் வரை அணியும் கட்டையான உள்ளாடை, சாரி, கிமோனா, கொடுக்கு, நீர் ஒழுகாத உடைகள், எஸ்கிமோவர் அணியும் ஜெகட், தோலினால் தயாரிக்கப்பட்ட கபாயா, தலைப்பாகை, முஸ்லிம்கள் அணியும் தலை மூடும் முக்காடுகள் (பர்தா, ஹிஜாப், தொப்பி) போன்றவற்றை அணிந்துள்ள பெண்களினதும் ஆண்களினதும் புகைப்படங்களைப் பிள்ளைகளுக்குக் காண்பிக்க முடியும். ஒவ்வொரு உடையும், அதனை அணிந்திருக்கும் நாட்டினது காலநிலைக்கு எந்த அளவு தூரத்துக்குப் பொருத்தமாகும் என்பதைச் சுட்டிக்காட்டி பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும்.

## வீடு

பிள்ளைகளுக்கு வித்தியாசமான புகைப்படங்களைக் காட்டுங்கள். உதாரணமாக மாடிவீடுகள், உயர்ந்த பூமியில் வரிசையாக அமைக்கப்பட்ட வீடுகள், அரைவாசியாக வேறாக்கப்பட்டுள்ள வீடுகள், முழுமையான கூடாரங்கள், திண்ணைகள், குடிசைகள், படகு வீடுகள், தூண்களின் மேல் அமைக்கப்பட்ட வீடுகள் போன்றவற்றின் புகைப்படங்களைக் காட்ட வேண்டும். அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கும் புகைப்படங்களில் அவர்கள் கண்ட வீடுகளுக்குமிடையிலுள்ள ஒத்த, ஒவ்வாத தன்மைகள் பற்றிக் கலந்துரையாட முடியும். பிறநாடுகளில் வீடுகளுக்காக வேறு பொருட்கள் உபகரணங்கள் பாவிப்பதற்குக் காரணங்காட்டுங்கள். தான் மிகவும் விரும்பும் வீடுகளின் மாதிரியை அமைப்பதற்குப் பிள்ளைகளுக்கு முடியும். தன்னுடைய காணியில் வீடொன்றை அல்லது தூணின் மேல் அமைக்கும் வீடொன்றின் மாதிரியை அமைப்பதற்குப் பெற்றோர்களை ஊக்குவிக்கவும் முடியும்.

## சங்கீதம்

கலாசார ரீதியில் பிள்ளைகளுக்கு மிகவும் அறிவூட்ட முடியுமான ஒரு முறை பல்வேறு சங்கீத உபகரணங்கள் மூலம் இசைக்கப்படுகின்ற பல்வேறு இசைகளைக் கேட்பதாகும். மேலைத்தேய சங்கீதக் கருவிகளையும் கீழைத்தேய சங்கீதக் கருவிகளையும் செவிமடுக்கப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அயர்லாந்தின் ஜீன்ஸ் நடனம், கபுக்கி சங்கீதம், இந்திய, வட அமெரிக்க நடனம், ஆதிவாசிகளின் பாடல்கள் போன்ற உலகிலுள்ள சகல நாடுகளினதும் பாடல்களை உள்ளடக்கிய பதிவு நாடாக்கள் உள்ளன. இவற்றைச் சாதாரணமாகப் பதிவு செய்யும் நிலையங்களில் (Record bars - பதிவு நாடாக்கள் விற்பனை செய்யும் கடைகளில்) பெற்றுக் கொள்ள முடியும்.

## உணவு சமைத்தல்

எல்லாக் கலாசாரங்களுக்கும் பொருத்தமான உணவு சமைக்கும் முறைகள் உண்டு. இவ்வாறான உணவு வகைகள் பலவற்றைப் பாலர் பாடசாலைகளில் சமைக்க முடியுமாயினும் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வதற்குத் தம்முடைய கலாசாரத்துக்கு ஏற்ற சம்பிரதாய உணவுவகைகளைக் கொண்டு வரும்படி பெற்றோர்களை உற்சாகப்படுத்த முடியும். முடியுமாயின் சிற்றுண்டிகளைச் சமைப்பதற்கு எடுக்கும் பொருட்கள் பலவற்றைப் பெற்றோர்கள் கொண்டுவர முடியுமெனின் சமைக்காத உணவுப் பொருட்களைப் பார்ப்பதற்கும் அதன் மணத்தைத் தெரிந்து கொள்வதற்கும் பிள்ளைகளுக்கு முடியும்.

பல்வேறு பழவகைகளையும் மரக்கறி வகைகளையும் இனங்காண்பிக்க வேண்டும். பல்வேறு சுவைகளையும் உடைகளின் முறைசார் கோலங்களையும் பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாட வேண்டுமென்பதுடன் தான் மிகவும் விரும்புவது எதை? அதற்கான காரணம் என்ன? என்பதை அவர்களிடம் கேளுங்கள். சாதிக்காய், கராம்பு போன்ற பயிர் வகைகளை கறுவா, மஞ்சள், காய்ந்த மஞ்சள் போன்ற சுவைச்சரக்குகளை, மருந்துப் பொருட்கள் பலவற்றைக் கொண்டு வாருங்கள். பிள்ளைகளுக்கு அப்பொருட்களின் மணத்தையும் சுவையையும் அறிவதற்கு வசதி செய்ய வேண்டும்.

எங்களுடைய சமூகத்தின் பல்வேறு கலாசாரங்களுக்கு உட்பட்ட விழாக்களை நடாத்துவதன் மூலம் அக்கலாசாரங்களில் இருக்கும் வேறுபாடுகளைப் பிள்ளைகளுக்கு அறிந்து கொள்ள

முடிகின்றது. எங்களுடைய நாட் காட்டிகளில் அநேக விசேட நாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் நன்றாக அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. அவற்றைப்பற்றி விசேட பிள்ளைகளோடு கலந்துரையாடுங்கள்.



# 07

## தொடர்பாடல் திறன்கள் விருத்தி

## அறிமுகம்

மொழி மூலம் பிறரோடு கருத்துப்பரிமாறும் ஆற்றல் மிக உன்னத மனிதப் பண்பாகும். எனினும் அது எங்களுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும், கருத்துக்களையும் பரிமாற முடியுமான ஒரு முறையாகும். அமைதியான செயல்களைப் போலவே அபிநயம், சங்கீதம், அசைவு, நாடகமும் சித்திரங்களும் ஒருவரோடொருவர் கருத்துப்பரிமாறிக் கொள்வதற்கு எங்களுக்கு உதவும் ஏனைய வழிமுறைகளாம்.

1. மொழி மற்றும் எழுத்தறிவு வாயிலாகக் கருத்துப்பரிமாறிக் கொள்வதை அபிவிருத்தி செய்தல் பிரதான இலட்சணங்கள்
2. மொழி என்பது ஒரு கருத்துப்பரிமாற்ற முறை மட்டுமன்றி, சிந்திப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடிய ஓர் ஆயுதமாகவும் கருதப்படுகிறது.
3. பிள்ளைகளினுடைய பேச்சுக்கள் பெரும்பாலும் முதிர்ச்சி அடையாத பேச்சாவதுடன் முன் பள்ளிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளில் பெரும்பாலோருக்கு எளிய தகவல்களை அறிவிக்கவும் எளிய ஆலோசனைகளை விளங்கிக் கொள்ளவும் முடியும்.
4. முன் பள்ளிப் பாடசாலைகளில் கற்கும் காலங்களில் பெரும்பான்மையான பிள்ளைகள் தாம் பேசும் போது அமைதியான அபிநயங்களை அதிகமாக உபயோகிப்பதுடன் கருத்துக்களைச் சொற்களால் முன் வைக்க முயற்சிப்பதற்குப் பதிலாக ஏதாவதொன்றைத் தேடிப் பெறும் பொருட்டு தங்களோடு இருக்கும் முதியவரிடம் கைநீட்டி அதனைக் காண்பிப்பர். அல்லது முதியவரை அப்பொருள் இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்வர்.
5. இது போன்ற முதிர்ச்சியற்ற தன்மை இருந்தாலும் நான்கு வயதுள்ள பெரும்பாலான பிள்ளைகளுக்கு, வாக்கியங்களைச் சொல்ல முடிவதுடன் வினைச் சொற்களைக் காலங்களுக்கு ஏற்ப மாற்றிக் கதைப்பதற்கும் பொருத்தமான பிரதிப் பெயர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கும் முடியும். இதன்படி, முன் பள்ளிக் கல்வியின் இறுதியில், பேச்சை ஆரம்பிப்பதற்கும் அதனைத் தொடர்ந்து செல்வதற்கும் பிள்ளைகளுக்கு முடியுமாதல் வேண்டும். அத்துடன் கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கூறுவதற்கும் உரிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.
6. முன் பள்ளிப் பருவப் பிள்ளைகளின் பேச்சு தன்மையமானதாக அமையும். முன் பள்ளிகளின் பிள்ளைகளுக்குச் செவிமடுப்பவருடைய கண்ணோட்டத்தை விளங்க முடியாது.
7. மொழி வளர்ச்சி, பிள்ளை எந்தளவு பேச்சு, செவிமடுத்தல் தொடர்பான பயிற்சிகளைச் செய்கிறது என்பதிலேயே தங்கியிருக்கின்றது. இதற்காக நல்ல முதியவர்களோடு செய்யும் இடைச் செயற்பாடுகளும் அவசியமாகும்.
8. எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்கு வருவது மொழிசார் அனுபவம் தொடர்பிலான பல்வேறுபட்ட பின்னணியுடனேயாகும்.

மொழி விருத்தியை முன்னேற்றுவதற்காக உபாயங்கள் பற்றிச் சிந்திப்பதற்கு முதலில் மொழித் தொடர்பாடல் திறன்கள் என்றால் என்ன? கேட்டலும் தானும் அடிப்படையாக அமைவது என்ன மொழித் திறமையை மையமாக வைத்தாகும்? என்ற விடயங்களை வரைவிலக்கணப்படுத்திக் கொள்வது எமக்கு அவசியமாகும்.

- **கேட்டல் என்பது ஒரு உள்வாங்கும் தொகுதியாகும். அதில்,**
    - செவிமடுத்தலின் பௌதீக இலட்சணங்களும்
    - கற்றுக் கொள்பவரின் அவதானமும்
    - செவிமடுக்கும் தகவல்களை ஒழுங்குபடுத்தும் ஆற்றலும் உள்ளடங்கும்.

- **பேச்சு என்பது வெளிப்படுத்தல் சார் மொழியாகும். அதில்,**
    - பேச்சுச் சத்தத்தை வெளிப்படுத்துவதும்
    - கருத்துள்ள வசனங்களைக் கட்டியெழுப்புவதன் ஆற்றலும் இலக்கண உபயோகத்தின் ஆற்றலும்
    - நோக்கங்கள் பலவற்றுக்காக மொழியைப்பாவிக்கும் ஆற்றலும் உள்ளடங்கும்.

அதனால் கேட்டல், பேச்சு சம்பந்தமான தேர்ச்சிகள் அபிவிருத்தி மிகவும் அவசியமாகும்.

- **பிள்ளைகளோடு தானும் தொடர்புறும் போது ஆசிரியர்கள் பாவிக்கக் கூடிய பல்வேறு உரையாடல் உத்திகள் கீழே காணப்படுகின்றன.**

1. திசைமுகப்படுத்தல் உத்தி:- பிள்ளையின் அவதானத்தை ஒரு தலைப்பில் ஈடுபடுத்துவதற்காகவும் ஏதாவது ஒரு முறையில் சிந்திப்பதற்காகவும் பிள்ளையிடம் கேட்டுக் கொள்வதற்கான கூற்றுக்கள், வினாக்கள், விமர்சனங்கள் போன்றவையே திசைமுகப்படுத்தல் உத்தி என்பதன் கருத்தாகும். உதாரணமாக நேரகாலத்தோடு ஒன்றைக் கூறல், பொதுமைப்படுத்தல், மனதில் ஏதாவது ஒன்றைக் கற்பனை செய்துகொள்ளல் போன்றவற்றை எடுத்துக் காட்ட முடியும்.
2. இலகுபடுத்தல் உத்தி:- இதனால் கருதப்படுவது மேலும் கலந்துரையாடுவதற்காகப் பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்கு உதவும் விமர்சனமாகும். இதைப் பிற்சோதனை உத்தி, வலியுறுத்தும் உத்தி, பரிசோதனை செய்யும் உத்தி என்றவாறு குறிப்பிடலாம்.
3. செவிமடுக்கும் உத்தி:- பிள்ளைகளுக்குப் புதிய கருத்துக்களை வழங்குவதற்கு உதவும் முகமாகப் பயன்படுத்தும், திசைமுகப்படுத்துவதும், இலகுபடுத்துவதுமான உத்தியாகும்.
4. உற்சாகப்படுத்தும் உத்தி:- இவை தொடர்ந்து கதைப்பதற்குப் பிள்ளைகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்ட கூற்றாகும். இவைகள் வாய்மொழி அல்லாதவைகள், புன்னகை, தலைகுனிதல் போன்றவை இவற்றுக்கு உதாரணமாகும்.
5. பூரணத்துவ உத்தி:- திருப்தி அடைந்த ஓர் உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படும் வகையில், ஆசிரியர்கள் கலந்துரையாடலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுடன் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் உரையாடலை ஆரம்பிக்கக் கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும்.

- **பிள்ளைகளுக்குச் செவி மடுங்கள்**

வீட்டுக்கும், பாடசாலைக்கும் இடையில் உள்ள பிரதான வேறுபாடு, அதிகமான பிள்ளைகள் ஒருவரின் கவனத்தை ஈர்ப்பதற்குப் போட்டியிடுவதுடன் ஆகக்கூடியது முதியவர்கள்

இருவருடைய கவனத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் போட்டியிடுவதாகும். அதனால், முதியவர்களோடு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பிள்ளைகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கதைப்பதற்குப் பதிலாகச் செவிமடுத்துக் கொண்டிருப்பர்.

ஒரு பிள்ளை கலந்துரையாடுவதற்கு ஆரம்பிக்கும்போது மட்டுமன்றி முதியவர் கேள்வியொன்றைக் கேட்ட பின்பும் பிள்ளைகள் கூறுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது அத்தியாவசியமாகும். முதியவர் ஒருவருடைய வினாவுக்கு விடையளிப்பதற்கு ஒரு சிறு பிள்ளை ஒரு செக்கன் அல்லது அதற்குக் கூடிய காலத்தை எடுப்பதுண்டு. விசேடமாக சிக்கலான ஒரு கருத்தை வெளிப்படுத்த வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதிக நேரத்தை எடுக்கும். எனினும் பெரும்பாலும் பொறுமையுடனில்லாத ஆசிரியர் அவ்வளவு நேரம் வரை காத்திருக்காது, அவர்களே வினாவுக்கு விடையளிப்பார் அல்லது பிள்ளையின் அறிவை மேம்படுத்துவதற்காக மேலதிகமாக யாதேனுமொன்றைக் கூறுவார். ஆசிரியர்களுடைய இவ்வெதிர்ச் செயற்பாட்டுக்குப் பிள்ளைகள் பலமுறை முகங்கொடுக்க வேண்டி ஏற்படின், அவர்கள் முழுமையாக மந்த உற்சாகமடைவதுண்டு. இல்லையெனின், தனது சிந்தனைக்கு வருவதையெல்லாம் சொல்வதுண்டு. இவ்வாறான இரு துலங்கல்களில் ஒன்றாவது திறமையான மொழிவிருத்திக்குப் பொருத்தமாக அமைவதில்லை.

## பேசுவதற்காகப் பிள்ளைகளுக்குத் தலைப்பொன்றைக் கொடுங்கள்

- கேள்வி கேட்டல், கேள்விகளுக்கு விடையளித்தல், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், எதிர்காலத்தில் ஏதாவதொன்று நடைபெறும் எனக் கூறுதல், அதற்குப் பிறகு என்ன நடக்குமென்பதை எதிர்பார்த்திருத்தல், இறந்த கால நிகழ்வுகளை ஞாபகப்படுத்துதல் போன்ற எல்லா விடயங்களும் பிள்ளைகளின் மொழித் திறன்களை விருத்தி செய்யக்கூடிய முக்கியமான வழிமுறைகளாகும்.

- படங்கள், கலந்துரையாடுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனமாகும். படங்களை அதற்காகப் பல்வேறு முறைகளில் பயன்படுத்த முடியும்.

- பாலர் பாடசாலைக்கு வெளியே முக்கியமான இடங்களைப் பார்ப்பதற்குப் போவதாலும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தக்கூடிய முக்கியமான விடயங்களைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

- மொழிவிருத்தி ஊக்குவிப்பை வழங்கக்கூடிய மேலும் ஒரு பிரயோசனமான முறை யாதெனில் அமைப்பாக்கப்பட்ட கலந்துரையாடலாகும். அதனால் கருதப்படுவது ஒரு திட்டத்துடனான கலந்துரையாடலாகும்.

## கதைத்தல் உரையாடுதலை ஊக்குவிக்க

- பேச்சு தன்னுடைய நிஜ வாழ்க்கை அனுபவங்களோடு தொடர்பானதாயின் முதியோர்களைப் போல் பிள்ளைகளும் பேசுவதற்கு மிகவும் ஆர்வம் காட்டுவர்.

- இவ்விதத்தில் பேசுவது அதிகளவில் பிள்ளைகளால் ஆரம்பிக்கப்படுவதுடன் ஆசிரியர் முகங்கொடுக்கும் ஒரு பிரச்சினை யாதெனில் ஆலோசகராகச் செயற்படும்

நடிபங்கிலிருந்து அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நடிபங்கிற்கு மாற வேண்டி ஏற்படுவதாகும்.

- பிரபல்யமான சிறுவர் பாடல்கள், சிறுவர்கள் மூலமாகத் தயாரிக்கப்பட்ட புதிய பாடல்கள், கீதங்கள், பேச்சுக்கள் மூலமாகப் பிள்ளைகள் வசனங்களையும் ஒலிகளையும் ஒத்திகை பார்ப்பதற்கு ஆசை காட்டுவதுடன் அதில் பெரும்பான்மையானவை, அவர்களிடையே வளரும் புதுமை இரசனையை வெளிக் காட்டும்.

## கேட்டல் திறன்களை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களை வழங்குக

- ஒரு பிள்ளை வெற்றிகரமான முறையில் கருத்து வெளியிடுவதற்குக் காரணம் வசனங்களுக்கும் ஒலிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைப் பிள்ளை கேட்கும் வகையில் அவதானமாகக் கேட்பதற்கு பிள்ளைக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதாலாகும்.

- கேட்கும் திறனை விருத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காக ஆசிரியர்களுக்குப் பலமுறைகள் இருப்பதுடன் அதில் சில இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

- பிள்ளைகள் பேச்சுக்களைச் செவிமடுப்பதால், மனதை ஒரு நிலைப்படுத்துவதற்குக் கற்றுக் கொள்வது மட்டுமன்றி நல்ல இலக்கியப் பேச்சுக்களின் மூலம் இன்ப அனுபவத்தைப் பெறுவர்.

## விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுங்கள்

- மொழியும் சிந்தனையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு ஒன்றிணைந்திருப்பதுடன் ஆசிரியருடைய பிரதான வேலையாவது பிள்ளைகள் செய்யும் அல்லது சொல்பவற்றை விளங்குவதற்கு அவர்களுக்கு உதவுவதாகும்.

- அவ்வாறே முறை சாரா முறையில் விளையாட்டொன்றில் ஈடுபடும் ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பிள்ளைகளுக்குத் தெரியாதவாறு, செவிமடுத்துக் கொண்டிருந்தால், ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளைக்கு ஏதாவதொன்றை விளக்குவதையும், அந்த தெளிவுபடுத்தல் குறைந்த விளக்கத்துடன் செய்யப்படுவதையும் உணர முடியும்.
- செய்தியொன்றைச் சரியாகச் சொல்வதற்கு முடியாமற்போவது, முறையாக விளங்காததால் அல்லது முறையாகக் கேட்கும் திறமை இல்லாததால் ஆகும். அல்லது அவ்வாறு ஆவதற்கு மேற்கூறிய காரணங்கள் இரண்டிலொன்று அல்லது இரண்டும் காரணமாக அமைய இடமுண்டு.

## எழுத்தறிவு வெளிப்படுதல்

- மிகவும் சிறிய வயதிலேயே பிள்ளைகளிடம் அச்சடிக்கப்பட்ட சொற்களால் கருத்துக்களும் எண்ணக்கருக்களும் வருவதுடன், ஒரு பிள்ளைக்குத் தனியாக வாசிக்க முடியுமாவதற்கு, நெடுநாட்களுக்கு முன்பிருந்தே பல்வேறு முறைகளில் அச்சடிக்கப்பட்டவற்றைப் பிள்ளைகள் அறிந்து கொள்வர்.

- மொழி முன்னேற்றமடைந்த சூழலொன்றில் பிள்ளைகளுக்கு வாசிக்கும் திறனுள்ள முதியவர்களைப் பாலர் பாடசாலையில் பார்ப்பதற்குக் கிடைப்பது முக்கியமாகும். ஏனெனில் அதன் மூலம் வாசிப்பது பெறுமதியான ஒரு நடவடிக்கை என்ற செய்தி வழங்கப்படுவதினாலாகும்.

- எழுத்தறிவு நெடுநாளாகப் படிப்படியாக வெளிப்படுவதொன்றாகும் என்பதை அறிந்திருத்தல் என்பதன் கருத்து யாதெனில், வாசிப்பதற்குப் பிள்ளைகள் ஆயத்தமாகும் நேரம் புதுமையான நேரமாக உதயமாகும்வரை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதாகும்.

- வாசிப்பதும் எழுதுவதும் ஒன்றோடொன்று வேறுபட்ட திறமைகள் என நாம் கருதினாலும் விருத்தியுறும் எழுத்தறிவை, அதன் சில பகுதிகளைப் பிற பகுதிகளிலிருந்து வேறுபடுத்தி விளங்க முடியாது. ஒரே நேரத்தில் ஒரே ஆழத்தில் அதன் சகல பகுதிகளையும் பகுப்பாய்தல் மிகக் கடினமான ஒரு காரியமாகும்.

- அச்சடிக்கப்பட்டுள்ளவற்றின் மூலமாக சந்தோசத்தைப் பெறுவதற்கும் பின்பு தானே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உறுதுணையாகும் முக்கியமான ஒரு முறை கதை கூறலாகும்.

- வாசிப்பைக் கற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளிடையே உள்ள ஆற்றலை அளக்கும் அளவு கருவி இருந்தாலும் எழுத்தறிவு சம்பந்தமாகக் கற்கும் சக்தி பிள்ளைக்குப் பிள்ளை வேறுபடுகிறது எனவும், அவர்கள் முகங்கொடுக்கும் அனுபவங்கள் அதில் செல்வாக்குச் செலுத்துமென்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

- சில பிள்ளைகள் சுயாதீனமாகவே வாசிப்பதில் ஈடுபாடுள்ளவர்கள் எனவும் ஆசிரியருடைய உதவியின்றி, வாசிப்பதற்குக் கற்பதாக தென்படுகின்ற போதிலும் மேலும் ஒரு தொகுதிப் பிள்ளைகள் அத்திறமையைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் எடுப்பர்.

### சில பிள்ளைகள் மிகவும் இலகுவாக வாசிக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வதற்குரிய காரணங்களில் சில கீழே தரப்படுகின்றன.

- மொழியையும் அச்சடிக்கப்பட்டவைகளையும் ஆரம்பத்திலிருந்தே கையாளுதல், முதியவர் ஒருவரோடு தொடர்புபட்டுச் செயற்படுதல், அவரோடு புத்தகங்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.
- மிகவும் விருப்பமான கதைகளை மீண்டும் மீண்டும் வாசித்தல், ஒரு புத்தகம் கதைக்கும் முறையில் கதைத்தல்.
- கதையொன்றை மனப்பாடம் செய்து கொள்ளல் (வாசிப்பதற்கு இடர்ப்படும் பிள்ளைகளுக்குக் கதையொன்றின் அமைப்புப் பற்றி அறியாதிருத்தலேயாகும்.)
- ஆரம்பத்திலிருந்தே பிள்ளையை உற்சாகப்படுத்தி, முதியவர் ஒத்துழைத்துச் செய்யும் வாசிப்புச் செயற்பாடுகள் இருத்தல்
- தனியார் நூலகங்களை விருத்தி செய்தல்

உரத்துக் கதை வாசித்தல்-பிள்ளைக்கு ஓரளவு நன்றாக வாசிக்க முடியுமாகும் வரை மட்டுமன்றி, அதன் பிறகும் அவ்வாறே செய்தல் வேண்டும்.

எழுத்தறிவு சம்பந்தமாக கிரகித்தலை விருத்தி செய்வதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்தும் பொருட்டு இவ்விடயங்கள் முக்கியமாவதால் வாசிப்பைப் பழக்குவதற்குத் தமது பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்கு விருப்பமான பெற்றோர்கள் அவை பற்றிய விளக்கமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## வெளிப்படுகின்ற எழுத்தாற்றல்

இது பிள்ளைகள் சம்பிரதாய பூர்வமான எழுத்தறிவை விருத்தி செய்வதற்கு முன்பு அவர்களுடைய வாசிப்பையும் எழுத்தையும் பற்றிய நடத்தைகள் எனக் கருத்துக் கூறப்பட்டுள்ளது. அதனால் வெளிப்படும் எழுத்தாற்றல் ஏற்படுவது இயல்பாக விருத்தியுறும் தன்மையினாலாகும்.

முதற் பருவத்தில் எழுதுவது, நியம வடிவத்தில் அமைவதற்கு முன்பு பல்வேறு வடிவங்களை எடுக்கும். அவை, கீறுதல், வரைதல், ஒலிக்க முடியாத எழுத்துக்கூட்டம் வரைதல், நியம அச்செழுத்துக்களைப் பிரதிபண்ணல், புதிதாக உருவாக்கப்பட்ட எழுத்துக்கள், சுருக்கங்கள், எழுத்துக்களின் உறுப்பமைவு இன்மை போன்றவைகளாகும். எழுத்துக்களுக்குச் சமமான வடிவு பெறுவதற்கு ஆரம்பிப்பது சாதாரணமாக மூன்று வயதிலாகும்.

நான்கு வயது பூர்த்தியாகும் போது பிள்ளைகள் கதை எழுதும் போக்கில் எழுத்துக்களைக் கோர்த்து எழுதுவதற்கு ஆரம்பிப்பர். பிள்ளைகள் படிப்படியாகப் பின்வரும் உத்திகளைக் கையாண்டு நியம எழுத்துக்களை எழுத ஆரம்பிப்பர்.

- ஒலிக்கும் விதத்தில் எழுத்துக்களை எழுதுதல்
- தெளிவாகத் தெரியும் விதத்தில் எழுத்துக்களை எழுதுதல்
- அர்த்தத்துக்கு ஏற்ப எழுத்துக்களை எழுதுதல்

இவ் உத்திகள் விருத்தியுறுவது முறையான ஒழுங்கிலாகும். எனினும் பிள்ளைகள் சிலருக்கு முறைசார் பாடசாலை வயதுக்கு முன்பு சரியாக எழுதவும் எழுத்துக்களை எழுதவும் முடியும். அவ்வாறாயினும் சில பிள்ளைகளுக்கு அவர்களுடைய மூன்றாவது வயது இறுதிப்பகுதியிலும் நாலாவது வயதின் முதல் பகுதியிலும் நியம எழுத்துக்களினாலான சொற்களை எழுதும் ஆற்றல் கிடைக்கும்.

## வெளிப்படும் எழுத்து ஆற்றலின் படிகள்

பிள்ளைகளுடைய வாசிப்பு விருத்தியைக் கடினமாக வகைப்படுத்தல் செய்வது ஆபத்தானது போலவே எழுதுதல் தொடர்பான நிலைமையும் அதுவேயாகும்.

ஒரு பிள்ளையின் எழுதும் ஆற்றல் மட்டத்தை ஐந்தாக வகைப்படுத்த முடியுமாவதுடன் அதற்கு முன்பு அவர்களை எழுதுவதற்கு முடியுமானவர்கள் என அறிமுகப்படுத்த முடியாது. பிள்ளைகள் எழுதுவதற்கு முடியுமானவர்களாக மேலே வரும்போது பாவிக்கும் பிரதான அடிப்படைகள் கீழே காணப்படுகின்றன.

- மீள் ஆவர்த்தன அடிப்படை - கருத்தொன்றை சொல்பவர்களாகப் பிள்ளை ஒரே அடிப்படை முறையொன்றைப் பயன்படுத்தல். உதாரணம்: கருத்தொன்றைச் சொல்வதற்காக ஒரே எழுத்துக்கள் தொடரை உபயோகித்தல்.

- திசை முக அடிப்படை - எழுத்துக்களை எழுத எவ்விடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்? எழுத்துக்களை எத்திசைக்கு எழுதிக்கொண்டு செல்ல வேண்டும்? என்பனவற்றைப் பிள்ளைகள் தெரிய வேண்டும். இந்நிபந்தனையைத் தெரியும் வரை பிள்ளை எழுத்துக்களையும் குறியீட்டையும் தாளின் எந்த இடத்திலும் அடையாளப்படுத்துவர்.

- நெகிழ்ச்சி அடிப்படை - அதாவது, பெரும்பான்மையான முதியவர்களுடையதும் விசேடமான பெற்றோர்களுடையதும் கடுமையான கவலைக்குக் காரணமாகும் வண்ணம் இரேகைகளையும் எழுத்துக்களையும் எதிர்த்திசையில் எழுதுதல். உதாரணம் ‘ட’ என்ற எழுத்தை அல்லது ‘ல’ என்ற எழுத்தை எழுதுவதையும் காட்டமுடியும்.

- ஆக்கக் கொள்கை : நெடில் எழுத்துக்களை எழுதுவதற்காகத் தெரிந்த குறிகள் தொகுதியைப் பாவித்தல்.

- இன்வென்டரி (பதிவு) அடிப்படை - பிள்ளை தன்னுடைய கற்றல் பற்றிக் கணிப்பீடு செய்து தனக்குத் தெரிந்த எல்லாச் சொற்களினதும் பட்டியல் ஒன்றை எழுதுதல்.

எழுதுவதற்கு ஒரு நோக்கம் உள்ளதென்பதைப் பிள்ளைகள் தெரிந்து கொள்வது அவசியமாகும். இது அவர்களுடைய செயல்களின்போது வெளிப்படும். அதனால் வெளிப்படும் எழுதும் ஆற்றல் பற்றிய உத்தி, விளையாட்டுடன் தொடர்புபடும் ஒன்றாயினும் தனது மொழியைப் பாவிப்பதிலே, ஆக்கபூர்வமாவதற்கும் விருப்பமான முறையில் செயற்படுவதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்த முடியும்.

## தொடர்பாடல் திறமைகளை விருத்தி செய்வதற்காக உத்தேச செயற்பாடுகள் சில

- தொடர்பாடல் திறமைகளுக்கு ஊக்கமளிப்பதற்கான செயற்பாடுகள்

## வளர்ச்சியுறச் செய்யும் நீர்

தேவையான பொருட்கள் : எதுவுமில்லை

செயற்பாடு : தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அமரும் படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள் சிறிது நேரத்துக்கு அவர்களுடைய உயரத்தை அதிகரிக்கும் கொஞ்ச நீரைக் கற்பனையாகக் குடிக்கும் படி அவர்களுக்குக் கூறுங்கள். அறை பூதங்களால் நிரம்பும் வரை பெரிதாக்கும் செயல் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள். குடித்த நீரின் சக்தி முடியும் வரை பூதங்கள் போல் அறையினுள் அங்குமிங்கும் செல்லும் படி அவர்களுக்குக் கூறுங்கள். குடித்த நீரின் சக்தி குறைந்த பின், தன்னுடைய உடலை முதல் இருந்த அளவுக்கு சிறிதாக்கிக் கொள்ளும் படி அவர்களுக்குக் கூறுங்கள். மேற்சொன்ன செயற்பாட்டை மீண்டும் மீண்டும் செய்யுங்கள். செயற்பாடு பெரிய சிறிய மிகச் சிறிய, மிகப் பெரிய என்றவாறு அளவு வேறுபாடுகளைக் கலந்துரையாடுவதற்கு வளர்ந்தோருக்கு உதவலாம். அதில், சிந்திப்பதற்கு உள்ள சக்தி அதிகரிப்பதுடன் செயற்பாட்டுக்கு உற்சாகமும் கிடைக்கின்றது.

## நடமாடும் சொற்கள்

தேவையான பொருட்கள்: எதுவுமில்லை

செயற்பாடு: ஏதாவது தெரிவு செய்து கொண்ட சொற்களைக் கூறிக் கொண்டு மெதுவாக அறையினுள் அங்குமிங்கும் செல்லும் படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள். சொற்களின் ஒழுங்கான கருத்தை அவர்கள் தெரிந்து கொள்ள அவசியமில்லை. ஆனால் அச் சொற்களை அவர்கள் விளங்கியிருப்பது எவ்வாறு எனவும் அவர்கள் அவை பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் எனவும் கூறுவது முக்கியமாகும். உத்தேச சொற்களாவன: நீளத்தை நீட்டுங்கள், வளையுங்கள், திரும்புங்கள், நடவுங்கள், உயரப்பாயுங்கள், விழுங்கள், பாயுங்கள், பாய்ந்து பாய்ந்து செல்லுங்கள், துடியுங்கள், அமைதியற்ற நிலைமை மாதிரி நடந்து கொள்ளுங்கள், தவழுங்கள், சுருளுங்கள், மீண்டும் நிமிருங்கள் போன்றவைகளாகும். இச்செயற்பாடு பிள்ளைகளின் சொற்களஞ்சியத்தைக் கூட்டுவதற்கும் பல்வேறு விதத்தில் அசைவுகளை மாற்றி விளங்குவதற்கும் உதவும். பல்வேறு அசைவுகள் துலங்கல்களை உற்சாகப்படுத்தும் வகையில் பல்வேறு சங்கீதங்களின் செல்வாக்கினையும் உபயோகிக்க முடியும்.

## படமொன்றைப் பற்றிக் பேசுதல்

தேவையான பொருட்கள்: மனிதர்கள் உட்பட, அன்றாடம் காணும் பொருட்களின்

செயற்பாடு: படத்தில் நடப்பது என்ன என்பதைப் பிள்ளைகளிடம் விசாரியுங்கள். பொருத்தமாயின் அடுத்ததாக நடைபெறப்போவது என்ன? படத்தில் மனிதர்கள் சிந்திப்பது என்ன? அது ஏன்? என்றவாறு அவர்களோடு கலந்துரையாடுங்கள். இவ்வாறு கலந்துரையாடுவதன் மூலம் கிடைக்கும் மாற்றமான பெறுபேறுகள் எவை என நினைவுபடுத்தல், நேரகாலத்தோடு கூறுதலும் வலியுறுத்தலும் போன்றவை இலகுபடுத்துவதாக அமையும். படத்தின் பிரதான கருத்தை வேறுபடுத்தி எடுப்பது எவ்வாறு எனவும் அவர்களுக்குக் காணமுடியுமானவற்றைப் பற்றி விபரமாக அறிக்கைப் படுத்துவதற்கும் பிள்ளைகள் கற்றுக் கொள்வதுண்டு.

## பொருட்களுக்குப் பெயரிடல்

தேவையான பொருட்கள்: ஒரு டேப் ரெகோடர், வெகியூம் கிளீனரின் ஒலி (சுருதிப் பெட்டி ஒன்றினது, மேளம் ஒன்றினது, மணியொன்றினது என்றவாறு) சங்கீதக் கருவிகளது சத்தம், கதவொன்றை வேகமாக அடைக்கும்போது ஏற்படும் சத்தம், தொலைபேசியொன்று ஒலிக்கும் சத்தம், சலவை இயந்திரமொன்றின் சத்தம், நீர்க் குழாயின் மூலம் நீர் கசியும் சத்தம் போன்ற நடைமுறையில் பாவிக்கும் பொருட்களது சத்தங்கள் அடங்கிய பதிவுநாடாவொன்று. சத்தங்கள் இரண்டுக்கிடையில் இடைவெளியொன்று இருக்க வேண்டும்.

செயற்பாடு : சத்தத்தை உணர்ந்து கொண்டு, அது என்ன சத்தம் எனப் பிள்ளைகளைக் கூறும் படி சொல்லுங்கள், சரியான விடை கிடைக்குமாயின், பொருள் பற்றி பிள்ளைகள் அறிவது யாது? என்பதை அறிந்து கொள்வதற்குப் பொருத்தமான கேள்விகளைக் கேளுங்கள்.

## நீங்கள் செவிமடுக்கிறீர்களா?

தேவையான பொருட்கள்: ஏதாவது விருப்பமான ஒரு கதை

செயற்பாடு : வழமையான முறையில் கதை சொல்லும் வகையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்

கொள்ள வேண்டும். எனினும் இச்சந்தர்ப்பத்தில் கதை சொல்லிக் கொண்டிருப்பதற்கிடையில் அடிக்கடி ஒவ்வொரு பிள்ளைக்கும் கதை சம்பந்தமாகப் பேச இடமளியுங்கள். இவ்வாறு பேசுவதற்கிடையில் உங்கள் குரலை மாற்றாதிருங்கள். ஒரு ஆலோசனையையாவது அவர்கள் கவனியாது இருக்காது மிகவும் அவதானமாகச் செவிமடுக்க வேண்டும். எடுத்துக் காட்டாக ஒரு காலத்தில் (நிலுசி, உங்களுடைய கண்ணை மூடுங்கள்) தன்னுடைய நண்பர்களோடு குகையொன்றில் வசித்த (வாணி, உங்களது மூக்கைப் பிடியுங்கள்) பெரியதோர் எலி இருந்தது. (சாந்தி, எழும்புங்கள்)

## கவிதையும் கதையும்

கவிதையும் கதையும், ஆரம்பப் பாலர் கல்வியில் அத்தியாவசியமான அங்கங்களாகும். கவிதை பற்றிய நல்ல விளக்கமுள்ள பெரும்பாலான புத்தகங்களும் சஞ்சிகைகளும் இன்று சந்தையிலுண்டு. இக்கதைகளினதும் கவிதைகளினதும் உள்ளடக்கம் இலக்கிய உலகம் பற்றிய பிள்ளைகளினுடைய கிரகித்தலை விருத்தி செய்வதில் முக்கியத்துவம் வாய்ந்தது. பிள்ளைகளினுடைய பெரும்பாலான புத்தகங்களின் சித்திர வேலைகள் ஒரு முக்கியமான பகுதியாகும். பாடப் புத்தகங்களில் உள்ள உயர் தரத்திலான உதாரணங்களின் மூலம் பிள்ளைகள் அழகியல்சார் தெளிவைப் பெறுவர். நன்றாகத்தெரிந்த கதைகள் தொடர்பாக நீண்ட விளக்கமான கருத்துக்களை அறிந்து கொள்வது பிள்ளைகளுக்கு முக்கியமானதாகும்.



# 08

# பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி

## அறிமுகம்

முன் பள்ளிப் பிள்ளைகளினுடைய அறிதலாட்சி விருத்தி தொடர்பாகக் கவனிக்குமிடத்து, அது மகிழ்ச்சியான காலமாகும். சில பிள்ளைகள் இன்னும் புலன் அசைவுப் பருவத்தில் தங்கி இருப்பினும், முன் பள்ளிக்கு வரும் அதிகமானோர் ஜீன் பியாஜே என்ற உளவியலாளர் காட்டும் முன் தூல சிந்தனைப் பருவத்திற்கு வந்துள்ளதாகக் கொள்ள முடியும்.

## முன் தூல சிந்தனைப் பருவத்தில் பிள்ளைகளின் சிந்தனையிலுள்ள இலட்சணங்கள்

- பிள்ளைகளுடைய சிந்தனை அறிதலாட்சிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் காண்பவற்றை நம்பிக்கை கொள்வதுடன் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில், ஏதாவதொரு பொருளின் ஓர் இலட்சணத்தின் பக்கம் மட்டுமே அவதானத்தைச் செலுத்த முடியும். சாதாரணமாக பிரதான இலட்சணங்களின் பக்கம் அவர்களுடைய அவதானம் செல்லும். இதனை மையப்படுத்தல் என பியாஜே பெயரிட்டுள்ளதுடன் அதில் ஒரு சமயத்தில் பொருளின் வேறு இலட்சணங்களைப் பார்ப்பதற்குப் பிள்ளைகளுக்கு உள்ள சந்தர்ப்பத்தை இல்லாமற் செய்யும். அவ்வாறாயினும் தர்க்கிக்கும் சிந்தனையை வளர்ப்பதற்கு முன் தேவையொன்றாகப் பிரதான அறிவைப் பெறுவதற்குப் பிள்ளைகளுக்கு முடியும். பிள்ளையினுடைய சிந்தனையை மாற்ற முடியாது. இப்பருவத்தில் பிள்ளைகளின் அவதானத்தைச் செலுத்த முடியும். இது பரிணாமத்தின் பக்கமல்ல பரிணாமத்தின் ஆரம்பம் அல்லது இறுதிப் பகுதியின் பக்கமாகும். எடுத்துக்காட்டாகத் தன்னுடைய சகோதரியை விடத்தானே பெரியவர் என்பதை பிள்ளையொன்றுக்கு விளங்கிக் கொள்ள முடியுமாயினும் தன்னுடைய சகோதரி தன்னை விட இளையவள் என்பதை விளங்கிக் கொள்வதற்கு ஒரு பிள்ளைக்கு முடியாது.

- பிள்ளைகளுக்கு எதையுமே பாதுகாத்துக் கொள்வது கடினமாகும். அதனால் பொருட்கள் பலவற்றின் இடத்தை மாற்றும்போது, அப்பொருட்களின் தன்மை மாறாது என்பதை விளங்குவதற்கு அவர்களுக்கு முடியாதுள்ளது. பரிமாணத்தின் நீளத்தின் அல்லது அகலத்தின் மாற்றங்களை விளங்குவதற்கு அவர்களுக்கு முடியாது. பெரிது, சதுரப் பெறுமானம், நிறை, (திரவ, திண்மப் பொருட்கள் இரண்டுக்கும்) பொருத்தமான மாற்றங்களை இப்பருவத்தினுள் பூரணமாகத் தெளிவு பெற முடியாது. ஆயினும் சிறு பருவத்திலேயே அனுபவங்களை வழங்குவது முக்கியமாகும். பாதுகாப்பு பற்றிய பிள்ளைகளிடமுள்ள இயலாமை பற்றி பியாஜேயினுடைய கருத்தாவது, அவர்களுக்கு உதவி செய்யின், அவர்கள் மந்த கதியிலாவது பாதுகாப்பு ஆற்றலை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களுக்கு முடியும் என்பதாகும்.

- பிள்ளைகளின் சிந்தனை ஆத்மாவை மையப்படுத்தியதாகும். பிள்ளைகள் தங்களுக்குத் தென்படும் விதத்தில் உலகத்தைப் பார்க்கும் போது அதற்கு மாற்றமான முறையில் ஏதாவதொரு பொருளை அல்லது காட்சியைப் பார்ப்பதாயின் அது எவ்வாறு தென்படும் என அவர்களுக்கு நினைக்க முடியாதிருக்கும் என பியாஜே தர்க்கம் செய்கிறார். ஆத்ம மையம் என்பது இயற்கை நிகழ்வுகளைப் பிழையான முறையில் விளங்குவதற்குக் காரணமாயுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

- முன் தூல சிந்தனைப் பருவப் பிள்ளைகளுக்குத் தர்க்கரீதியாகச் சிந்திக்க முடியாதெனினும் அவர்களுக்குச் சிந்தனைக் குறைபாடு உள்ளது என்பது அதன் கருத்தல்ல, மறுபக்கம் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதன் அடிப்படையாக, விபரம் அறிதல், கேள்வி எழுப்புதல், மாற்றம் காணுதல், மனக் காட்சிகளைக் கட்டியெழுப்பல் போன்ற செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடுவர்.

- பரவலான தனிநபர் வேறுபாடுகள் காணப்படுவதால் இந்த இலட்சணங்களை உதாரணங்களாக மட்டுமே கருத வேண்டும். தனிநபர் வேறுபாட்டை விளங்குதல், பிள்ளைகளினுடைய வளர்ச்சி பற்றி சகல பகுதிகளையும் கவனித்துப் பார்க்கும் போது முக்கியமாகும். அத்துடன் பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றலை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவும் போது, அது முக்கியமாகின்றது. முன் தூல சிந்தனைப் பருவத்தின் சாராம்சம் யாதெனில், குறியீட்டு ரீதியான பிரதியீட்டைப் பாவிப்பதற்குப் பிள்ளையிடம் காணப்படும் வளரும் ஆற்றலாகும். பின்பு ஒரு காலத்தில் தர்க்கரீதியாகச் சிந்திப்பதற்குப் பெரும்பாலும் உதவுவது இவ்வாற்றலை விருத்தி செய்தலாகும்.

## தர்க்கரீதியாகச் சிந்திப்பதற்குப் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் அறிதலாட்சித் திறன்கள்

- அவதானிப்புத் திறமைகள்
  பிள்ளைகளின் மாற்றங்களும் சம தன்மைகளும், வேற்றுமைகளும், பொருத்தப்பாடின்மையும் பற்றிய விளக்கமொன்றைப் பெறுவது, ஏதாவதொன்றில் கடுமையாக அவதானத்தைச் செலுத்துவதன் மூலம் மட்டுமேயாகும். முப்பரிமாண பொருட்களைக் கவனமாகப் பார்ப்பதற்குப் பிள்ளைகள் பழக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பார்ப்பதற்கு அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

- வகைப்படுத்தும் திறமைகள் (தெரிவு செய்தல்)
  மாற்றமில்லாது இருக்கும் அளவீட்டுக்கு ஏற்ப வகைப்படுத்துவதற்குப் பிள்ளைகள் காட்டும் முதல் முயற்சி, சகல அளவுகளாலும் ஒரே மாதிரியான பொருட்களை ஒன்றோடொன்று சமப்படுத்திப் பார்ப்பதாகவே தென்படுகிறது. அவ்வாறாயினும், ஐந்தாவது ஆண்டு இறுதிப்பகுதியில் பிள்ளைகளுக்குத் தம்முடைய கோட்பாடுகளுக்கு ஏற்ப பொருட்களைத் தெரிவு செய்வதற்கு முடியும்.

  பிள்ளைகளின் முழுமையான எண்ணக்கரு விருத்திக்கு இத்திறமைகள் முக்கியமாகும். வகைப்படுத்தலின் மூலம் பிள்ளைகள் சூழலின் சிக்கலான தன்மையை விளங்குவதுடன் தனக்குப் பக்கத்திலிருப்பவற்றை இனங்காண்பதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். வகைப்படுத்தும் திறமையை விருத்தி செய்து கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு உதவி செய்யும்போது ஆசிரியர், பிற்பட்ட காலத்தில் அறிவை அடிப்படையாகக் கொண்டு அடித்தளமிடுவதற்குப் பிள்ளைக்கு சக்தியைப் பெற்றுக் கொடுக்கிறார். அதன் மூலம் அடிக்கடி மீண்டும் கற்கும் அவசியம் குறையும்.

## வகைப்படுத்தலுக்குப் பிள்ளைகளுக்கு உதவ முடியுமான முறைகள்.

1. பல்வேறு பொருட்களின் இலட்சணங்கள், அதாவது பெரிது, வடிவம், அது செய்யும் காரியங்கள், மணம், ஒலி, இரசித்தல், இரசனை போன்றவற்றை ஆய்வு செய்து, பெரியோர்களுக்கும் மற்றைய பிள்ளைகளுக்கும், அதனைப் பற்றித் தெளிவுபடுத்துவதற்கு பிள்ளைக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். சாதாரணமானது அசாதாரணமானது என்ற இரு வகைகளையும் சோதித்துப் பார்ப்பதற்காகச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

2. ஒவ்வொரு பொருட்களும் ஒரேமாதிரியாவது எவ்வாறு? போன்ற விபரங்களைத் தெளிவுபடுத்துவதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். ஒரே மாதிரியான வித்தியாசமான போன்றவைகளை பூரணமாக விளங்குவதாயின், பிள்ளைகளைத் தெரிவு செய்தலும் சமப்படுத்தலும் தொடர்பாக பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்

கொள்ள வேண்டும். ஒத்த தன்மைகள், வித்தியாசங்கள் பற்றிப் பேசுவதற்கு அதாவது அன்னியோன்னிய (எல்லா வகையிலும் ஒரே மாதிரியானது என்பது) அல்லது மாதிரி (சில விடயங்களில் ஒரே மாதிரியானதென்பது) போன்ற சொற்களின் சிலேடைக் கருத்தின் காரணமாக முரண்படும் நிலைக்கு ஆளாகின்றனர். இவ்வாறான நிலைக்கு ஆளாகும் பிள்ளைகள், பின்பு அவர்களுடைய கணித அறிவை விருத்தி செய்வதிலே கஷ்டத்துக்கு உள்ளாவர்.

3. வகைப்படுத்தல் செய்யும் வகைகளைத் தாமே தீர்மானம் செய்யும் விதத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யின் பொருட்களைப் பல்வேறு விதங்களில் பாவிக்கவும் விளக்கவும் முடியும் என்பதனை அவர்கள் விளங்குவதற்கு இடமுண்டு. இத்திறமையை விருத்தி செய்யும்போது அவர்கள் அடுத்த வளர்ச்சிப்படிக்காக அடித்தளமிடுவார்கள். அடுத்த வளர்ச்சிப்படியிலே சிலவற்றுக்குப் பல இலட்சணங்கள் உண்டு என்பதும் அதனால் தனியாக ஒரு வகுப்புக்கு உரித்துடையதல்ல என்பதும் அவர்களுக்கு விளங்கும். எடுத்துக்காட்டாக ஓர் ஆண்பிள்ளை அவனுடைய பெற்றோர்களுடைய மகனாவது மட்டுமன்றி, மேலும் மற்றொருவரது சகோதரராக, மைத்துனனாக, நண்பனாக ஆகி ஓர் உறவினராகவும் முடியும்.

4. ‘சில’, ‘சகல’ போன்ற சொற்களுக்கிடையில் உள்ள வித்தியாசத்தை விளங்குவதற்குப் பிள்ளைகளுக்கு உதவுங்கள். பிள்ளைகளுக்கு இச் சொற்களுக்கிடையில் இருக்கும் வேறுபாட்டை விளங்குவதற்கு வழிகாட்டலைப் பின்பற்றுகின்ற, பொருத்தமான சந்தர்ப்பங்களில் பாவிக்கும் சொற்களைச் செவிமடுக்கின்ற அநேக சந்தர்ப்பங்கள் கிடைக்க வேண்டும். ‘சில’, ‘சகல’ போன்ற எண்ணக்கருக்களை விளங்குதல், ஏதாவதொன்றின் பகுதிக்கும் அதன் முழுப் பொருளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை விளங்குதல் பிரதானமாகும். ‘நிறைந்த’, ‘வெற்று’ போன்ற சொற்களின் கருத்தை விளங்குவதற்கும் பிள்ளைகளுக்குக் கூடிய காலம் தேவைப்படும்.

5. கணிதம் என்பது தொடர்புகளைக் கற்பிக்கும் பாடமாகும். அதில் இவ்வெண்ணக்கருவை விளங்குவதற்குப் பிள்ளைகளுக்குக் கடினமாகும். பொருட்கள் தொடர்பு பட்டிருப்பது எவ்வாறு என்பதைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள வேண்டும். உதாரணங்கள்: குடும்பத் தொடர்புகள், சகோதரர்கள், சகோதரிகள், தந்தை, தாய், மாமி என்றவாறாகும். எண்ணிக்கைக்கு இடையிலுள்ள தொடர்பையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டு: 1, 2 ஐ விடக் குறைந்தாகும் என்ற தொடர்பின் அடிப்படையில் 1 இற்கும் 2 இற்கும் இடையில் தொடர்பை விளங்குவதற்குப் பிள்ளைகளுக்கு முடியும். முதியோர்களோடு பேசும்போது, விளையாடும் போது, பிள்ளைகள் இக்கணித எண்ணக்கருக்களை விளங்குவதற்கு ஆரம்பிப்பர். மேலே, கீழே, அடுத்த, மேல், கீழ், பின்னால் போன்ற கணிதக் கலைச் சொற்களைக் கற்பதற்கும் விளையாட்டின் மூலம் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் உண்டாகும்.

## ● ஒழுங்கு முறையைத் தயாரிக்கும் திறமைகள் (தரப்படுத்தல்)

தரப்படுத்தல் என்பது, நிறை, வயது அல்லது உயரம் போன்ற யாதேனும் அளவிடைக்கு ஏற்ப பொருட்களை முறையாக வைத்தலைக் குறிக்கும். அது சாதாரணமாக ஒரு அறிதலாட்சித் திறமையாகும். அத்துடன் அது வகைப்படுத்தல் ஆற்றலைப் போலவே முன்பள்ளிக் காலத்தின் பின் சிறிது காலம் செல்லும் வரை அடைய முடியாததுமாகும்.

## ● தரப்படுத்தல் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் முகமாகப் பிள்ளைகளுக்குத் தேவையான நிச்சயிக்கப்பட்ட அனுபவங்கள்:

1. பொருட்களை ஒழுங்கு முறையாக வைப்பதற்குச் சந்தர்ப்பங்களை வழங்குவதற்காகப் பெரியவை பற்றிய தொடர்புகளைக் கலந்துரையாடும் போது, ‘உயரம்’, ‘விட

உயரம்', 'பெரிய', 'விடப் பெரிய' போன்ற பொருத்தமான சொற்களஞ்சியங்களைப் பாவிப்பதற்கு உற்சாகப்படுத்த வேண்டும். பெரியதன் அடிப்படையில் பொருட்களை வகைப்படுத்தக் கற்பதற்குப் பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்கு மேலதிகமாக, அவற்றை நிலை, ஓசை என்பவற்றின்படி வகைப்படுத்துவதற்கும் அவர்களை உற்சாகப்படுத்த முடியும். மணல் கடதாசி கிடைப்பதற்கு வழிசெய்து, கடின மணல் கடதாசியிலிருந்து மென்மையான மணல் கடதாசி வரை முறையாக வைப்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். பெரிய சத்தத்தில் ஒலிக்கும் மணியையும் குறைந்த சத்தத்தில் ஒலிக்கும் மணியையும், இனிப்புச் சுவையிலிருந்து புளிப்புச் சுவை வரை சுவை வேறுபடும் சுவையான உணவு வகைகளையும் வர்ணத்தைக் கடுமையான நிறத்திலிருந்து இளம் நிறம் வரையும் ஒழுங்கு முறையாக வைப்பதற்கும் இடமளிக்க முடியும்.

2. பொருட்களோடு பிள்ளைகள் விளையாடும் போது, ஒப்புவமை செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி, அவர்களுக்குத் தமது சகல புலன்களையும் செயற்படுத்துவதற்கு இடமளிக்க முடியும். அவ்வாறு செய்வதால் பொருட்களில் அடங்கியுள்ள இலட்சணங்கள் பற்றிய சரியான விளக்கமொன்றை விருத்தி செய்து கொள்ள முடியும். ஒப்புவமையை இலகுபடுத்துமுகமாகப் பொருட்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் வெளிப்படையாக இருத்தல் வேண்டும். அதற்குக் காரணம் இவ்வயதில் பிள்ளைகளுக்கு நுணுக்கமாக ஒப்புவமையைக் காணமுடியாததாலாகும்.

3. ஒழுங்கு முறையாக வைக்கப்பட்ட பொருட்களின் கூட்டத்தை அது போன்ற பொருட்களின் கூட்டத்தோடு சமப்படுத்திப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் அது போன்ற இன்னொரு செயற்பாடாகும். இது ஒவ்வொரு பொருளையும் வேறுவேறாக ஒழுங்கு முறையாக வைப்பதை விட மிகவும் சிக்கலான ஒரு முறையாகும். ஏனெனில் இரு பொருட் கூட்டங்களையும் ஒழுங்கு முறையாக வைத்து இரண்டுக்கும் இடையிலுள்ள மூடிகளை, அதைவிடப் பெரிய அல்லது சிறிய மூடிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முயற்சி செய்தல் மூலம் அல்லது பல்வேறு அளவில் ஆணிகள், சுரைகள் கொண்டு, ஆணிகளுக்கு ஒரு சுரையை இடுவதன் மூலம் பிள்ளைகள் அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்வர்.

## எண்சார் திறமைகள்

எண் தொடர்பான எண்ணக்கருக்களை விருத்தி செய்து கொள்ளும் முகமாகப் பிள்ளைகளை ஊக்குவிக்க முடியுமான முறைகள்

1. மூன்று வயது அல்லது நான்கு வயது உள்ள பிள்ளைகள் பொருட்களை எண்ணுவதற்கும் எண்களைப் பெயரிடுவதற்கும் கற்கும். ஆனால் எண்ணுவது என்பதன் மூலம் பெரியவர்கள் கருதும் விடயங்களையே பிள்ளைகளும் கருதும் என நினைக்க முடியாது. அவர்கள் இலக்கங்களை மீண்டும் மீண்டும் சொல்ல இடமுண்டு. அவ்வாறு செய்வது காரணமாவதுடன் அவர்கள் பிழையான முறையில் எண்ணுவதற்கும் இடமுண்டு. முன் பள்ளி செல்லும் வயதிலுள்ள பெரும்பான்மையான பிள்ளைகளுக்கு எண்களைப் பேண முடியாததுடன் எண்களை முறையாக வரிசைப்படுத்துவதும் கடினமாகும். அவ்வாறானதொரு நிலையில் பிள்ளை செய்யும் இலக்கங்களின் மொத்தத்தை பெரியவர்கள் ஏற்று, பிறிதொரு தினத்தில் பிள்ளைக்கு முன்பாகச் சரியாக எண்ணிக்காட்டுவது பொருத்தமாகும். அப்போது பிள்ளை அவரைப் பின்பற்றி இறுதியில் சரியாக எண்ணும்.

2. ஒவ்வொன்றுக்குமிடையில் தொடர்புகளை இனங்காண்பதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். மேசையைத் தயார் செய்தல், ஒவ்வொரு பால் போத்தலிலும் குழாய் ஒன்றை இடுதல், ஒவ்வொரு நிற மைப்பாத்திரத்துக்கும் தூரிகை ஒன்றை இடுதல், இக்கடினமான எண்ணக்கரு பற்றி அறியச் செய்யும் செயன்முறைச் செயற்பாடாகும்.

3. குறைந்த அல்லது கூடிய போன்றவற்றை விளங்கிக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு மேலும் ஒரு வருடம் அல்லது அதனை விடக் கூடிய காலம் செல்லும். எனினும் திரவ, திண்மப் பொருட்களை ஒப்புவமை காணும் ஆற்றலை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு அநேகமான சந்தர்ப்பங்கள் உதயமாகும். திரவம் என்பது, ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்துக்கு ஊற்ற முடியுமான பொருட்களையே ஒப்புவமை காண முடியும். அவை நீர், பானம் போன்றவையாகும். இவை எண்ண முடியுமானவை எனப்பகுக்க முடியாது. திண்மம் என்பது, வேறுபடுத்தி எண்ண, நிறுக்க முடியுமானவையாகும். அவை மணிகள், இனிப்புக்கள், வாகனங்கள் போன்றவையாகும். இரு வகைப் பொருட்களையும் ஒப்புவமை காணும் சந்தர்ப்பத்தை பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## இடவெளித் தொடர்புகள் பற்றிய ஆற்றல்கள்

இடவெளித் தொடர்புகள் பற்றிய ஆற்றலை விருத்தி செய்து கொள்ளும் முகமாக பிள்ளைகளுக்கு உதவி செய்யக்கூடிய முறைகள்

1. பொருட்கள் பலவற்றை ஒன்றாக இணைத்து, பின்பு அவற்றைக் கழற்றுவதற்கு இயலுமானளவு சந்தர்ப்பங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். இவ்வாறு செய்வதில் பலபொருட்களை ஒன்றாக இணைக்கும் பல்வேறு முறைகளைப் பிள்ளைகள் கற்றுக் கொள்வர். எடுத்துக் காட்டாகத் திருகாணி, கிளிப் போன்றவற்றைப் பயன்படுத்த முடியும். மேலும் இலகுவாகச் சிலவற்றை இணைக்க முடிவதுடன் மற்றையவற்றை ஒன்றாக இணைப்பதற்குக் கூடுதலான உழைப்பை ஏன் செய்ய வேண்டும் எனப் பிள்ளைகள் அறிந்து கொள்வர். தசையை ஒழுங்காகக் கட்டுப்படுத்துவதை விருத்தி செய்யுமுகமாகவும் இச்செயற்பாடு காரணமாக அமையும்.

2. பொருளை மீண்டும் ஒழுங்காக வைப்பதற்கும் வடிவமைப்பதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வயதில் பிள்ளைகள் வேலை செய்வது தன்னுடைய விளக்கத்தைப் பொறுத்து என்பதனால் அவர்கள் மீண்டும் முறையாக வைத்த, வடிவமைத்த பொருட்கள் முன்னர் போன்று இருப்பதாக நம்பிக்கை கொள்வதற்கு அவர்களுக்குக் கடினமாகும். எடுத்துக் காட்டாகப் பாதுகாப்பான கூடாரம் ஒன்றை அமைப்பதற்காக அவர்கள் பாவித்த செங்கற்களின் எண்ணிக்கையையே பாலர் பாடசாலையினூடாக சங்கிலி ஒன்றைப் போல் வைப்பதற்கு முடியுமா? என அவர்களுக்கு விளங்க முடியாதுள்ளது. படிப்படியாக அனுபவங்களோடு பொருட்களின் வடிவங்களை அடிக்கடி வேறுபடுத்தினாலும், அதில் இருக்கும் இலட்சணங்கள் வேறுபடாதவாறு இருக்கும் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

3. வித்தியாசமான இடவெளிக் காட்சி ஒழுங்கிலிருந்து ஒவ்வொரு பொருளையும் பார்க்குமாறு பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். அசாதாரணமான முறையில்

உடலை வைப்பதன் மூலம் பிள்ளைகள் திருப்தியொன்றைப் பெறுவதுடன் அது விநோதமானதொன்றாவதுடன் அவ்வாறு அசாதாரணமான முறையில் உடலை வைக்கும் போது உலகம் தெரிவது எவ்விதத்தில் என அவர்களோடு கலந்துரையாடுவது பிரயோசனமாகும். அவ்வாறு கலந்துரையாடும் போது வண்டியொன்றில் வைத்துக் கொண்டு செல்லும் பிள்ளையொன்றுக்கு அல்லது சக்கர நாற்காலியொன்றில் இருக்கும் ஒருவருக்கு உலகம் எவ்வாறு தெரியும் என்பது பற்றி விளங்குவதற்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியும். இது இடவெளி நிலைக்குப் பொருந்தும் மேல், கீழ், உயர, தூர, பக்கத்தில் போன்ற சொற்களஞ்சியமொன்றை அறிமுகப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமாக்கிக் கொள்ள ஆசிரியர்களுக்கு முடியும். இவை பிள்ளைகளுக்கு விளங்குதற்கு கடினமான எண்ணக்கருக்கள் ஆவதுடன், அவற்றின் கருத்துக்களை அவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்குப் பெரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. தன்னுடைய உடல் பற்றி அறிவதற்கும் உடலைச் செயற்படுத்த முடியுமான பல்வேறு முறைகள் பற்றி அறிவதற்கும் பிள்ளைகளுக்கு உதவி செய்யுங்கள்.

5. புகைப்படங்களில் காண்பவற்றையும் யதார்த்தத்தையும் ஒப்புவமை செய்து பார்ப்பதற்குரிய விதத்தில் சித்திரங்கள், புகைப்படங்கள், படங்கள் பார்ப்பதற்கும் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள்.

## ● காலத்தைப் பற்றி அறிதல்

ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் நிகழ்ந்த ஒழுங்கு முறைகளுக்கேற்ப அவற்றை மீண்டும் ஞாபகப்படுத்துவதுடன் ஒவ்வொரு நிகழ்வுகளும் எதிர்காலத்தில் நடைபெறலாம் என முன்கூட்டியே எதிர்பார்க்கும் ஆற்றலும் காலத்தை ஒழுங்குபடுத்தல் என அறிமுகப்படுத்தப்படுவதுடன், அது ஆரம்ப வருடங்களில் தொடக்க நிலையில் இருக்கும் ஓர் ஆற்றலாகும். இச்செயற்பாட்டில் பின்வருபவை உள்ளடக்கப்படுகின்றன.

1. இறந்த கால நிகழ்வுகளைத் தெளிவுபடுத்துவதற்கும் எதிர் கால நிகழ்வுகளை எதிர்பார்ப்பதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துகின்ற, தொடர்ந்து நிகழுகின்ற செயற்பாடுகள்.

2. பிள்ளைகளின் வாழ்க்கையின் பிரதான நிகழ்வுகளையும் நாட்காட்டியில் உள்ள முக்கிய தினங்களையும் அதாவது பிறந்த தினங்கள், விடுமுறை நாட்கள், வெசாக் விழா, புத்தாண்டு, நத்தார் தினம், பெரியவெள்ளித் தினம், தீபாவளி, நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் போன்ற தினங்கள் பற்றிக் கலந்துரையாடல்.

3. பருவகால மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்

4. மணியோசை ஒலிக்கும் கடிகாரம், பாண் டோஸ்டர் செய்யும் இயந்திரம், காலநிலையை அளக்கும் கருவிகள் போன்ற பொருட்களைப் பரிசோதனை செய்து பார்த்தல், காலத்தைக் காட்டும் இயந்திரங்கள் மூலம் அவற்றினால் கிடைக்கும் பயன்கள் பற்றிக் கலந்துரையாடுதல், கால எல்லைகளின் ஆரம்பத்தையும் இறுதியையும் பற்றிக் குறிப்பிடுகின்ற இப் பொருட்களைப் பாவிப்பதன் மூலம் மேலும் பல செயற்பாடுகளைச் செய்ய முடியும்.

## எளிய காரணத்துக்கும் பெறுபேற்றுக்கும் இடையிலுள்ள தொடர்பை விளங்குதல்

எளிய காரணத்துக்கும் பெறுபேற்றுக்கும் இடையிலுள்ள தொடர்பை விளங்குதல், முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆற்றல் ஆகியவற்றுடன் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. நான்கு வயதில் இது நடந்தால் என்னவாகும்? இல்லையெனில் நீ அவ்வாறு நினைப்பது ஏன்? போன்ற ஒரு காரணத்துக்குப் பொருத்தமான கேள்விகளுக்கான விடைகளை வழங்குவதற்குப் பிள்ளைகளுக்கு முடியும்.

## ஸ்கீமா அல்லது மனக்கோலங்கள்

சுழற்சி, உயரம், கொள்ளளவு, இடவெளி போன்ற கருத்துக்களைக் கட்டியெழுப்புவதற்குப் பிள்ளைகள் மூலமான மனக்கோலங்கள் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் பல உள்ளன. இவை எல்லாவற்றினாலும் பிள்ளைகள் செயற்பாட்டு ரீதியாகவும் வேகமாகவும் கற்கும் விதத்தைக் காட்டுவர்.

பரிசோதனை செய்தல், குறிப்பு எழுதுதல், கோலங்களை இனங்காணல், கருதுகோளை ஏற்படுத்தல், விமர்சனம் செய்தல், பரீட்சித்துப் பார்த்தல் போன்ற விஞ்ஞான ஆற்றல்களையும் எண்ணக்கருக்களையும் பிள்ளைகள் மிகவும் ஒழுங்காகக் கற்றுக் கொள்வது ஆராய்ச்சி சார் விளையாட்டின் மூலமாகும்.

முரண்பாடு தீர்த்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதன் மூலமாக பிள்ளைகள் ஆரம்ப வருடங்களிலும் அதன் பிறகும் இயற்கை உலகினதும் மனிதனால் நோக்கப்படும் உலகினதும் பண்புகளை விளங்கிக் கொள்வர்.

தன்னுடைய உண்மையான திறமைகளை விளங்குவதற்குப் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் முகமாகத் தீர்வு காண்பதற்கான உண்மையான கேள்விகளையும் உள்ளடக்கிப் பயிற்சி செய்வதற்கு, விநோதமிகு செயற்பாடுகள் கொண்ட கற்கும் சூழலொன்றை ஒழுங்கமைப்பது அவசியமாகும்.

## பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆற்றல்கள் விருத்தி

- பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள்
- அவர்கள் எவ்வளவு வேகமாகச் செல்கிறார்கள்?

தேவையான பொருட்கள்: ஒரு லீற்றர் பிளாஸ்டிக் குளிர்பானப் போத்தல்கள் (சில போத்தல்கள் பூரணமாக நிறைந்துள்ளன. சில வெற்றுப் போத்தல்கள் பிங்பொங் பந்து, பிலியட் பந்து, பற்சில்லு, பாரமான சிப்போட் தட்டு, காட்போட் பீங்கான், தண்ணீர்ப் பாத்திரங்களில் இடும் பெரிய கரண்டி, மை, பசை, கஞ்சி போன்ற பல்வேறு செறிவுள்ள திரவங்கள்.

செயற்பாடு : ஒரு பற் சில்லைச் சுழற்றும் போது ஏனைய சகல பற்சில்லுகளும் பல்வேறு வேகத்தில் சுழலுமாறு ஒவ்வொன்றையும் தொடர்புபடுத்தி, பல்வேறு அளவுகளில் பற்சில்லுகள் பலவற்றைக் காட்சிக்கு வையுங்கள். ஓரளவு சரிவில் அல்லது நிலத்தில் பிளாஸ்டிக் போத்தல்களை வேகமாகச் சுழற்றும்படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள். பூரணமாக நிரம்பிய போத்தல்கள், அதே அளவிலான வெற்றுப் போத்தல்களைவிட வேகமாக சுற்றுகின்றனவா? என்பதைக் கலந்துரையாடுங்கள். பிங்பொங் பந்துகளின் நிலைமையும் அவ்வாறானதா? பிங்பொங் பந்துகளை ஊதி, கீழே அனுப்புங்கள். பெலியட் பந்து பற்றியும் அவ்வாறே கலந்துரையாடுங்கள். சிப்போட் தட்டுக்களையும் காட்போட் பீங்கான்களையும் சுழற்றி

முடியுமானவாறு அவற்றைத் தடித்த அட்டையொன்றில் வைத்து மத்தியில் ஆணியொன்றை அடியுங்கள். அவற்றைச் சுழற்றுவது எவ்வாறு என்பதைப் பிள்ளைகளுக்குக் காண்பித்து, பாரமான தட்டுக்கள் அதிகமான நேரம் சுற்றுவது ஏன்? கைகளினால் அவற்றை நிறுத்துவதற்குக் கடினமாவது ஏன்? என்பது போன்ற காரணங்களைக் கலந்துரையாடுங்கள். மேலும் திரவங்களின் செறிவு வேறுபாட்டைக் காட்டும் விதத்தில் கரண்டிகளினால் பாத்திரங்களில் திரவத்தை ஊற்றுங்கள். செறிவு கூடிய திரவங்கள் மிகவும் மெதுவாக நிரம்பும் என்பதைக் காட்டுங்கள். இது போன்ற செயற்பாடுகளின் மூலமாக அவதானிப்புத் திறமைகளுக்கு ஊக்கம் கிடைப்பதுடன் பல்வேறு மட்டத்திலான வேகம், அசைவு அளவுகள் பற்றி அனுபவங்களைப் பெறுவதற்குப் பிள்ளைகளுக்கு உதவுங்கள்.

## நீர்க் குட்டைகளில் விளையாட்டு

தேவையான பொருட்கள் : சமையல் எண்ணெய், உணவு நிறவூட்டிகள்

செயற்பாடு: மழை பெய்ததன் பின்பு, பிள்ளைகளை வெளியே கூட்டிச் சென்று, நீருக்குள் சமையல் எண்ணெயையும் உணவு நிறவூட்டிகளையும் இட்டு எளிய பரிசோதனை ஒன்றைச் செய்யுங்கள். நீருக்குள் எதனையும் இடுவதற்கு முன்பு, நீருக்கு என்ன நடக்குமென்பதைப் பிள்ளைகளிடம் கேளுங்கள். பின்பு அவர்கள் எதனை விளங்கிக் கொண்டார்கள் என்பதைக் கலந்துரையாடுங்கள். அதனால் அவதானிப்புத் திறமைகளுக்கு ஊக்கம் ஏற்படுவது மட்டுமன்றி மொழி பற்றிய அறிவும் விருத்தியாகும்.

## பல்வேறு வடிவங்கள்

**தேவையான பொருட்கள் : எதுவுமில்லை**

செயற்பாடு: அறையைச் சுற்றியுள்ள பல்வேறு வடிவங்களினாலான பொருட்களின் பெயர்களைப் பெயரிடுங்கள் எனப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அவர்களுக்குத் தெரியுமான வடிவங்கள் என்ன என்பதை அவர்களிடம் கேளுங்கள். ஒவ்வொரு வடிவமும் வட்டமானதா, வளைவானதா, நேரானதா எனக் கேளுங்கள். பிள்ளைகள் தமது கருத்துக்களைக் கூறிய பின், தங்களுடைய உடலையும் அவ்வாறே வடிவமைக்க முடியுமா எனக் கேளுங்கள். அவர்களுக்கு உயரமாகவும் மெலிந்த வடிவத்துக்கும் மாற முடியுமா? பருத்ததும் வட்டமானதுமான வடிவத்துக்கு மாற முடியுமா? மிகவும் பெரிய அல்லது மிகவும் சிறிய வடிவத்தை எடுக்க முடியுமா? வளைவொன்றினது முறையிலோ அல்லது முறுக்கேற்பட்ட முறையிலோ வடிவம் பெற முடியுமா? வடிவங்களில் உள்ள வேறுபாட்டையும் அவற்றை விளக்குவதற்கும் முடியுமாவதற்கும் பிள்ளைகளுக்கு இது உதவுவதாக அமையும். இது, பிரச்சினை விடுவிக்கும் செயற்பாடொன்றாக மட்டுமன்றி, உயரம், கட்டை, வட்டம், பெரிது, சிறிது, மேலே, கீழே போன்ற எதிர்க்கருத்துள்ளவை பற்றிய விளக்கமொன்றைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பமும் ஆகும்.

## நாங்கள் அக்கரை செல்வது எப்படி:

**தேவையான பொருட்கள்:** பாலமொன்று அல்லது படகு ஒன்றைச் செய்வதற்குப் பொருத்தமான தடிகள், விளையாட்டுப் பொருட்கள்.

செயற்பாடு: கற்பனை ஆறு ஒன்றை அடையாளப்படுத்துங்கள், நனையாதவாறு ஆற்றின் கரையை அடையும் விதம் பற்றிக் கற்பனை செய்வதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். அப்போது பாலம் ஒன்றை அல்லது படகு ஒன்றை அமைத்துப் பிரச்சினையை விடுவிப்பதற்குப் பிள்ளைகளுக்குக் கருத்துக்கள் உதயமாகும்.

## நிழலும் தெறிப்பு உருவங்களும்

தேவையான பொருட்கள்: எதுவுமில்லை
செயற்பாடு: நன்றாகச் சூரியன் உதயமாகியுள்ள தினமொன்றில், சூரியனினால் உண்டாகியிருக்கும் நிழல்களையும் தெறிப்பு உருவங்களையும் பார்ப்பதற்குப் பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லுங்கள். நீண்டதும் கட்டையானதுமான நிழல் எது? கைகளை அசைப்பதனாலும், தலையை அல்லது கால்களை அசைப்பதன் மூலமாகவும் நிழல்களின் வடிவங்களை மாற்ற முடியும் என்பதைப் பிள்ளைகளுக்குக் காட்டுங்கள். (சூரியனை நன்றாகப் பார்க்காது இருக்கும் படி பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்யுங்கள்) நீர்க் குட்டைகளில் உள்ள உருவங்கள் பற்றிய எண்ணக்கருக்களைக் கலந்துரையாட முடியும். நீர் அசையாது இருக்கும் போது நீர்க் குட்டையின் பக்கம் பார்க்கும்படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள். நீரின் மேற்பகுதியில் கல் போன்றவற்றை இடும் போது நிகழ்வதைப் பார்க்கும்படி கூறுங்கள்.

## ஒரே மாதிரியானவையும் வித்தியாசமானவையும்

தேவையான பொருட்கள்: சமமானவையாயினும் ஏதோ ஒரு விதத்தில் மாற்றமான பொருட்கள், உதாரணமாக ஒரே நிறம் ஒரே வடிவம், ஒரே அளவு அதிலும் பாரம் வித்தியாசப்படும் செங்கல் போன்ற ஒன்று, கைப்பிடியின் வடிவம் அல்லது ஒரே அளவான அகப்பை அல்லது கரண்டி, அளவில் வித்தியாசமான ஒரே மாதிரியான முட்கள், ஒரே வடிவ ஒரே நிறத்தினாலான, ஒரே அளவிலான ஓட்டைகளின் எண்ணிக்கை சமமற்ற பொத்தான்கள்.
செயற்பாடு: பொருட்களை, மேசையில் உள்ள சாடியொன்றில் இடுங்கள். அவ்வப் பொருட்களை வேறுபடுத்தும்படி பிள்ளைகளிடம் கூறுங்கள். எடுத்துக்காட்டாக சகல அகப்பைகளையும் வேறுபடுத்துங்கள். அடுத்ததாக ஒவ்வொரு பொருட் கூட்டத்தையும் பார்த்து, அவை ஒரே சமமானவையா? என சோதித்துப் பார்க்கும்படி கூறுங்கள். பொருட்களைத் தடவிப் பார்த்து, சமமானதும் சமமற்றதுமானவை பற்றிக் கலந்துரையாடும்படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள்.

## சூழவுள்ள பாதைகளில் உலாவுதல்

பாடசாலையைச் சூழவுள்ள பாதைகளில் உலாவுவதனால் பிரச்சினை விடுவிக்கும் திறமையை வளர்த்துக் கொள்வதற்குப் பெரும்பாலான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். தன்னைத் தாண்டிச் செல்லும் கார் வண்டியையும் லொறியையும் இனங்காண்பதற்குப் பிள்ளைகளுக்கு முடியும். கதவுகள் மூடப்பட்டுள்ளதும் கதவுகள் மூடப்படாததுமான வீடுகள், வேறுபட்ட நுழைவாயில்கள், வேறுபட்ட பிராணிகள் ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், பறக்கும் உயிரினங்கள் போன்றவற்றைப் பார்த்துக் கொள்ள முடியும். பாடசாலை அமைந்துள்ள சூழலுக்கேற்ப கலந்துரையாடலும் அவதானிப்பும் மாறுபடும்.

## காலத்தைக் காட்டும் படங்கள்

தேவையான பொருட்கள்: அடுத்தடுத்த நிகழ்வுகளைக் காட்டும் படங்கள் பல. எடுத்துக்காட்டாக, உடைகள் உடுத்தல், பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குச் செல்லல்.
செயற்பாடு: படங்களைக் கலந்து வைத்து, முறையாக மீண்டும் ஒழுங்குபடுத்தும்படி பிள்ளைகளுக்குக் கூறுங்கள். இச்செயற்பாட்டில் பிள்ளைகள் இலகுவாக ஈடுபடுவதற்கு இடமுண்டு என்பதனால் படங்கள் பலவற்றைக் கலந்து விடுங்கள்.

## ஏதாவதொன்று நிகழுமாயின், அப்போது என்ன நிகழும்?

**தேவையான பொருட்கள்: எதுவுமில்லை**

செயற்பாடு: காரணத்துக்கும் பேற்றுக்கும் இடையிலான தொடர்பு. அன்றாட நடவடிக்கைகள் மூலம் எழுமாறாகக் கற்கும் ஆனால், சுதந்திரமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான வினாக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு வளர்ந்தவர்கள் விருப்பம் காட்டுவதுண்டு. அவ்வாறான வினாக்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. குளிர்ச்சியான நேரத்தில் விளையாடுவதற்காக வெளியே செல்வதற்கு முன்பு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? மழை பெய்யும் நேரத்தில், நீங்கள் என்ன செய்வீர்கள்?
2. நாங்கள் வேறொரு பிள்ளையை நோவித்தால் என்ன நடக்கும்?
3. மை கூடுதலாக நீர்த் தன்மையாயின் நாம் என்ன செய்வது?
4. நாங்கள் பாதைக்குக் குறுக்காக ஓடினால் என்ன நடக்கும்?

## உணவு சமைத்தல்

உணவு சமைப்பது பிள்ளைகளின் பொழுது போக்கான செயற்பாடு மட்டுமன்றி அதனால் அவர்களுடைய பெரும்பாலான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். பெரும்பாலான உணவு வகைகளை அளப்பதற்கும் எண்ணுவதற்கும் முறையாக வைப்பதற்கும் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறே உணவு சமைக்கும் போது, பிரதான உணவுவகைகளைச் சூடேற்றும் போது பல்வேறு வடிவங்களையும் பல்வேறு மாற்றங்கள் நிகழுவதையும் காண முடியும். விஞ்ஞான ரீதியான, கணித ரீதியான விளக்கம் தொடர்பான பெரும்பாலான அம்சங்களை வளர்த்துக் கொள்வதற்காக இச்செயற்பாட்டைப் பயன்படுத்துவதற்குத் திறமையான வளர்ந்தவரொருவருக்கு முடியும்.

## விஞ்ஞான அனுபவங்கள்

மின் சக்தியையும் எரிசக்தியையும் பற்றி விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மின்கலம், மின் குமிழ், மின்சுற்று, காந்தம் போன்றவற்றைப் பாவித்து பிள்ளைகளுக்கு உதவுவதற்காக எளிய பரிசோதனையொன்றைச் செய்ய முடியும். இவ்வுத்தேச செயற்பாட்டின் மூலம் ஒளி, ஒலி, மின்சாரம் தொடர்பான விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளப் பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்கும் முடியும்.



# 09

## ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

## ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

- ### அறிமுகம்

ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் அறிவை விருத்தி செய்யும்போது, சங்கீதமும் அசைவும், சித்திரம், நாட்டியமும் கதை கூறலும் போன்றவை மூலம் தன்னுடைய உணர்வுகளைக் கூறுவதற்கும், தன்னைச் சூழவுள்ள உலகத்தைப் பற்றிய உணர்வுகளை விருத்தி செய்து கொள்வதற்கும் பிள்ளைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

இத்தொழில் நுட்ப விஞ்ஞான யுகத்தில், வினாக்களுக்குப் புதிய கண்ணோட்டத்தில் விடை தேடக்கூடிய ஆக்கபூர்வமான சிந்தனை தேவையாவதுடன், தன்னைச் சூழவுள்ள உலகின் அழகைப் பற்றிய அறிவும், உணர்வுமுள்ள நபர்களை உருவாக்குவதும் இந்த யுகத்தின் தேவையாகக் காணப்படுகின்றது.

- ### சித்திரத்தின் மூலம் கருத்துப்பரிமாறலை விருத்தி செய்தல்

மிக இள வயதில் இருந்து பிள்ளைகள் கீறுவதினூடாக, தாள்களில் பல்வேறு பொருட்களை வரைவதினூடாக இன்பம் பெறுவர். இவ்வயதிலே பிள்ளைகள் ஆக்கங்கள் செய்வதற்கு உற்சாகம் இன்றி இருப்பதுடன் அவர்கள் தம்முடைய செயற்பாடுகளிலும் பெறுபேறுகளிலும் மட்டும் தனிமையான இன்பத்தைப் பெறுவர். தாளொன்றில் ஏதாவதொன்றை வரைவதன் மூலம் இன்பம் பெறுவதுடன் பிள்ளைக்கு விளங்கும் போது பிள்ளை தொடர்ச்சியாக நீண்டநேரம் பயிற்சிகளில் ஈடுபடுவர். அந்தக் கீறல்களில் இனங்காணக்கூடிய முன்னேற்றம் வெளிக்காட்டப்படும்.

ஒரு பிள்ளை ஏதாவதொரு கருத்தை முன்வைப்பதற்கு முன்வர முயற்சிப்பது சுமார் நான்கு வயதளவிலாகும். பேனாக்கள், க்ரோயோன் நிற வகைகளைப் பாவிப்பதற்கு அதிகமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் பிள்ளைகளுக்கு கருத்துத் தெரிப்பதை 4 வயதுக்கு முன்னதாகவே செய்வதற்கு முடியுமாகிறது.

தான் விரும்பும் ஆக்கங்களை நிர்மாணம் செய்வதற்குத் தனக்கு முடியும் என்பதைப் பிள்ளைகள் உணரும் போது, அவர்கள் நிதமும் செயற்பாடொன்றில் ஈடுபட்டு நீண்ட நேரம் செலவழிப்பதுடன் ஒரே விடயத்தைப் பற்றிச் சித்திரங்கள் பலவற்றை வரைவர். கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பிறருக்கு விளங்கவில்லையாயினும், தன்னுடைய சித்திரங்களின் மூலம் ஏதாவது ஒரு கருத்து வெளிப்படுகிறது என்பதை அவர்கள் அறிவர்.

பிள்ளைகள் சித்திரம் வரையும் போது, அதில் தலையிடுதல் அவர்களுடைய ஆக்கத் திறன்களுக்குப் பாதிப்பாக அமைவதனால், அதில் தலையிடாது வளர்ந்தவர்கள் ஒதுங்கி இருப்பது பொருத்தமாகும்.

பிள்ளைகளின் முப்பரிமாண பொருட்களைப் பாவிப்பதன் ஆற்றல்களும் அபிவிருத்திப் படிமுறைகள் பலவற்றுக்குள் நிகழும்.

சித்திரம் வரைவதற்குப் பல்வேறு பொருட்களைப் பாவிக்கும் ஆற்றலைப் பரீட்சித்துப் பார்ப்பது பெரும்பாலான பிள்ளைகளினுடைய திருப்திக்குக் காரணமாவதுடன் அதனைப் பற்றி அவர்கள் நீண்ட காலத்தைச் செலவழிப்பர். இவ்வாறாவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. அபிப்பிராயத்தை நிறைவு செய்து கொள்வதால், உடனடியாகக் காணக்கூடிய ஏதாவதொரு பொருளை வரைவதால், பொருளைத் தயாரிப்பதால் பிள்ளைகள் இன்பம் பெறுவர்.

2. முதிர்ச்சி அடையும் வரை வெளிப்படும் திறமைகளின் படி அவர்கள் வேலை செய்வர்.

3. உலகின் பல்வேறு அம்சங்களை ஆக்கம் செய்து காண்பிப்பதற்கும் அவை பற்றிய தமது அனுபவங்களை எடுத்துக் காட்டுவதற்கும் அவர்களுக்கு இயல்பாகவே ஆசையுண்டு.

அவ்வாறே தமது சித்திர வேலை பற்றி அறிந்தோ அறியாமலோ ஒருவர் நகைப்பதனால் விமர்சனங்களுக்குப் பயந்து அல்லது இழிவுக்கு ஆளாக வேண்டிவருமோ எனப் பயந்து வகுப்பறையிலே இவ்வேலைகளில் ஈடுபடாத பிள்ளைகள் சிலரைப் பெரும்பாலும் காணமுடியும்.

சித்திரத்தின் மூலம் கருத்துப்பரிமாறுவதால், புதிய கருத்துக்களையும் உணர்வுகளையும் கூறுவதற்குப் பிள்ளைகளுக்கு முடிவதுடன் அது சில பிள்ளைகள் தொடர்பாகத் தன்னுடைய அனுபவங்களைப் பிறருக்கு எடுத்துக் கூறும் ஊடகமாகவும் அமையும்.

சித்திரத்தில் காணப்படும் பிரதிபலித்துக் காட்டும் தன்மை, நீண்ட காலத்திலிருந்து வரவேற்புக்கு உட்பட்டுள்ளது. மனக்கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு, சித்திரத்தை நிறம் தீட்டுதல் அல்லது பிளாஸ்டிக் பொருட்களால் வேலை செய்தல், அம் மனக்கிளர்ச்சி நிலையிலிருந்து மீளுவதற்கு உள்ள நல்லதொரு மார்க்கமாகும்.

## சித்திரத்தின் மூலம் கருத்துப் பரிமாறலை முன்னேற்றுதல்

சித்திரத்தின் மூலமாக அனுபவங்களைப் பெறும் முறைகள் பற்றிய பிரதான பகுதிகள் நான்கு உண்டு. அத்துடன் அவற்றைப் பிள்ளைகளினுடைய கருத்துக்களையும் உணர்வுகளையும் கூறுவதற்கு உற்சாகப்படுத்துமுகமாக அவர்களுக்கு அறிமுகம் செய்து கொடுக்க வேண்டும். அப்பகுதிகள் பின்வருமாறு:

1. சித்திரம் வரைதல்: க்ரேயன், சுண்ணாம்பு, ஃபெல்ட் பேனைகள், பென்சில்களைப் பயன்படுத்திச் சித்திரம் வரைதல்.

2. படங்களை நிறந்தீட்டுதல், தூரிகை விரல்கள் அல்லது கால்களைப் பயன்படுத்தி படங்களை நிறந்தீட்டுதல்.

3. மாதிரி உருவங்கள் செய்தல்: க்ளே, களி மண், பாண் மா, சோறு என்பவற்றைப் பயன்படுத்தி ஏதாவதொன்றை நிர்மாணித்தல் (வனைதல்)

4. இலைகளைச் சேகரித்து ஏதாவதொன்றைச் செய்தல்: கழிவுப் பொருட்கள், இலை, சிற்பிகள், சிறு கற்கள், பல்வேறு வடிவத்திலான, பல்வேறு அளவிலான பெட்டிகள், ரிபன் பட்டி, சிறிய காய் வகைகள், தடிகள், மணிகள், பசை போன்ற பொருட்களைப் பயன்படுத்தி ஏதாவதொன்றை நிர்மாணித்தல்.

இவை ஒவ்வொரு பகுதிக்கும் உரிய செயற்பாடுகளை அடிக்கடி செய்ய வேண்டும். அப்போது பிள்ளைக்கு ஏற்ற திறமைகளில் முதிர்ச்சியைக் கொள்ள முடியுமாகிறது.

இச்சித்திர அனுபவங்களில் சில குழுவாகச் செய்யும் செயற்பாடுகளைச் செய்வதற்கு வழியமைப்பதுடன், அதன் பேறாக ஐந்து வருட இறுதியில் பிள்ளைகள் ஒன்றாக இணைந்து, பொது வேலை ஒன்றைச் செய்வதற்கு முடியுமான நிலைக்கு உள்ளாவதற்கு இடமுண்டு.

இச்சகல செயற்பாடுகளிலும் ஆசிரியருடைய நடிபங்கு மிக முக்கியமானதாகும். வளர்ந்தவர்களுடைய நெருக்குதல்கள், தடைகளிலிருந்து தான் சுதந்திரம் பெற்றுள்ளோம் என்பதைப் பிள்ளைகள் உணர வேண்டும். அத்துடன், அவர்கள் விரும்பினால், அவர்களுடைய வேலைகள் பற்றி ஆசிரியர்களோடு கலந்துரையாடுவதற்குரிய சுதந்திரம் இருக்க வேண்டும்.

## சித்திரத்தின் மூலம் ஆக்க பூர்வமானதும் அழகியல் சார்ந்ததுமான அறிவை விருத்தி செய்தல்

பெரும்பாலானவர்கள், அழகியல் சார்ந்த திறமைகளின் வளர்ச்சியை, சித்திரத்தை ஒரு கல்வி போன்றதாகவே கருதுகின்றனர். ஆயினும் இங்கு பயன்படுத்தியுள்ள கருத்து, அழகியல் பற்றி அறிவதும், பலவகைமைகள் மற்றும் இரசனை படிப்படியாகக் கிளர்ந்தெழுதலும் போன்ற தொடர்புகளையாகும்.

பிள்ளைகள் இயல்பாகவே சித்திரம் வரைவதற்கு விருப்பம் காட்டுவதுடன் கீறுவதிலிருந்து, இனங்கண்டு கொள்ளக்கூடிய உருவங்கள் வரையும் சந்தர்ப்பம் வரை பிள்ளையின் முன்னேற்றம் பற்றி அநேகமான பரிசோதனைகள் நிகழ்ந்து உள்ளன.

சித்திரங்களுக்கு நிறந்தீட்டும் போது அல்லது சித்திரப் பொருட்கள் பற்றிக் கதைக்கும் போது பிள்ளைகள் இயல்புக்கு அப்பால் ஆர்வம் காட்டுவதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

படங்களினதும் பொருட்களினதும் அழகியல் நிலை பற்றிக் கதைப்பதற்கும் பிள்ளைகள் உற்சாகப்படுத்தப்பட்டால் இரேகைகளின், நிறங்களின், வடிவங்களின் அழகியல் தன்மையைப் பேசுவதற்கு அவர்களுக்குப் பொருத்தமான சொற்களஞ்சியமொன்று கிடைக்கப் பெற்றால், கலந்துரையாடலில் அவர்கள் அவற்றைப் பாவிப்பர்.

பிள்ளைகளுடைய செயற்பாடுகள் தொடர்பாக 'ஆக்கபூர்வமான' போன்ற சொற்பிரயோகத்தில் உண்மையாகவே உள்ள கருத்து யாது? 'ஆக்கபூர்வமான' என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின்படி கருதுகோளாகக் கொள்ளப்பட்டிருப்பது இறுதி உற்பத்தியாகும். அது புதிய கருத்தொன்றாவதுடன் அது யதார்த்தத்துடன் தொடர்பான ஒன்றாகும். மேலும் அதில் பிரயோசனம் பற்றிய கருத்தொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வேறு வேறு வடிவங்களில், கோலங்களில், அளவுகளில் உள்ள பொருட்களைக் கவனமாகப் பரிசீலனை செய்து பார்ப்பதால் பிள்ளைகள் இன்பம் அடைவதுடன் புலக் காட்சிக் கோலங்களையும் படங்களையும் ஆக்கம் செய்வதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

தமது அழகியல்சார் அறிவை விருத்தி செய்யும்போது, கவர்ச்சியானது, புதுமையானது எனச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களையும் படங்களையும் பார்ப்பதற்கும் அவை பற்றிக் கதைப்பதற்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது மட்டுமன்றி, பொருட்களைத் தொடுவதற்கும் மீண்டும் முறையாக ஒழுங்கு செய்வதற்கும் அவர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

## சங்கீதம், அபிநயம், நடனம் மூலம் கருத்துக்களைக் கூறுவதை விருத்தி செய்தல்

தமது உணர்வுகளையும் தேவைகளையும் கூறி, வாய்மொழி அல்லாத முறையில் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

பிள்ளைகளுக்கு விளக்கமளிக்க வேண்டியது மனவெழுச்சி பற்றிய சைகைகளை மட்டுமல்ல பிள்ளைகள் பாடசாலைக்கு உட்பட்டவுடன் தமது சமவயதுக் குழுக்களுடன் மட்டுமன்றி, தமது குடும்ப அங்கத்தவர்களின் அபிநயங்கள், கூற்றுக்கள் ஆகியவற்றை விட மிகவும் வித்தியாசமான அபிநயங்களும் கூற்றுக்களும் உள்ள, வகுப்பில் வளர்ந்தோருக்குரிய வேறுபட்ட சைகைகள் பலவற்றை விளங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

## அழகியல்சார் மற்றும் ஆக்கபூர்வமான அறிவை விருத்தி செய்வதில் அபிநயம், நடனம் ஆகியவற்றின் முக்கியத்துவம்

சம்பிரதாயமாக, உணர்வுகளையும் கருத்துக்களையும் தெரிவிப்பதற்குப் பொருத்தமான பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அபிநயம் பற்றி நாம் கதைக்கும் போது அது சங்கீதத்துடன் சம்பந்தப்படும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அபிநயம் என்பது, உலகம் பற்றிய உணர்வை விளங்கிக் கொள்வதற்கு பிள்ளைக்கு உள்ள மார்க்கங்களில் ஒன்றாவதால், அது பிள்ளைகளுடைய அழகியல்சார் விருத்தியில் ஒரு முக்கியமான பகுதியை நிறைவேற்றுகின்றது.

வெவ்வேறு கருத்துக்களின் எண்ணக்கருக்களின் அர்த்தத்தை விளங்குவதற்குப் பிள்ளைகளுக்கு உதவும்போது விசேடமாக அபிநயம் முக்கியமாகின்றது.

யாதேனுமொரு செயற்பாட்டை, உடல் அபிநயமாக மாற்றுவதற்குப் பிள்ளை முயற்சி செய்ய வேண்டியுள்ளதால் பாவனை செய்தலுடன் தொடர்பான உளரீதியான மாற்றங்கள் கவனிக்கத்தக்க எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

தான் பாவனை செய்யும் நபருடைய தோற்றம், உணர்வுகள், அவர் நடந்து கொள்ளும் முறைகள் பற்றியும் பிள்ளைகள் நினைப்பது என்ன என வினவுவதன் மூலம் ஆசிரியர்களுக்கு அபிநயத்தின் இலட்சணங்களில் அவதானத்தை ஈடுபடுத்துவதற்குப் பிள்ளைகளுக்கு உதவி செய்ய முடியும்.

சம்பிரதாயமாகப் பாடலைப் பயன்படுத்திச் செய்யும் விளையாட்டுக்கள் ஊடாக ஒத்துழைப்புடன் செயற்படும் திறன்களை, சமுகமயத் திறன்களை விருத்தி செய்ய முடிவதோடு வேறு விதங்களில் சுய கூற்றுக்களைக் கூறும் ஆற்றல்களையும் விருத்தி செய்ய முடியும்.
அபிநயமும் நடனமும் சம்பந்தமான செயற்பாடுகளில் கீழே காட்டப்படுகின்ற விடயங்கள் உட்பட பெரும் நன்மைகள் கிடைக்கும்.

- தனிப்பட்ட திருப்தியைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். தனது உடலால் தனக்குச் செய்ய முடியுமானவற்றை அறிவதன்மூலம் அவர்கள் இன்புறுவர்.

- அவர்களுடைய அபிநயங்கள் தொடர்பான சொற்களஞ்சியத்தை அதிகரித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்க முடியும்.

- அவதானத்தை மேலோங்கச் செய்ய முடியும்.

- பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும். எடுத்துக்காட்டாக நத்தையொன்று போல் தன்னுடைய பாதையைத் தேடிக் கொண்டு முன்னே செல்லல்.

- மற்றையவர்களுக்குத் துலங்கலைக் காட்டும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும்.

- இள வயதுப் பிள்ளைகளுக்கும் இசைக்கேற்ப ஒலிக்கும் பாடலுக்குத் துலங்கலைக் காட்ட முடியும்.

நடனத்தில் வைக்கும் அடிகள் நான்கு வயதுப் பிள்ளைகளுக்குக் கடினமான காரியமொன்றாயினும் பல்வேறு சங்கீதங்களைக் கேட்டு, மேலைத்தேய கீழைத்தேய இசைகள் மூலம் இன்ப அனுபவத்தைப் பெறுவது அவர்களுக்குக் கடினமல்ல என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய ஒரு பாடமாக சங்கீதத்தைப் பார்க்கக் கூடாது. அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஓர் அனுபவமாகவே நோக்க வேண்டும்.

## சங்கீதத்தின் ஊடாக அழகியல், ஆக்கவியல் சார்ந்த அறிவை விருத்தி செய்தல்

சித்திரத்தைப் போலவே சங்கீதமும் கருத்துக்களை வெளியிடும் ஒரு வழியாகும். சில பிள்ளைகளுக்கு அது அவர்களுடைய உணர்வை வெளியிடுவதற்குப் பயன்படும் முக்கிய ஊடகம் ஆகும்.

சித்திரம் வரையும்போது பிள்ளைகள் படங்களையும் கோலங்களையும் நிர்மாணிக்க வேண்டியது போலவே,சங்கீதத்திலும் பல்வேறு இசைகளைக் கேட்பது போலவே நாத கோலங்களை ஆக்கும் சந்தர்ப்பங்களும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

பெரும்பாலான பிள்ளைகள் பாடல் பாடுவதற்கு ஆர்வம் காட்டுவதுடன் பல்வேறு தாள சுரங்களுக்கு ஏற்ப இசைப்பதற்கு அவர்களுக்கு ஆற்றல் உண்டு.

ஆசிரியர் மூலம் வழிநடத்தப்படும் சில செயற்பாடுகள் தேவையானதும் முக்கியமானதுமானது. ஆனால் பிள்ளைகளுக்கான சங்கீதப் பாடத்திட்டம் பிள்ளையை மையமாகக் கொண்டு அமைவதுடன் அது பிள்ளைகளைத் தனிப்பட்ட முறையில் தொடர்புபடுத்தக் கூடிய விதத்தில் திட்டமிடல் வேண்டும். அதற்குக் காரணம் பிள்ளைகள் சங்கீதம் பற்றிய தம்முடைய எண்ணக்கருவை வளர்த்துக் கொள்வதற்கு ஆரம்பிப்பது பாடலுக்குச் செவிமடுப்பதன் மூலம் பாடலில் ஈடுபடுவதன் மூலம் பாடலை ஆக்குவதன் மூலம் கிடைக்கும் பிரதான அனுபவங்கள் மூலமாகும்.
பிள்ளைகள் பெரும்பாலும் தாம் செவிமடுத்த நாதங்களைப் போலச் செய்து, விளையாட்டில் ஈடுபடும் வேளை இயல்பாகவே பாடலைப் பாடுகின்றனர். பாடலையும் இசையையும் ஆக்குவர். பிள்ளைகள் வேகமான ஓசையுடனான பாடலில் மிக ஆர்வத்தைக் காட்டுவதாகத் தெரிகின்றது.

## சங்கீதச் சூழலை ஏற்படுத்தும் விடயத்தில் ஆசிரியரின் நடிபங்கு

சங்கீதம், அபிநயம், நடனம் மூலம் தமது சிந்தனைகளையும் உள்ளுணர்வுகளையும் ஆசைகளையும் பிறருக்கு எடுத்துக் கூறுவதற்குப் பிள்ளைகளுக்கு முடியும்.

முதலில் கேட்பதற்குப் போலவே குழுவாகச் சேர்ந்து பாடுவதற்கும் தெரிவு செய்த பொருத்தமான சங்கீத ஆக்கங்களை முன்வைப்பதால் ஆசிரியருக்கு, பிள்ளைகளுடைய சங்கீதம் தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்கு உதவி செய்ய முடியும்.

இரண்டாவது, சங்கீதத்தைச் செவிமடுப்பதற்குப் பிள்ளைகள் விரும்பிய எந்நேரத்திலும் அதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் அறிவை உண்டுபண்ண முடியும்.

சங்கீதத்துக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய விடயங்களால், அனுபவங்களினால் மட்டும் ஒரு பெறுபேறு ஏற்படுவதில்லை என்பதைப் பெரும்பாலான சங்கீத வித்துவான்கள் தர்க்கம் செய்கின்றனர்.

சங்கீதத்துக்கும் அபிநயத்துக்கும் நெருங்கிய தொடர்பு நடனத்துக்கு இருப்பதுடன், பாலர் பாடத்திட்டத்திலே பிரதானமாக நடனத்துடனான விளையாட்டுக்களை உட்படுத்த வேண்டும்.

## கதைகள், கவிதைகள், சிறுவர் பாடல்கள் மூலமாக அழகியல் சார்ந்த அறிவை விருத்தி செய்தல்

முன் பள்ளிப் பருவத்தில், தன்னைச் சூழவுள்ள உலகம் பற்றி விளங்குவதற்குப் பிள்ளைகளுக்கு உதவுவதில் கதைகளும் கவிதைகளும் பாரிய சேவையைச் செய்கின்றன.

மூன்று வயதிலும் நான்கு வயதிலும் உள்ள பிள்ளைகளுக்காகக் கதைகளைத் தெரிவு செய்யும் போது பிள்ளைகளினுடைய உற்சாகத்தையும் கற்பனா சக்தியையும் ஆசிரியர்கள் மலரச் செய்தல் அவசியம் ஆயினும், பிள்ளைகளினுடைய ஆத்ம நம்பிக்கையையும் பாதுகாப்பு பற்றிய உணர்வுகளையும் ஆசிரியர்கள் முன்னேற்ற வேண்டும். கதைகளையும் கவிதைகளையும் நாட்டியமாக்க முடிவதுடன் விசேடமாக, பிரபல்யமான இலக்கியக் கதைகளை நாட்டியமாக்க முடியும். மூலக் கதையில் சில பண்புகளை வேறுபடுத்தாது வைத்திருக்க வேண்டும் என்றாலும், ஏதாவதொரு நடிப்புப் பகுதியில் நடிகருக்கு வேறுபட முடியும்.

பிள்ளைகளுக்குக் கதைகளையும் கவிதைகளையும் சொல்லிக் கொடுப்பதன் பேறாக வேறு ஆக்கச் செயற்பாடுகளுக்கும் ஊக்கமளிக்க முடியும். பாலர் கல்வியின் இறுதியிலே, ஒவ்வொரு பிள்ளைக்கும் நீண்ட காலத்திற்குத் தன்னுடைய பாத்திரத்தை மாறுபடாது தொடர்ந்து எடுத்துச் செல்வதற்கு முடிவதால், நடிப்புசார் விளையாட்டுக்களை அதிகமதிகமாக ஒத்துழைப்போடு செயற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுப்பதுண்டு.
விளையாட்டுக்கள், விசேடமாக கற்பனை விளையாட்டு நாட்டியங்கள், நல்ல பண்பு விருத்தியை ஏற்படுத்துவதற்கு மட்டுமன்றி, பல்வேறு முறைகளில் கருத்துக்களைப் பிறப்பிப்பதற்கும் காரணமாக அமைகின்றது என ஆய்வுகள் மூலம் அநேக சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நடன விளையாட்டுக்களில் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள் பலவற்றைக் காணமுடிவதுடன் அதில் தானும், பொருட்களும் சந்தர்ப்பங்களும், கற்பனை வேடங்களாக, பொருட்களாக, நிகழ்வுகளாக மாற்றப்படுகின்றன.

சமுக நடன விளையாட்டுக்கள் எழுமாறாகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடிக்கப்படுகின்றன. அது எல்லா சந்தர்ப்பங்களிலும் நிகழும் என சிந்திக்கக் கூடாது.

சமுக நடன விளையாட்டுக்கள் வெற்றிகரமாவதற்காகக் கீழே காட்டப்படுகின்ற ஆறு அங்கங்களும் பூரணமாக வேண்டும்.

1. பாவனை செய்யும் பாத்திர விளையாட்டுக்கள்: பிள்ளை ஏதாவதொரு பாத்திரமொன்றைத் தெரிவு செய்து அதனைப் பாவனை செய்யும்.
2. விளையாட்டுப் பொருட்கள் பாவனை: பொம்மைகள் போன்ற விளையாட்டுப் பொருட்களைப் பாவித்து உண்மையான சந்தர்ப்பங்களை நபர்கள் போலப் பாவனை செய்வர்.
3. சில சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான வாய்மொழி உரையாடல்களை, கருத்துக்களைப் போலப் பாவனை செய்வர்.
4. சில சில நிகழ்வுகளைப் போலப் பாவனை செய்து காட்டுவர்.
5. பிள்ளைகள் இருவர் சேர்ந்து ஏதாவதொரு சந்தர்ப்பம் ஒன்றைப் போலப் பாவனை செய்வர்.
6. சில சில வாய்மொழித் தொடர்பாடல்களைப் போலப் பாவனை செய்வர்: (தொலைபேசி நேர்காணல், தொலைக்காட்சி போன்றவற்றில்) பிள்ளைகளினுடைய முழுமையான விருத்திக்கு சகல வகையான விளையாட்டுக்களும் முக்கியமாவதுடன் அந்த நடனம் முதல் வருடங்களில் பெறும் கல்விக்கான கதவைத் திறப்பதற்கு உதவ முடியும்.

## ● ஆக்கபூர்வ விருத்திக்கு உத்தேச செயற்பாடுகள் சில

ஊடுகாட்டும் சித்திரங்கள்

பொருட்கள்: மை, நிழற்படச் சுருளை, தூரிகை, ரோலின் பின் ஒன்று.

செயற்பாடு: இது, தாளொன்றில் சித்திரம் வரைவதற்குரிய மாற்று முறையாகும். பிள்ளைகளுக்குத் தாளின் மீது மைத்துளிகளை இடும்படியும் பின்பு அதனை நிழற்படத் தாளினால் மூடுமாறும் கூறுங்கள். அதன் பிறகு அதற்கு மேலால் ரோலில் பின் ஒன்றை அங்குமிங்கும் சுற்றி மை கலக்கும் விதத்தில் பிள்ளைகளுக்குப் பார்க்கக் கூடியவாறு இடமளியுங்கள்.

## ● இலட்சினை வைத்தல்

பொருட்கள் : ஈர மணல், பல்வேறு பொருட்கள்

செயற்பாடு: பல்வேறு பொருட்களில் இலட்சினைகளை மணலில் வைக்கும்படி பிள்ளைகளுக்குக் கூறி அவ்வாறு இலட்சினைகளூடாக உரிய பொருட்களை எவ்வாறு இனங்காண முடியும் எனக் கலந்துரையாடுங்கள். முதலில் விளையாட்டுக் கார், ட்ரெக் வாகனம், கோப்பை அல்லது தனது கைகளைப் பயன்படுத்திச் செய்ய முடியும். அத்துடன் இலட்சினைகளை வைத்தல் பற்றிய கருத்தை விளங்கியதன் பின்பு, பிள்ளைகளுக்குத் திறந்த வெளியொன்றுக்குச் சென்று, டயர்ப் பாதைகள், மனிதர்களுடைய விலங்குகளுடைய காலடிப் பாதைகள் போன்றவற்றைச் சோதித்துப் பார்க்க முடியும்.

மழை பெய்து முடிந்தபோது, இச்செயற்பாட்டை வேறுமுறையில் செய்ய முடியும். தோட்டத்தில் நீர்க்குட்டை ஒன்றினுள் நிறத்தூள் இடுங்கள். அதன் பிறகு வெலிங்டன் சப்பாத்து அணிந்து, அந்நீர்க்குட்டைக்குள் இறங்கிக் கரைக்கு வந்து, பத்திரிகையொன்றின்

மீது சப்பாத்து அடி இலட்சினையை வையுங்கள். இது போன்ற இலட்சினைகளைக் களி அல்லது நிறத்தின் மேல் வைக்க முடியும்.

## சுயாதீனமாகச் செய்யும் நடனங்கள்

பொருட்கள்: பல்வேறு நாடாக்கள் அல்லது பதிவு நாடாக்கள் (ரெகோட்)
செயற்பாடு: சங்கீதத்துக்கு ஏற்ப சுயாதீனமாகப் பாதங்களை அசைக்கும் படியும் தான் விருப்பமான முறையில் இசைகளுக்கு விருப்பம் காட்டுமாறும் பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். இச்செயற்பாடானது, அவதானம், செவிமடுத்தல் ஆற்றல் போன்ற திறமைகளை உற்சாகப்படுத்தலுக்கு மட்டுமன்றி, மொழியை விடுத்து வேறு வழிகளில் எங்களுக்கு எங்களது உணர்வுகளையும் கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதற்கு முடியும் என்பதைப் பிள்ளைகளுக்கு விளங்க வைப்பதற்கும் உதவும்.

## நிச்சயிக்கப்பட்ட மனோபாவங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு சங்கீதத்துக்குரிய ஆலோசனைகள் சில

### நிறங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்

பொருட்கள்: பல்வேறு நிறங்களினாலான பொருட் கூட்டமொன்று
செயற்பாடு: முதலில், ஒரே நிறமுள்ள பொருட்களை ஓரிடத்தில் வைக்கும்படியும் வித்தியாசமான நிறமுள்ள பொருட்களை வேறாக வைக்கும்படியும் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். சில நிறங்கள் மிகவும் அழகானவை என அவர்கள் சிந்திப்பது ஏன் எனக் கலந்துரையாட வேண்டும். இச்செயற்பாடு, அழகியல் அறிவை விருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பதற்கு மட்டுமன்றி, தர்க்க ரீதியில் சிந்திப்பதற்கு உதவி செய்வதற்கும் காரணமாக அமையும்.

## ஓசையோடு பரீட்சித்துப் பார்த்தல்

பொருட்கள்: பிளாஸ்டிக் பட்டியொன்று, அடிமட்டம், ஒவ்வொரு மட்டத்திலும் நீர் நிறைக்கப்பட்ட போத்தல்கள், நிலக்கடலை, அரிசி போன்றவற்றால் நிரப்பப்பட்ட பல்வேறு வடிவங்களினாலானதும் அளவுள்ளதுமான பிளாஸ்டிக் போத்தல்கள், இப் போத்தல்களில் அடங்கியுள்ள பொருட்களைப் பாதுகாப்பதற்கு அதன் மூடிகளை இறுக்கமாக மூடிவைக்க வேண்டும்.
செயற்பாடு: பல்வேறு பொருட்களினால் ஒலிக்கும் ஓசைகளைக் கவனமாகச் செவிமடுத்ததன் பின்பு, இவ்வோசைகளுக்கும் சங்கீத உபகரணங்களினால் வெளியாகும் ஓசைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடல் செய்யும்படி பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் எந்த ஓசையை மிகவும் விரும்புகிறார்கள்? அதற்குக் காரணம் யாது?

## வடிவம் என்றால் என்ன?

பொருட்கள்: மணிகள், மரத்துண்டம், கேத்திரகணித வடிவங்கள், வளைந்த வடிவத்தினாலான துண்டுகள், தேடமுடியுமான அசாதாரண வடிவமுள்ள பல்வேறு பொருட்கூட்டம் ஒன்று. களியும் வளையாதவைகள் உள்ளடங்கலான கழிவுப் பொருட்கள்.
செயற்பாடு: வடிவங்களை நன்றாகத் தடவிப்பார்க்கும் படியும் ஒவ்வொரு பொருளிலும் உள்ள பல்வேறு பண்புகளை அவதானிக்கும் படியும் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அவர்கள் எவ்வாறான வடிவங்களுக்கு மிகவும் விருப்பம்? முறையான வடிவங்களுக்கா?

இல்லையெனில் முறையற்ற வடிவங்களுக்கா? பொருத்தமான சொற்களஞ்சிய மொன்றைக் கொடுங்கள். பல்வேறு நிற வடிவங்கள் பற்றிப் பேசியதன் பின்பு, பல்வேறு பொருட்களைப் பாவித்து புதிய அசாதாரண வடிவங்களைத் தயார் செய்யும்படி பிள்ளைகளை உற்சாகப்படுத்த வேண்டும்.

இம்முறையிலான செயற்பாடுகளின் மூலம், கம்பு, இரும்பு போன்று அல்லாத களி போன்ற பிசைய முடியுமான பொருட்களின் வேறுவேறான குணாதிசயங்களை விளங்குவதற்கும் அன்றாடம் பாவனையிலுள்ள பொருட்களின் வடிவங்களையும் மாதிரியையும் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் பிள்ளைகளை ஈடுபடுத்த முடியும்.



# 10

## பாடசாலை நிறுவனம்

## பாடசாலை அமைப்பு

### அறிமுகம்

பிள்ளைகள் என்பது செயற்திறமையுடன் கற்பவர்களாவர். இதற்கு முன்னுள்ள அத்தியாயங்களில் குறிப்பிட்டுள்ள திறமைகளை அவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டும் எனில், பாதுகாப்புடனான சூழலில் வேலை செய்வதற்கும் விளையாடுவதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தரும் பாடசாலையாக இருக்க வேண்டும்.

ஒரு கற்றல் சூழலுக்குத் தேவையான முதலாவது பிரதான விடயம் யாதெனில் அங்கு பிள்ளைகளினுடைய தேவைகள் நிறைவேற்றப்படல் வேணடும் என்பதாகும். இத்தேவைகள் சகல பிள்ளைகளுக்கும் சமமானதாக இருக்கும்.

### பௌதீக சூழல்

முன்மாதிரியான ஓர் உலகில், சகல கட்டிடங்களும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும், பிள்ளைகளினுடைய தேவைகள் நிறைவேறும் முறையில் நிர்மாணிக்கப்படும். எனினும் உண்மையாகவே ஆரம்ப வருடங்களில் கற்றல் தொடர்பாக செயற்படுகின்ற பெரும்பாலானவர்களுக்கு முன்பள்ளிச் சூழல் நன்மையற்ற ஒன்றாகவே காணப்பட்டுள்ளது.

சகல பிள்ளைகளுக்கும் தமது செயற்பாடுகளுக்காக போதுமான இடம் தேவைப்படுகின்றது.

பிள்ளைகளினுடைய இன்னொரு பிரதான தேவையொன்றாக அமைவது, அவர்களுடைய வேகத்துக்கேற்பச் செயற்படுவதற்கு நேரம் இருக்க வேண்டும் என்பதாகும்.

### முன்பள்ளிச் சூழல்

பெரும்பாலான முன்பள்ளிக் கட்டிடங்கள், தேவையான அளவு களஞ்சியசாலை வசதிகள் இன்றியும், வளர்ந்தவர்களிலிருந்து விலகியிருந்து விளையாடுவதற்குப் பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகள் இன்றியும் திட்டமிடப்பட்டுள்ளன.

பயம் அல்லது தடை இல்லாத பிள்ளைகளுக்குத் தாம் செய்தவற்றை வைப்பதற்குப் போதுமான இடம் இக்கட்டிடங்களில் இருக்க வேண்டும்.

முன்பள்ளிச் சூழல் பிரச்சினைகளை விடுவிப்பதற்காகவும் கணிதம் கற்பதற்காகவும் பெரும் சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும். பிள்ளையினுடைய கற்றலுக்கு முக்கியமான பௌதீகச் சூழலில் முன்னுரிமை அடிப்படையில் மேலே காணப்படுவது, மணலும் நீரும் கொண்டு விளையாடுதல், களிமண் வேலைகள், நிறந் தீட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய நிலம் அசுத்தமானால் தண்டனை பெறவேண்டி வரும் என்ற பயமின்றிச் செயற்பாடுகளில் ஈடுபட முடியுமான பிரதேசமொன்றாக இருக்க வேண்டும் என்பதாகும்.
மணலும் நீரும் கொண்டு விளையாடுதல் பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமானது எனப் பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் கவனத்தில் கொள்வர். ஏனெனில் அது அவர்களுடைய மனவெழுச்சித் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், கற்கக்கூடிய கணித விஞ்ஞான எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்காகவும் உதவுவதாலாகும்.

ஈரமானதும் ஈரமற்றதுமான மணலைக் கொண்டு பல்வேறு நிலைகளின் கீழ் அம்மணலில், அடங்கியுள்ள சேர்வைகள் யாவை என அறிந்து கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு முடியுமாகிறது. அம்மணல் குவியல்களில் கற்கும் சூழலுக்குத் தேவையான முக்கியமான ஓர் அங்கம் அடங்குகின்ற அதேவேளை, கொண்டு வந்து தருவது போலவே நீர் நிறைந்த பாத்திரமொன்றின் முக்கியத்துவமும் அதற்குச் சமமானதாகும் நீர்ப்பாத்திரம் ஒன்று என்பது தனியே ஒரு பொருள் என்பதைவிட முக்கியமான ஒன்றாவதுடன் அதனால் பிள்ளைக்கு அதிக திருப்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். அது கற்றல் சூழலின் முக்கியமான ஒரு பகுதியாகும்.

மேலும் ஒரு முக்கிய பகுதியாக அமைவது, சித்திரம், வரைதல், கொலாஜ் வேலை செய்தல், மாதிரி நிர்மாணங்களை அமைத்தல், வளைதல் போன்ற செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய பாலர் பாடசாலை நிலப் பரப்பாகும்.

பல்வேறு நிற மை வகைகளை ஒன்றாகக் கலப்பதால் உண்டாகும் நிறங்களை அறிவது பிள்ளைகளுக்கு முக்கியமானது. ஆனாலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் வளர்ந்தவர்களின் ஈடுபாடுகளை அங்கீகரிக்க முடியும். அதற்குக் காரணம் யாதெனில் பாவிக்கும் நிறங்களைக் கட்டுப்படுத்துவதனால் அவசரமாகத் தேவையான பேற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதைப் பிள்ளைகளுக்கு விளங்கிக் கொள்ள முடியும். மாதிரிகள் மூலம் பல்வேறு வடிவங்களை ஒன்றாகச் சேர்ப்பதற்கு, அவற்றை வேறுபடுத்துவதற்கு, அவற்றை வெட்டுவதற்கு, மீண்டும் ஒழுங்கு செய்வதற்கு, மாற்றுவதற்குப் பிள்ளைகள் கற்பர். இச்சகல செயற்பாடுகளும் கணிதம், இடவெளி போன்ற எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கமொன்றைப் பெறுவதற்கு உதவும்.

பாலர் பாடசாலையின் சுற்றுப்புற பிரதேசம் களிமண் வேலை செய்யும் மேசை வைத்துள்ள இடமுமாகும். மரவேலை மேசை தேவையான உபகரணங்களினால் உள்ளடக்கப்படுவது முக்கியமாவதுடன் ஆணி, கம்பு போன்றே பசை, இறப்பர் பாண்ட், டயர் போன்றவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

பாலர் பாடசாலையின் புதிய மூலை கணனி வைக்கும் இடமாகும். முடியுமாயின் கணனியோடு விளையாடுவதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும்.

முறையாகத் திட்டமிடப்பட்ட தங்கிக் கற்கும் சூழலுக்கு, பிள்ளைகளுக்கு அமர்ந்து புதிர்களை விடுவிப்பதற்கு, விளையாடுவதற்கு, மேசையின் மீது விளையாட்டுப் பொருட்களை வைத்துக் கொண்டு விளையாடக்கூடிய பொருத்தமான வீட்டுப் பொருட்கள், மேசை கதிரைகள் இருத்தல் வேண்டும்.
பிள்ளைகளுக்கு ஓசைகளைச் செவிமடுப்பதற்கும், சங்கீதத்தில் ஈடுபடுவதற்கும் உரிய பிரதேசமொன்றிருத்தல் முறையாகத் திட்டமிடப்பட்ட தங்கிக் கற்கும் சூழலொன்றின் இன்னொரு அத்தியாவசிய இலட்சணமாகும்.

பரிபூரணமான ஒரு கற்றல் சூழலில் அழகியல் பற்றிய கவனமும் உள்ளடக்கப்பட வேண்டும்.

சகல பாலர் பாடசாலைகளிலும் இருக்க வேண்டிய நிலையான ஓர் இலட்சணம் யாதெனில் பிராணிகளும் நாற்றுக்களுமுள்ள ஒரு பிரதேசமாகும்.

முறையாகத் திட்டமிடப்பட்ட கற்றல் சூழலுக்கு மேற்கூறியவற்றுக்கு மேலதிகமாக,

உற்சாகத்தை வளர்க்கக் கூடிய வேறு அங்கங்களும் இருக்க வேண்டும். பெரும்பாலான முன்பள்ளிகளில் வகுப்பறைகளில் கலந்துரையாடப்படும் தலைப்புகளுக்குப் பொருத்தமான பிள்ளைகளும் ஆசிரியர்களும் வீட்டிலிருந்து கொண்டுவரும் பொருட்களை வைக்கக்கூடிய ஒரு மேசை உண்டு.

## வெளியக விளையாட்டுப் பிரதேசம்

வீட்டுப் பிரதேசத்திலே பௌதீக ஒழுங்கமைப்பு முக்கியமானது ஆயினும் எந்தவொரு முன்பள்ளியாவது வெளிப் பிரதேசம் பற்றிக் கவனம் செலுத்தவில்லையாயின் அது ஒரு குறைபாடேயாகும். அதற்குக் காரணம் யாதெனில் பூரணமான கற்றல் சூழலொன்றைத் தயார் செய்வதற்கு இவ்விரு பகுதிகளும் முக்கியமானதாகும். மேலும் இது போன்ற ஒரு பூரணமான கற்றல் சூழல் எல்லாப் பிள்ளைகளினுடைய தேவைகளையும் நிறைவேற்றுவதற்கும், ஒவ்வொரு பிள்ளைகளினுடைய வளர்ச்சி மட்டத்திற்குப் பொருத்தமான பொருட்களை வழங்குவதற்கும் காரணமாவதுண்டு.

வெளியக விளையாட்டுப் பிரதேசமொன்றின் பெறுமதியானது நீண்ட காலமாக உணரப்பட்டுள்ளது.

ஒரு வெளியக விளையாட்டுப் பிரதேசம் பிரதான அங்கமாவதால் கற்பது இலகுவாகும். பிரதானமாகப் பிள்ளைகளுக்குச் சுதந்திரமாக விளையாடுவதற்குப் போதுமான இடம் இருக்குமெனில் பிள்ளைகளுடைய பாதுகாப்பைப் பேணமுடியும். விசேடமாக மரங்கள் இருக்கும் பிரதேசம் ஒன்றில், புற்கள் இருக்கும் பிரதேசமொன்றில், சிறு காடுகள் இருக்கும் பிரதேசமொன்றில் பிள்ளைகளுக்கு “ஒழித்து விளையாடுதல்” செய்வதற்கு முடியுமான விதத்தில் அந்தச் சுதந்திரம் இருக்க வேண்டும்.

விளையாடுவதால் கிடைக்கும் அனுபவங்களுக்கு மேலதிகமாக வெளிப் பிரதேசமொன்றில் தமது சுயாதீன சூழல் பற்றி விளக்கம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி இருக்க வேண்டும். வெளியக, வீட்டு வசதியுடனான பௌதீக சூழல் ஒழுங்கமைப்பு முன்பள்ளி ஊடாகத் திறமைகளைப் பெற்றுக் கொள்ள உதவுவதற்கு முக்கியமான பங்கினை நிறைவேற்றுகிறது எனினும் திட்டமிடப்பட்ட கற்றல் சூழலில் முக்கியமான அங்கம் வளர்ந்தோராவர்.

## வளர்ந்தவர்களுடைய பங்களிப்பு

பெரும்பாலான முன்பள்ளிகளில் வளர்ந்தோர், ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் இருப்பதுடன் ஆகக்கூடியது தகுதிபெற்ற ஒரு முன்பள்ளி ஆசிரியையாவது இருப்பதுடன் அதற்கு மேலதிகமாகப் பெற்றார்களும் உதவியாக இருப்பர்.
ஏதாவதொரு முன்பள்ளியின் திட்டமிடலையும் ஒழுங்கமைப்பையும் தீர்மானிப்பதிலே முன்பாடசாலை நோக்கங்கள், குறிக்கோள்கள் இப்பருவத்திலே பிள்ளைகளினுடைய கல்வியை முன்னேற்றுவதற்குப் பிள்ளைகளுக்காக மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படும். திறமைகளை மட்டுமன்றி பிள்ளைகள் வாழும் சமுகத்தையும் ஆசிரியர் கவனத்திற் கொள்ள வேண்டும். முன்பள்ளிக் கல்வியிலே முழுமையான நோக்கங்கள் சகல பிள்ளைகள் தொடர்பாகவும் சமமாகும் எனினும் கற்றல் சூழலிலே ஒவ்வொரு பகுதியின் முக்கியத்துவமும் பிள்ளைகளினுடைய சுய தேவைகளுக்கு ஏற்ப வேறுபடுவதுண்டு.

பிள்ளைகளினுடைய திறமைகள் வளரும் வேகம் மாறுபடுவதால், முன்னேற்றம் ஒவ்வொரு

பிள்ளையினுடைய தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் நிகழ்வதற்கு வளர்ந்தோர்கள் வகையாதல் வேண்டும்.

செயற்பாடுகள் பிள்ளைகளினுடைய தனிப்பட்ட ஆற்றல்களுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டியதுடன் பிள்ளைகளினுடைய திறமைகளையும் விளக்கத்தையும் மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடிய விதத்தில் அவற்றைத் திட்டமிட்டிருக்க வேண்டும். பிள்ளைகள் முன்பள்ளிகளிலேயே அன்றாட செயற்பாடுகளைச் செய்து கொண்டு செல்வதுடன் வளர்ந்தவர்களுடைய கடமைப்பாடாக இருக்க வேண்டியது யாதெனில் அனுபவங்கள் வியாபிப்பதற்கும், இறந்த மற்றும் எதிர்கால நிகழ்வுகளுக்கிடையில் ஒரு தொடர்பு ஏறபடுவதற்குக் காரணமாய் அமையக்கூடிய பொருத்தமான உத்திகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் அவர்களுக்கு உதவுவதாகும்.

## பிள்ளைகளின் பாதுகாப்பு

முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளினுடைய விருத்தியும் கல்வியும் பற்றிய நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் போது விசேட அவதானம் செலுத்தவேண்டிய ஓர் அங்கமாக அவர்களுடைய பாதுகாப்பு கருதப்பட வேண்டும். தம்முடைய நடத்தைகள், அல்லது தாம் ஈடுபடும் செயற்பாடுகள் தொடர்பான அறிவோ விளக்கமோ இல்லாத சிறிய பிள்ளைகள் உபயோகிக்கும் பொருட்களையும், ஈடுபடும் செயற்பாடுகளையும் காரணமாகக் கொண்டு அவர்களுடைய உடலுக்கு, அவயங்களுக்கு, இல்லையெனில் உயிருக்கு சேதம் ஏற்பட இடமுண்டு. அவ்வாறு சேதம் ஏற்பட முடியுமான சந்தர்ப்பங்கள் சிலவற்றைப் பின்வருமாறு இனங்கண்டு கொள்ள முடியும்.

- பாவிக்கும் கத்தி, கத்தரிக்கோல் போன்றவற்றால் வெட்டுக் காயங்கள் நிகழ முடியும்.
- முற்றத்திலே தோட்டத்திலே விளையாடும்போது விழுந்து கால்கைகளில் கீறுகள், காயங்கள் நிகழ முடியும்.
- அறியாத காய்வகைகள், பூ வர்க்கங்கள், இலைவகைகளைக் கடிப்பதால் நஞ்சேறுதல் நிகழ முடியும்.
- பாதுகாப்பற்ற மின்சார விசிறிகள், ஆளிகளைக் கையாளுவதால் மின்தாக்கம் நிகழ முடியும்.
- வேறு பிள்ளைகள் கொண்டு வருகின்ற தனக்குப் பரிச்சயமில்லாத உணவுகளை உண்பதாலும் குடிப்பதாலும் வயிற்று வலி, வயிற்று நோவுகள் ஏற்பட முடியும்.
- பாதுகாப்பற்ற வேலிகள், தடுப்புச் சுவர்கள், கிணறுகள் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு ஆபத்துக்கள் ஏற்பட முடியும்.
- அயல் வீடுகளில் வளர்க்கும் கடிநாய்கள், பூனைகள் போன்ற பிராணிகளால் கடிகள் ஏற்பட முடியும்.
- பாடசாலைகள், பாதைகள் ஓரத்திலே (அண்மையிலே) உள்ளதாயின் பிள்ளைகள் பாதைகளின் அண்மைக்குச் செல்லும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டால் எதிர்பாராத ஆபத்துக்கள் ஏற்பட முடியும்.

- செயற்பாடுகளின் மூலம் நடைபெறும் உயர ஏறுதல், பாய்தல், ஊஞ்சல் ஆடுதல் போன்ற விளையாட்டுக்களை விளையாட முடியாமல் பாதிப்புக்கள் நிகழ முடியும்.

- பிள்ளைகளுக்கிடையில் ஏற்படும் சண்டைகள் காரணமாக எதிர்பாராத காயங்கள், கீறல்கள் நிகழ முடியும்.

மேலே காட்டப்பட்டுள்ளவை முன் பிள்ளைப்பருவ பாடசாலையில் பிள்ளைகள் முகங்கொடுக்கக் கூடிய பாதிப்புக்களும் ஆபத்துக்களுமாகும். இவை சில எடுத்துக் காட்டுக்கள் மட்டுமே. இதனைவிட வித்தியாசமான நினைக்க முடியாத நிலைமைகளும் உண்டாவதற்கு இடமுண்டு என்பதனால் மிகவும் கவனமாகவும் ஈடுபாட்டுடனும், தூ ரநோக்குடனும் பாடசாலைச் சூழலை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

கீழே காணப்படுவது அது தொடர்பாகக் கவனத்திற்குட்பட வேண்டிய விடயங்கள் சிலவாகும்.

- ஆசிரியரின் அனுமதி இன்றியும் அவதானிப்பு இன்றியும் கத்தி, கத்தரிக்கோல் போன்ற உபகரணங்களைப் பாவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது. அவ்வாறான ஒரு செயற்பாட்டை எந்நேரமும் ஆசிரியருடைய மேற்பார்வையின் கீழும், அவதானிப்பின் கீழும் நிகழக் கூடியவாறு திட்டமிடுங்கள், ஒழுங்கமையுங்கள்.

- பிள்ளைகள் விளையாடும் பிரதேசத்தை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ளுங்கள். கல், முள் போன்றவை அகற்றிக் கொள்ளுங்கள். பாதுகாப்பற்ற குழிகள், வாய்க்கால்கள் போன்றவற்றை இருப்பின் மூடிக் கொள்ளுங்கள். முடியுமாக இருந்தால் நன்கு சுத்தம் செய்து கொள்ளப்பட்ட புல் வளர்க்கப்பட்ட மைதானம் ஒன்றை விளையாடுவதற்காக ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்திலே இருக்கும் மரஞ்செடி கொடிகள் பற்றி அவதானமாக இருங்கள். அவற்றுடன் நச்சுச் செடி, கொடி வகைகள் இருக்கின்றனவா? என அவதானியுங்கள். தேவையற்ற செடிவகைகள், கொடிவகைகள், பூமரங்கள் இருந்தால் அகற்றிக் கொள்ளுங்கள்.

- கட்டிடத்துக்கு மின்சாரம் எடுத்திருந்தால், அங்குள்ள மின் விசிறி, ஆளிகள் போன்றவற்றை நன்றாகச் சோதனை செய்து அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். காலம் பிந்திய, உடைந்த மின்விசிறிகள், ஆளிகள் போன்றவை இருப்பின் உடனடியாக அகற்றி விடுங்கள்.

- உணவைப் பகிர்ந்து கொண்டு உண்பது நல்ல பழக்கமாயினும் தான் கொண்டு வரும் உணவை மட்டும் உண்பதற்கு அவர்களை ஈடுபடுத்துவது மிகவும் பாதுகாப்பானதாகும். அவர்கள் உணவு உண்ணும் போது அவதானமாக இருங்கள்: மேற்பார்வை செய்யுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்திலே வேலியை நன்றாக ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். உடைந்த தடுப்புச் சுவர்கள் இருந்தால் ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். இல்லையெனில் அவற்றை அகற்றி விடுங்கள். பாதுகாப்பற்ற கிணறுகள் இருப்பின் அதனைச் சுற்றிப் பாதுகாப்பான வேலியொன்றை அமைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளுக்கு அந்தப் பக்கமாகச் செல்லாதிருக்க ஆலோசனை கொடுங்கள். பிள்ளைகளுக்கு நீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாற்று வழிகளைக் கையாளுங்கள்.

- அயல் வீடுகளில் வளர்க்கும் பிராணிகளை அண்டி ஆதரவு காட்டுவதற்கு

இடமளிக்காதீர்கள். அது போன்ற பிராணிகள் பாடசாலைச் சூழலுக்கு வருமாயின் அவற்றை வராது தடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

- பாடசாலை நெடுஞ்சாலையொன்றுக்கு அண்மையில் அமைந்திருந்தால் நுழைவாயிலின் மூலம் பாடசாலையையும் நெடுஞ்சாலையையும் வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

- பிள்ளைகள் விளையாடும் போது மேலே ஏறுதல், பாய்தல், ஊஞ்சல் ஆடுதல் போன்றவற்றில் ஈடுபடின் அது போன்ற சந்தர்ப்பங்களில் அவதானமாக இருங்கள்: மேற்பார்வையில் ஈடுபடுங்கள்.

- பிள்ளைகளுக்கிடையில் சண்டைகள் நிகழாது அவர்களுக்கிடையில் நல்ல மனம், நட்பு, கருணை, பிறரை உபசரித்தல் போன்ற குணங்களை விருத்தியுறச் செய்யும் விதத்தில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயினும் அவர்களுடைய நடத்தைகள் பற்றி அவதானமாக இருங்கள்: மேற்பார்வையில் ஈடுபடுங்கள்.

## சுகாதாரமும் சுகநலமும் பற்றிய ஒழுங்குகள்

பிள்ளைகளிடத்தில் நல்ல சுகாதாரப் பழக்கங்களை உண்டு பண்ணுவதற்கும், சுகநலம் பற்றி நல்ல மனப்பாங்கைக் கட்டியெழுப்புவதற்கும் முன்பிள்ளைப் பருவத்திலேயே சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். பிள்ளைகளுக்குச் சிறு பருவத்திலிருந்தே நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் சுகநலம் பற்றிய பழக்கங்களையும் பயிற்சியளிப்பதால் வளர்ந்த பின்பு ஆரோக்கியமுள்ளவராக வாழ்வதற்குத் தேவையான பழக்கம், பயிற்சி, குணநலன்கள், சடங்கு சம்பிரதாயங்கள் போன்றவற்றை விருத்தி செய்ய முடியும். இந்நோக்கங்கள் உள்ள முன்பிள்ளைப்பருவ விருத்தியும் கல்வியும் பற்றிக் கவனத்திற் கொள்ளும் ஒரு பாடசாலை இவ்விடயங்கள் பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டும். அதிலொன்று அவர்களுக்கு நல்ல சுகாதாரப் பழக்கங்களும் சுகநலத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான இயைபாக்கத்தை மேலோங்கச் செய்வதற்கு உதவும் உபகரணங்களையும் பொருட்களையும் வழங்குவதாகும். அடுத்தது நல்ல சுகாதார, சுகநல பழக்கங்களில் பயிற்சியளிப்பதாகும்.

## பாடசாலை மூலமாகத் தயாரிக்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

- வெட்டு, கீறல் ஏற்படும் போது உபயோகிக்கும் முகமாகத் தேவையான மருந்துகளடங்கிய ஒரு முதலுதவிப் பெட்டி.
- பிள்ளைகளுக்குப் பாவிப்பதற்குப் பொருத்தமான சுத்தமான ஒரு மல கூடமும் ஒரு சல கூடமும்.
- போதுமான நீர் விநியோக முறை.
- பிள்ளைகளுக்கு உணவு உட்கொள்ளும் முகமாகப் பொருத்தமானதும் சுத்தமானதுமான ஓர் இடம்.
- கழிவுப் பொருட்கள், உணவு மீதிகள் போன்றவற்றை இடுவதற்கான ஒரு பாத்திரம்.

## மேலோங்கச் செய்ய வேண்டிய சுகாதார சுக நலப் பழக்கங்கள்

- நாள்தோறும் பாடசாலை ஆரம்பிக்கும் போது பிள்ளைகளினுடைய பற்கள், நகங்கள்

சுத்தம் பற்றி அவதானியுங்கள். ஆடையணிகளின் சுத்தத்தைக் கவனியுங்கள். தலையை முறையாகச் வாரியுள்ளனரா? எனக் கவனியுங்கள். இவைபற்றி நிரந்தரமாக அவதானிக்கும் போது பிள்ளைகளிடத்திலும் பெற்றார்களிடத்திலும் அவைபற்றிய சிறந்த புனர்ஜீவ மனப்பாங்கு உதயமாகும்.

- உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவிக் கொள்வதில் ஈடுபடுத்துங்கள். அவ்வாறே உணவருந்தும் போது செய்ய வேண்டிய ஒழுங்கு முறைகளை மேலோங்கச் செய்யுங்கள்.

- மலசல கூடங்களைப் பாவிப்பதில் நல்ல பழக்கங்களை ஏற்படுத்துங்கள். மலசலகூடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்பதையும், வைத்திருக்கும் முறைகள் பற்றியும் விளக்கங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். அது பற்றிய ஒழுங்குகளை மேலோங்கச் செய்யுங்கள்.

- எந்நேரமும் தடிமனுள்ள பிள்ளைகளிடத்திலும், எந்நேரமும் மூக்கை அசுத்தமாக்கிக்கொண்டு இருக்கும் பிள்ளைகள் இருப்பின் அவர்களிடத்திலும் கைக்குட்டையொன்றைப் பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். கைக்குட்டை பாவிக்கும் பழக்கத்தை சகல பிள்ளைகளிடத்திலும் வளர்ப்பது பிழையல்ல.